# பவளக் கலசம்

கலாபூஷணம் கவிஞர்


புத்தூர் வே. இளையகுட்டி அவர்களின்

## பவள விழா மலர்

## 2012



25.08.2012



# பவளக் கலசம்

கலாபூஷணம், கவிஞர்

புத்தூர் வே. இளையகுட்டி

அவர்களின்

பவளவிழா மலர் - 2012

# பவளவிழாக்காணும் மூத்த கவிஞர்

எமது சமூகத்தில் ஆசிரியப்பணியில் ஈடுபட்டவர்கள் தத்தம் ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் கல்வித்துறையில் தமது மேலான பணியினை ஆற்றியுள்ளனர். இன்னும் சிலர் கல்விப்பணியுடன் இலக்கிய ஊழியத்திலும் சமகாலத்தில் ஈடுபாடுகொண்டு உழைப்பவரும் உளர். இத்தகையவர். இவர்கள் எண்ணிக்கையில் மிகச்சிலரேயாவர். அத்தகையவர்களுள் ஒருவர் புத்தூர் வே. இளைய குட்டி என்ற புனைபெயரில் இயங்கும் திரு.வே. இளையகுட்டி ஆசிரியர் அவர்களாவார்.

இவர் ஆசிரியத்துவத்துக்குரிய பல்பரிமாண நடிபங்குகளையும் எமது சமூகத்திற்கு ஆற்றியவர். நல்ல ஒரு ஆசிரியனாக சமூக ஆர்வலராக, விளையாட்டு வீரனாக, ஆன்மீகப் பற்றாளராக, குடும்பத் தலைவனாக, திறன்மிகு கவிஞனாக எனப்பன்முக ஆளுமை கொண்ட சமூகமனிதனாக எம்முடன் வாழ்ந்துவருகிறார்.

இத்தகைய பன்முகத் திறனுள்ள *(Multi Faceted Talent)* பெரியார் தமது எழுபத்தைந்தாவது அகவையைப் பூர்த்திசெய்துள்ளார். இதனால் அவரது குடும்பத்தினரும், ஊரவர்களும், நண்பர்களும் அவரைக்கௌரவித்து,

> "அரியவற்று எல்லாம் அரிதே பெரியாரைப்
> பேணித்தமராகக் கொளல்"

- என்ற வள்ளுவரின்கூற்றுக்கிணங்க, பவளவிழா" எடுக்கின்றனர். அதனையொட்டி, அவர் தம் பெருமைகளைப் பகரும் "பவளக் கலசம்" என்றமகுடத்தில் இந்த சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது.

இம்மலரின் துறைசார்ந்த, அறிஞர்கள், பெரியோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மற்றும் அவரது மாணவர்கள் என பல்வகையினரும் அவர் பற்றிய சிறப்புக்களை வாழ்த்துரைகளாகவும், கட்டுரைகளாகவும் சொல்ஆரமாக கலசத்தில் பதித்துள்ளனர். அத்துடன் இம்மலரின் இன்னொரு மேன்மை, அவரது ஆக்கங்களைத் தாங்கிவரும் கவிதைக் கலசமாகவும் வெளிவருகின்றமையாகும். இது 'சமூகக் கவிக்கடன்' என்ற அவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பினையும் உள்ளக்கியுள்ளது. அவ்வகையில் பகுதி பகுதயாக நாம் அவ்வப்போது, பத்திரிகைகள், சஞ்சிகைகள், இறுவட்டுக்களில் கண்டு நயந்து வியந்த புத்தூர் வே. இளையகுட்டி அவர்களை முழுமையாக இம்மலரில் தரிசிக்க முடியுமென நம்புகின்றேன். அவரது முதலாவது கவிதைத் தொகுதி "ஆண்பாவம்" என்ற பெயரில் **2001** இல் வெளிவந்து இலக்கிய உலகின் பாராட்டுக்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பெரியார் எழுத்துப் பணியில் இருபத்தைந்தாண்டுகள் கால்பதித்து காலத்துக்கேற்ற புதுமையும் பழமையும் பொலிவும் குன்றாமல் கவிதைகள் எழுதிவருபவர். கவிதை படைப்பாற்றல் - என்பது எல்லோருக்கும் சித்திப்பதன்று. பல்லாயிரவருள் ஒருவருக்கே

இது சாலும் முதுமையில்கவிதாஞானம் பெற்ற முழுநிறை அனுபவக் கவிஞர் இவர். கருவிலே வாய்த்த திருவை வளர்த்துககொள்ள தமக்குக்கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் அவர் சமூகநலன் நோக்கில் பணியாற்றியவர். அதுவே அவரது படைப்பாளுமைக்குக் காரணமாகியது.

இவரது கவிதைகள் வாசகனுக்கு நல்ல சகானுபவத்தைத் தருவன. சௌந்தார்ய சக்தி மிக்கவை. கவிதைக்குரிய வீச்சும், எளிமையும், வியாபிக்கும் ஆற்றலும் கொண்டவை. அவரது கவிதைகளில் பயிலும் சொல்லாட்சியும், உள்ளடக்கமும் சிறப்பானது. அவை, சமூகம், அரசியல், ஆன்மீகம் எனப்பலவிடயங்களையும் சாரமாகக் கொண்டவை. சமூகம் குறித்த சீர்திருத்தக் கருத்துக்களை எள்ளலுடன் சுவைபட இயம்பும் ஆற்றலுடையவர். அதற்கு இத் தொகுதியில் இடம்பெறுகின்ற, 'யாரோ இவர் யாரோ', 'எழுவீர் மீண்டும் துயில்வீர்', 'நன்று தூங்கும்" என்பவை சான்றுபகரும்.

"எண்சாண் உடம்பை இருசாண் ஆக்கி
கூனிக்குறுகி கும்பிடு போடுகிறார்
கொட்டிலில் நுழைகின்றார், 'கூழுண்டா' என்கிறார்
கட்டியணைத் தெமக்காய் கண்ணீர் வடிக்கின்றார்"

இவை தேர்தல் காலங்களில் எம்மை ஏய்க்க வருகின்ற வேட்பாளர்களின் போலி முகங்களை இனங்காட்டிடும் எச்சரிக்கைக் கவிதைகளாகவும் என்றும் உள்ளன. தேர்தல் கால வேடிக்கைகள், போலித்தனங்களை அழகியல் நேர்த்தியுடன் கூறும் யதார்த்தக் கவிதைகள் இவை.

இன்னொரு கவிதை கவிஞரின் இலக்கிய நோக்கினை எடுத்தியம்புகிறது. பேராதனைப் பல்கலைக்கழகம் நடாத்திய பவளவிழா கவிதைப் போட்டியில் சிறப்புப்பரிசு பெற்ற கவிதை இது. இதுவே தொகுப்பின் தலைப்பாகவும் உள்ளது. இக்கவிதையில் கவிஞரின் ஆதங்கம் வெளிப்படுகிறது.

நிலவினையும், நீள்விழியாள் எழிலினையும், காதல் மொழியினையும் விடுத்து சமூகத்தின் அவலங்களைப் பாடுவோம் என அறைகூவல் விடுக்கின்றார்.

"நாளைய சமூகந்தன்னை தாங்கிடும் தூணாம் பேனா;
தாளெனும் பூமிகீறும் ஏரதாம் உந்தன் பேனா;
ஆழமாய் வேர்பதித்த அவலங்கள் களையும் பேனா;
வாளதின் மேலாய்க்கூர்மை வாய்ந்தது உன் பேனா;

கவிஞர் புத்தூர் வே. இளையகுட்டி அவர்கள் இத்தொகுப்பில் தனது வாழ்வியல் அனுபவங்களை நெருங்கிநின்றும், எட்டநின்றும், நேரடியாகவும், மறைமுகமாகவும், உணர்ச்சியூட்டியும், குறிப்பால் உணர்த்தியும் பல கவிதைகளைப் படைத்துள்ளார். அவற்றில் கலை அழகும், புத்தாக்கமும் வெளிப்படுகின்றன. இவரின் மரபின் மீதான ஈடுபாட்டை 'ஆவரங்கால் மான்மியம்', 'செம்புல நங்கையை என்றுமே வாழ்த்துவம்', 'எங்ஙனம் மனிதம் வாழும்' என்ற கவிதைகளில் அனுபவிக்கமுடியும்.

ஆவரங்கால் மான்மியம்' என்ற கவிதையின் சில வரிகள்

"மருத நில வளமெழுத கவிஞர்பலர் கருதிவரும்
அழகுநிறை அரும்பதியெம் ஆவரங்கால்
உருகு வெயில் உச்சியிலும் உழைப்பதுவே குறியான
உழவர் மலி திருவுறையும் பெருவூரிது"

இவைமட்டுமல்ல, கவிஞரின் கவித்திறனுக்கு இன்னொரு எடுத்துக்காட்டு, தனது குலதெய்வமாம் மணற்பகுதி புவனேஸ்வரி அம்பாள் மீது பாடிய பாமாலைகள் ஆகும். இவை தென்னிந்திய இசைக்கலைஞரும், புரட்சிக்கவி பாரதியாரின் கொள்ளுப் பேரனுமான ராஜ்குமார் பாரதியினால் இசையமைக்கப்பட்டு, ஈழத்தின் பிரபல கர்நாடகசங்கீத இசைக்கலைஞர் சி.பத்மலிங்கம் அவர்களால் பாடப்பெற்ற பெருமைக்குரியவை. இக்காலக் கவிஞர்கள் பெரிதும் அஞ்சுகின்ற தெய்வீகம், சமயதத்துவம், ஆகிய விடயங்களில் இக்கவிதைப் பயிர்விளைத்து, நல்ல கவிமணிகளைத் திரட்டி அவரால் வழங்கமுடிந்தது.

'நிலவளம் நீர்வளம் நிறைந்த புதுவைதனில்
அருள் மழை பொழியும் எங்கள் அன்னை புவனேஸ்வரி
கரமொன்று வரம் தரும் காக்கும் அபயகரம்
பரிவுகம் எம்மை பாசத்துடன் அணைக்கும்"

இப்பாடல்களால் ஆன்மீக அருள்பாலிக்கும் தெய்வமாக அம்பாளைப் போற்றுகிறார் கவிஞர்.

இவரது கவிதை ஆற்றலைக் கௌரவித்து **2011** இல் இலங்கை கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' என்ற விருதினை இலக்கியத்துறையில் வழங்கியமை எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இத்தகைய சிறப்புக்களையும் ஆற்றல்களையும் கொண்ட கலாபூஷணம் கவிஞர் வே.இளையகுட்டி தனது பவளவிழாவினைக் காண்பதற்கு பூரண தகைமை பெற்றவர். அவரது நண்பர்களும் ஊரவர்களும், அன்பர்களும் அவரை வாழ்த்துகின்றனர். விழாக் காண்கின்றனர்.


பவளவிழா நாயகர் புத்தூர் வே.இளையகுட்டி அவர்கள் நூற்றாண்டு வாழ்ந்து சமூகத்துக்கும், கவிதை இலக்கியத்துக்கும் பணியாற்றி அவர் தம் குடும்பத்தினருடன் இன்புற்று வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**-மு.இராசநாயகம் (அநாதரட்சகன்) -**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

**மலரின் தொகுப்பாளர்**

## இயல் - 01

# வாழ்த்தியல்



# யா/வடமராட்சி
## அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

துன்னாலை - புலோலி, பருத்தித்துறை

பிரதம குருவினது நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும்

-அவனருளாலே அவன் தாழ்வணங்கி -

**எ**ல்லாமே வல்ல ஸ்ரீ வல்லிபுர மாயவன் தாழ் பணிந்து அள்ள அள்ளக் குறைவுபடாத செல்வம் கல்வியாகும் "கல்வியைப்போல செல்வமுளதோ காண வேண்டும் புவியோரே" என்றொரு பாடலுமுண்டு. மாணவமணிகளுக்கு கல்விச் செல்வத்தை வாரி வழங்கிய பெருந்தகை ஓய்வு பெற்ற ஆசிரியர், கலாபூஷணம், புத்தூர், வே. இளையகுட்டி அவர்கள்.

இலக்கிய நயம் மிக்க கவிதைகள் பலவும் புனைந்து பல பத்திரிகைகள் வாயிலா மக்களின் மனதினில் நல்லதொரு இடம்பிடித்தவர், குறிப்பாக யாழ் மண்ணில் வெளிவருகின்ற பிரதான பத்திரிகைகளில் இவரது கவிதை என்றால் அதி முக்கியத்துவம் கொடுத்து வெளிவரும் தெள்ளத் தெளிவான சிந்தனையுடன் சுவை மிகுந்த கவிதைகளாக இவரது கவிதைகள் அமைந்திருப்பது தமிழுக்கும் தமிழனத்திற்கும் பெருமை சேர்ப்பதாகும்.

மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் மீது பக்திரசம் மிகுந்த கவிதைகள் புனைந்து அதனை இறுவெட்டாக வெளியிட்டு அனைவரும் கேட்டு ரசித்து பக்தி மயம் தழைக்க வைத்த பெருமைக்குரியவர். ஆளுநர் விருது, மற்றும் கலாபூஷணம் போன்ற பலரும் போற்றுகின்ற விருதுகள் பெற்ற மாபெரும் கலைஞர் இவர்.

மேலும் பல விருதுகளையும் பெறத்தகுதியான கவிஞர் என்றால் மிகையாகாது. இன்று பவளவிழாக் கொண்டாடும் இனிய குணாதிசியமும், பண்பாடும், பெருந்தன்மையம் நல்லதொரு குடும்பத்தினையும் கொண்டமைந்தவரான கலாபூஷணம் புத்தூர் வே. இளையகுட்டி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் சுகமாகவும் சுபீட்சமாக வாழவும், இலக்கியத்துறையில் பல்வேறு சேவைகள் செய்யவும், மேன்மேலும் இவரது பணிசிறக்கவும், எல்லாவம் வல்ல ஸ்ரீ வல்லிபுரசக்கரமாயவனின் தாழ்பணிந்து மாயவனது நல்லவாசிகளையும், எமது நல்வாழ்த்துக்களையும் மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ ஆழ்வார் பீடம்,
ஸ்ரீ வல்லிபுரக்கோவில்
புலோலி, பருத்தித்துறை.

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு J.P
பிரதம குரு
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்,
துன்னாலை புலோலி.

லயன் இ.சிவஞானம்
சமதான நீதவான் (அகில இலங்கை)
பதிவு இல: 03/12/வ.கி/தீமு/538
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்

Lion.E.Sivananam
Justice of tha peaco (Whole Island)
Regd.No. 03/12/NE/WI/538
AVARANGAL EAST,
PUTTUR.



# நீர் நிலைகள் காய்வதில்லை நெல் மணிகள் ஓய்வதில்லை

இவை எனது இதயம் அசைபோடும் சிலவரிகளாகும். இந்த இரண்டு வரிகளும் புதுவையின் நீர்வளம், நிலவளம், ஏர் வளம், எழில் வளம் என்பன தெரிவிக்கும் கனதியான வரிகளாகும். ஏனையவை அன்னை ஸ்ரீபுவனேஸ்வரியின் புகழ் மணக்கும் கவிதைகளாகும். புதுவைக் கவிஞர் திரு.வே. இளையகுட்டி ஆசிரியர் அவர்களை எமது பரிபாலனசபையும், கிராமமக்களும் சேர்ந்து மகாகும்பாபிஷேகத்தையொட்டி புவனேஸ்வரியைப் புகழ்ந்துரைக்கும் கவிதைத் தொகுப்புக்களை ஆக்கித்தருமாறு வேண்டி நின்றபோது கவிஞரும் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டார்.

எமது வேண்டுதல்கள் சிலநாட்களில் கவிதை உருவம் பெற்றன. அக் கவிதைகள் சங்கீத பூஷணம் திரு. சி. பத்மலிங்கம் அவர்கள் கைகளுக்குச் சென்ற பின்னர் தென்கை இசைக்கலைஞரும் சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரனுமாகிய திரு.ராஜ்குமார் பாரதி அவர்களின் இசையமைப்பில் திரு. பத மலிங்கம், மகன் ப. வசந்தன் மகள் ஜெயகீதா, மலையாளப் பாடகி செல்வி சியாமா ஆகியோரின் இனிய குரல்களில் இரண்டு இறுவெட்டுக்களாக உருவம் பெற்றன.

இந்த இறுவெட்டுகள் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் மகாகும்பாபிஷேகத்தின் போது சிறப்பான முறையில் வெளியிடப்பட்டன. வெளியீட்டு விழாவின் போது தென்கை இசையமைப்பாளர் திரு. ராஜ்குமார் பாரதியவர்கள், சந்தம், எளிமை, சொற்சுவை, பொருட்சுவை, நிரம்பிய கவிஞரின் கவிதைகளைத் தென்கைக் கவிஞர்களாலும் இப்படி எழுத முடியாதெனப் பாராட்டித் தொலைநகல் அனுப்பியிருந்தார். மேலும் வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு கவித்துவர் சிறப்புகளைப்பாராட்டி யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.சண்முகலிங்கன், சட்டத்துறைபீடாதிபதி திரு.த.கலாமணி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள் திரு.லலீசன், திரு.செ. திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர். ஆய்வுரைகளை பொன் மகாதேவர் அவர்களும் சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன் அவர்களும் நிகழ்த்தினர். மதிப்புரை கவிஞன் கோ. பத்மநாதன் அவர்கள் வழங்கினார். பராட்டுரையைக் கோப்பாய் பிரதேச செயலர் திரு.சி.எ. மோகன்ராஜ் அவர்களும் வாழ்த்துரையை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் பிரதம குரு திரு.நாக. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களும் வழங்கிச் சிறப்பித்தனர்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை வீதியுலாச் செல்லும்போது கவிஞரின் ஆக்கத்தில் உருவான பஜனைப்பாடல்களையும், பாமாலைகளையும் அடியார்கள் வயது வேறுபாடின்றி இசைத்துவரும் காட்சி அனைவரையும் மெய் மறுக்கச் செய்துவிடும். அப்பாடல்களில் ஒன்றை தருகின்றேன்.

"புதுவை மணற்பகுதி வீற்றிருந்து
புவனம் புரக்கும் அன்னை புவனேஸ்வரி
அருமைபெருமைதனை அவனியெல்லாம்
இனிமை குழைத் தொழுக பாடுகுயிலே"

இப்பாடல் களைத் தானே இசையமைத்து அடியார்களுடன் சேர்ந்து பாடி வருவார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆலயத்துடன் நின்று விடாது கோப்பாய்க் கோட்ட மட்டத்திலே பாடசாலைகளுக்கிடையே சமய பண்ணிசைப் போட்டிகளை நடாத்துவதற்கு முன்வந்து எமது பரிபாலன சபையின் கவனத்தில் வைத்தார். பரிபாலன சபையும் முழு அனுசரணைகளையும் வழங்கியது. சமயப் பற்றுள்ள பல ஆசிரியர்களைத் தாமே தேர்வு செய்து சமயப்போட்டிகளையும் இலங்கை வானொலிபுகழ்பெற்ற பாடகர்களை மத்தியஸ்தர்களாக நியமித்துப் பண்ணிசைப் போட்டிகளையும் சிறந்தமுறையில் நடாத்தி ஆலயத்தின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் உந்துசக்தியாக அமைந்தார்.

கும்பாபிஷேக காலத்தில் மாலை வேளைகளில் ஆலயத்தில் நடைபெறும் சமயச் சொற்பொழிவுகளுக்கும் கர்நாடக இசைநிகழ்ச்சிகளுக்கும் உரிய ஒழுங்கைத் தாமே மேற்கொண்டு தலைமை தாங்கிச் சிறப்புற வழிநடாத்திப் பெருமை சேர்த்தமையை எம்மால் மறக்கமுடியாது. இராணுவ நடவடிக்கைகளின் போது முழுமையாகச் சேதமடைந்த எமது ஆலயத்தைப் புதியதாக நிர்மாணம் செய்தபோது தினசரி ஆலயத்தில் நடைபெறும் இளைஞர்களின் சிரமாதானப் பணிகளின்போது கவிஞர் அவர்களும் தனது முதுமையையும் புறந்தள்ளி இளைஞர்களுக்கு நிகராக தனது உழைப்பை வழங்கியது மட்டுமல்லாமல் தேவையான நேரங்களிலெல்லாம் தமது வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி பரிபாலனசபையை வழிநடாத்திச் சென்ற பெருமைக்குரியவர் கவிஞரே என்றால் மிகையாகாது. அம்பிகை மீது பாடப்பட்ட பாமாலையின் இறு வெட்டுக்களை உலகின் நாலாதிசைகளிலும் பரவியிருக்கும் தமிழ் உள்ளங்களுக்கெல்லாம் நாம் அனுப்பியிருந்தபோது கவிஞருக்கு அங்கிருந்து கிடைத்த பாராட்டுகளோ எண்ணிலடங்காது. ஏராளம்! ஏராளம்!!

கவிஞருடைய இரண்டாவது இறுவட்டு வெளியீட்டின்போது எமது ஆலயத்தின் பிரதமகுரு திரு. நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் பாராட்டுரை வாழ்த்துரைகளை வழங்கிக் கவிஞரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமையும், கோப்பாய் அப்போதய உதவி அரசாங்க அதிபர் திரு. C.A மோகன் ராஜ் அவர்கள் சிறப்புரை வழங்கிப் பொன்னாடை போர்த்தியமையும் எம்மால் மறக்க முடியாது. இலங்கை அரசினால் இவருக்கு வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களுக்கும், கவிஞர்களும், அறிஞர்களும் போற்றுகின்ற புகழ்மழைக்கும் மேலாக இவர் நாவினிலே கலைமகள் அமர்ந்து நர்த்தமை புரிந்து கவிஞர் தம் இதய ஓடையின் ஊற்றெடுக்கின்ற கவிதைகள் அருவியாக ஓடவேண்டும் என்று மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையை வேண்டுகின்றேன்.

மணற்பகுதி
புத்தூர்

இ. சிவஞானம்
கும்பாபிஷேக காலத் தலைவர்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்.



# சக ஆசிரியரின் பார்வையில்.....

திரு.வே. இளையகுட்டி ஆசிரியர் அவர்கள் என்னுடன் புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரியில் 1992 இல் இருந்து சக ஆசிரியராகப் பணியாற்றிய இனிய நினைவுகள் இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கின்றன.

மதிப்புக்குரிய திரு. வே. இளையகுட்டி ஆசிரியராக யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் சேவையாற்றத் தொடங்கிய காலத்தில் யா/சோமஸ்கந்தக் கல்லூரி உயர் தர வகுப்பு மாணவனாகவோ, பேராதனைப்பல்கலைக்கழக மாணவனாகவோ இருந்திருப்பேன். அவரது இறுதிச் சேவைக்காலத்தில் உடன் ஆசிரியராக இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை யிட்டுப் பெருமைப்படுகிறேன்.

"காட்சிக்கு எளியர் கடுஞ்சொல்லர் அல்லரேல், மீக்கூறும் மன்னன் நிலம்" என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கூற்று. திரு. இளைய குட்டி ஆசிரியரும் எப்போதும் சிரித்தமுகம் எளிமையான கோலம், பிறர் நகைச்சுவையாகப் பேசும்போது அதனை இரசிக்கவும் செய்யும் சுபாவம், மாணவரோடு அன்பாகப் பழகி, அதிகம் அடிதடி வன்முறைகள், வெருட்டல்களுக்கு போகாமல் இயல்பாகவே அவர்களைக் கவர்ந்தழுக்கக் கூடிய ஆற்றலும் திறமையும் கொண்டவராகக் காணப்பட்டார். பொதுவாக இத்தகைய ஆசிரியர்களை அதுவும் பழைய பரம்பரையைச் சேர்ந்தவர்களில் இத்தகைய பொறுமையான கண்ணியமான ஆசிரியத்துவ ஆளுமை உள்ள வர்களைக் காண்பது கடினம்.

மாணவர்கள் எதிர்விவாதம் செய்யும் சந்தர்ப்பங்களில் கொதிப்பும் கோபமும் கொண்டு மிரட்டும் பழைய பண்டித வித்துவான்களுக்கோ அல்லது பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கோ கூட இல்லாத இனிய சுபாவம் உளவியல் ரீதியான அணுகுமுறை, மாணவர்களை அணைத்துக்கதை சொல்லிப் புத்தி புகட்டும் சிறப்பான ஆளுமை இவரிடம் பாராட்டப் படவேண்டிய சிறப்பம்சமாகும்.

பாடசாலை மேடைகளில் எனது சமூக சீர்திருத்தம் கலந்த குறு நாடகங்கள் மேடையேற்றப்படும்போது அதனை ரசித்துப் பாராட்டி வாழ்த்துக்களும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் கூறி நிற்கும் எனது நண்பன் திரு. இளையகுட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் நடைபெற்ற பல்வேறு கவியரங்குகளில் தனித்துவ கவிதை நயத்தை வெளிப்படுத்தியவர். முதல்முதல் எனது தலைமையில் பாடசாலைக் கவியரங்கில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுத்த போது மிகத்தயக்கத்துடன் அதில் பங்கேற்றார். எனது பாராட்டுக்

களோடு தமது ஆற்றலை உணரத் தொடங்கிய இளையகுட்டி ஆசிரியர் உதயன் சஞ்சீவி போன்ற பத்திரிகைகளிலும் எழுதத் தொடங்கி இன்று நாடறிந்த நல்ல கவிஞராக வளர்ந்துள்ளார். பல பாராட்டும் பரிசில்களும் மாகாண தேசிய விருதுகளும் கலாபூஷணப்பட்டமும் பெற்றுக் கொண்டமை அவரோடு இணைந்து பணியாற்றிய எமது கல் விச்சமூகத்திற்கு பெரிதும் பெருமையைத் தருகின்றது.

திரு,வே. இளையகுட்டி ஆசிரியரவர்கள் நல்ல தமிழ் ஆசிரியர் நாட றிந்த நல்ல கவிஞர் மட்டுமல்ல. மாணவர்களுக்கு நல்ல கலை நிகழ்ச் சிகளை யும் பயிற்றி மேடையேற்றிய அரிய கலைஞர் என்பதும் எனது ஞாபகத்தில் மறக்க முடியாதவை. பாடசாலைப் பரிசளிப்பு விழாவின் போது மாண விகள் வேப்பிலை நடனத்துடன் ஆடிய கிராமியக் கூத்து இன்றும் என் மனக் கண்முன் நிற்கிறது. அவர் பாராட்டுதற்குரியவர். திறமையுள்ள கலைஞர் என்பதற்கு அந்த நிகழ்ச்சி ஒன்றே போதும். அவர் அந்தத் துறையில் மேலும் இறங்கி முழுநேர முயற்சி செய்திருப்பாராயின் பெரிய அண்ணாவியராகி பல நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றி யிருப்பார்.

பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞர் அமரர் கலாபூஷணம் மெட் ராஸ் மெயில் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் படித்தவர் என்பதும் எமக்கு பெருமைதரும் விடயமாகும்.

பெற்றார் என்ற வகையிலும் நான் திரு.வே. இளையகுட்டி ஆசிரி யர் அவர்களுக்கு கடப்பாடுடையவன். எனது மகள் கமலச் செல்வி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயின்று சிறப்புக் கலை மாணி சமூகவியற் பட்டம் பெற்றுள்ளார். மகள் ஐந்தாம் ஆண்டு புலமை ப்பரிசில் பரீட்சையிலும் தன்னை வளப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆற்றல் களை வழங்கித்தூண்டு கோல்களாகச் செயற்பட்ட திரு,வே. இளைய குட்டி ஆசிரியரும், திருமதி தாமோதரம்பிள்ளை ஆசிரியரும் என்றும் மறக்க முடியாதவர்கள். பல்கலைக் கழகத்திற்கு தெரிவானது அறிந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களையும் வழங்கிய அந்த ஆசிரியப் பெருந் தகைகட்கு எனது நன்றிகள் உரித்தாகும்.

தனது எழுபத்தைந்தாவது வயதில் பவளவிழாக் காணும் சந்தர்ப் பத்தில் அவருக்கு எண்ணிய எண்ணியபடி நடப்பதற்கான வரத்தையும், ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வரியத்தையும் அவரது கவிதைப் பாணியும் தமி ழ்ப் பாணி யும் மென்மேலும் சிறந்து வளரவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சோமஸ் கந்தப் பெருமான் அருட்கடாட்சம் வழங்க வேண்டுமென மனதாரப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

செ.விசுவலிங்கம்
தமிழ் ஆசிரிய ஆலோசகர் (ஓய்வுநிலை).
யாழ்வலயம்.



# பேறாகும் பவளவிழா

புவிகாண் புலமையும் பதிவாகிய பாடலும்
தெவிட்டாது செவிவார்க்கும் தேனாக - கவிஞன்
புத்தூரின் புதல்வன் புகழ்இளைய குட்டி ஐயா!
வித்தகனே நாவார வாழ்த்து.

சிலாகித்துப் பேசவல்ல சிந்தை பெரியோன்
நிலாவின் ஒளிபோன்ற நல்லசான் - கலாபூஷணம்
விருது பெற்ற வியத்தகு கலைஞன்
பெருமையாய் பவளவிழா பெறுக!

நிலமது பசுமையும் நெல்வயலும் பயிர்வளமும்
நிதமருள் ஆலயமும் நற்கல்விக் கூடமும்
புலம்காண் மொழியறிவும் பெற்றவுயர் மாணவனாய்
புகழ்பெறு கல்விதரும் பல்கலை ஆசானே
தலமொளிர் புவனேஸ்வரி தரும்தூய பாடல்கள்
தரும்கீதம் பக்தருளம் தேனாக செவிதந்தாய்
துலங்கிடும் கவிநூறு திக்கெங்கும் பெருகவே
திருநாளாம் பவளவிழா தருமின்பம் தகுமே

தேடலும் உளத்தினில் தேக்கிய பாக்களும்
தம்கரம் தூக்கிய தகுஎழுது கோலும்
பாடலின் நயமும் பாங்குயர் நெறியும்
பேறாகும் கலாபூஷணம் பேருவகை விருதுடன்
ஈடற்ற ஊற்றாகும் அம்பாளின் ஈகைதனை
ஊனுருகி யாத்திட்ட இணையற்ற இறைகீதம்
நாடறியும் வித்தகனே நலமோடு நூறாண்டு
நின்றுளம் கவிவார்க்கும் வாழிய வாழியவே!

றோஸ்பவனம்
அல்வாய்

என்றும் அன்புடன்
கலைப்பரிதி கே. ஆர். திருத்துவராசா



# தமிழ் பேராசானுக்கு நல்வாழ்த்து

நல்லாசிரியர், நல்ல கவிஞர், நல்ல எழுத்தாளர் ஒருவரின் பவள விழாவில் அவரின் மாணவனாகிய நான் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எனது பாடசாலை நாள் களில் தமிழ்கற்றுத்தந்த நல்லாசிரியர் கலாபூஷணம் புத்தூர் வே. இளையகுட்டி அவர்களின் அன்பும் பண்பும் நிறைந்த கற்பித்த முறைகள் என்றும் மனதில் பசுமையாக இருக்கின்றது எனது ஆசான் கலைப் பங்களிப் பிற்காகக் கலாபூஷணம் விருதைப்பெற்ற போது மாணவர்களாகிய நாம் மிக்க மகிழ்வடைந்தோம்.

கவியரங்கம் பலவற்றில் தலைமைக் கவிஞராக இருந்து அவர் கவிதைகளால் தமிழுக்கு அழகு அணி செய்த போது நானும் எனது ஆசான் இவர் எனப் பெருமையுடன் ரசிப்பேன்.

உதயன் நாளிதழின் வெள்ளி விழா நிறைவை முன்னிட்டு நடாத்திய கவிதைப்போட்டியில் முதலாம் பரிசைப் பெற்று விருதுகளும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டபோது மாணவனாகிய நான் எனக்கு பரிசில் கிடைத்தது போல மகிழ்ந்தேன்.

தமிழ் மொழியை ஆழமாக அகலமாகக் கற்று எமக்கு கற்பித்த நல்ல தலை முறை ஒன்றின் வழிவந்தவர் இவர். தமிழ் ஆசிரியருக்கு அடையாளமாக வெள்ளை நிறத்திலான வேட்டி நசனல் ஆகியவற்றுடன் அன்றும் இன் றும் காட்சியளிக்கின்றார்.

தமிழின் மீது தீராதா பற்றுடன் இவர் எப்போதும் இருப்பார். பாடசாலை காலங்களில் தமிழ் மொழியில் பெருமையை அழகை இவர் சொல்லிதந்த விதம் பசுமரத்தாணிபோல மனதிலுள்ளது எழுத்தாளர்களின் ஆக்க இலக்கியப் படைப்புக்களின் வெளியீட்டு விழா எங்கு நிகழ்ந்தாலும் என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசானை அங்கு காணலாம் அந்தளவுக்கு இவருக்கு இலக்கிய நண்பர்கள் எங்கும் உள்ளனர்.

தமிழ் தமிழென தமிழன் பெயராலேயே எல்லா கலைகளையும் கலைஞர்களையும் நேசிக்கும் ஒருவர் தான் கற்பித்த மாணவர்களாகிய எங்களை எங்கு கண்டாலும் தன் பிள்ளையைப்போல நேசித்துக் கதைப்பார், அன்பு பாராட்டுவார்.


திறமைகள் உயர்வாக இருந்தாலும் எளிமையாக பழகும் நல்ல பண் பால் இவர் தமிழ் சமூகத்தில் பலராலும் விரும்பப்படும் ஒருவராக உள்ளார்.

இன்றும் இளைஞன் போல ஓடியாடித் திரியும் இவரது சுறுசுறுப்பைக் கண்டு நான் வியப்பேன். சுறுசுறுப்பில் தேனீயாகவும் நிதானத்தில் ஞானியாகவும் இருக்கும் வே. இளையகுட்டி ஐயாவிற்கு தமிழ் கூறும் நல்லுலகப் பெருமக்கள் பவளவிழா எடுப்பது சாலப்பொரு த்தமானது. நல்லவை செய்து நல்ல மனிதராக வாழும் மாண்பால் போற் றப்படுகின்றார்.

என் தமிழ் ஆசான் உருவாக்கிய எண்ணற்ற மாணவர்களில் ஒருவராக அவர்களின் சார்பில் இப்பெருவிழா மலருக்கு வாழ்த்து வழங்கு வதில் பேரானந்தம் அடைகின்றேன்.

ஐயா நீடுழி காலம் வாழ்ந்து தமிழுக்கும் கலை உலகிற்கும் பெரும்பணியாற்ற இறைவனை வேண்டுகின்றேன். இவரின் புகழ் கல்லில் எழுதிய எழுத்தாக தமிழ் இலக்கிய உலகில் வாழுமென்பது திண்ணம்.

**சு.தி. விமலன் (M.A)**
**அகில இலங்கை சமாதான நீதவான்**
**ம்னித உரிமைகள் பாதுகாவலர்**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**



# மன்னவனும் நீயோ.......

கவிதைகள் எழுதும் திறன் என்னிடம் இல்லையயாயினும், அவற்றை நயக்கும், அவற்றின் தரத்தை மதிப்பிடும் ஆற்றலை நிறையவே கொண்டிருந்தேன். கடந்த நூற் றாண்டின் பன்னிரு தசாப்த காலப்பகுதியில் வெளிவந்த குடாநாட்டுப் பத்திரிகைகளை ஒருவரின் கவிதைகள் அலங்கரித்து வந்தன. இக்கவிதைகளின் கீழே காணப்பட்ட புத்தூர் வே. இளையகுட்டி என்ற பெயர் இவரின் கவிதைகளின் பாற் பலரையும் ஈர்ந்திருந்தது. "என்னால், இதனைச் செய்யாமல் இருக்க முடி யவில்லை" எனச் சிலர் சிற்சில விடயங்களில் ஆதங்கப்படுவார்கள். அவ் வாறு "என்னால் கவிதைகள் படைக்காமல் இருக்க முடியவில்லை" என வாழ்ந்த ஒரு கவிஞன்.

யார் இந்த இளையகுட்டி? இவரை யாரென அறிய வேண்டும் என்ற அவா என்னுள் நிலைத்திருந்தது. 1995 ஆம் ஆண்டில் ஒருநாள் யா/ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். வகுப்புக்களைத் தரிசித்த வேளையில் ஒரு வகுப்பில், தமிழ்ப் பண்பாட்டுக்கோல உடை யுடன் ஆசிரியர் ஒருவர் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்தார். அவரின் செயற்பாடுகளும், தமிழ் பயிற்றும் முறையும் விரும்பத்தக்கனவாய் அமை ந்திருந்தன. இவர் யாரென அறிய விரும்பினேன். இவர் தான் அந்தப் புத்தூர் வே. இளையகுட்டி என்பதைத் தெரிந்துகொண்டேன்.

1997 ஆம் ஆண்டில், பாரிய இடப்பெயர்வுகளுக்குப் பின்னர் எமது அலுவலகம் நீர்வேலியில் இயங்கிய காலப்பகுதியில் ஒரு நாள், நான் பாட சாலை மேற்பார்வை முடித்து பிற்பகல் வேளையில் அலுவல கம் சென்றிருந்தபோது, எமது அலுவலக நிர்வாக உத்தியோகத்தர், "இளையகுட்டி மாஸ்ரர் அலுவலகம் வந்திருந்ததாகவும்; தனது பென் சன் விடயமாகத் தன்னுடன், முரண்பட்டு சத்தம் போட்டுவிட்டுச் சென்றதாகவும்" குறிப்பிட்டார். நான் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எமது நிர்வாக உத்தி யோகத்தவரும் கவிதையுலகுடன் தொடர்புடையவர்; "நல்லை அமுதன்" என்ற புனைபெயரில் பல கவிதைகளைப் படைத்துப் பாராட்டைப் பெற்றவர், இவ்விடயம் வித்து வக் காய்ச்சலாக இருக்கலாமெனக் கருதினேன்.

விடயம் இத்துடன் முற்றுப்பெறவில்லை. அடுத்த நாள் அலு வலக த்திற்கு வந்திருந்த கடிதங்களைப் படித்தேன். ஒரு கடிதம் கவிதை வடிவில் அமைந்திருந்தமை எனது கவனத்தை ஈர்ந்தது. கவிதையின் அடியில் அதே புத்தூர் வே. இளையகுட்டி என்ற பெயர் கவிதையைப் பல தடவைகள் படித் தேன். எனது அலுவலக நிர்வாக நடைமுறைகளை விமர்சிக்கும் போக்கில் அமைந்திருந்த அக்கவிதையின் வீச்சு, சொல் லாடல் என்பன எனக்கு மிகவும் படித்தமானவையாக அமைந்திருந்தன.

நிர்வாக உத்தியோகத்தரிடமும் காட்டினேன். பல தடவைகள் படித்தார். "மிக அருமையான கவிதை; நல்லாயிருக்கு" என மனந் திறந்து பாராட்டினார். "தமிழால் வைதாரையும் வாழவை க்கும்" குணம் எம்மிடமிருந்தது. இளையகுட்டி மாஸ்ரரின் விடயம் உடன் கவனத்தில் எடுக்கப்பட்டு, ஆவன செய்யப்பட்டது.

இரண்டொரு தினங்களின் பின்னர், திரு. இளையகுட்டி ஆசிரியர் அவர்கள் எமது அலுவலகத்திற்கு வந்திருந்தார். தான் எழுதிய கவிதையால், எமக்கு ஏதாவது தாக்கம் ஏற்பட்டிருப்பின் அதனைப் பொறுத்துக் கொள்ளும் வண்ணமும், தனது விடயம் கவனிக்கப்பட்டமைக்காக நன்றிகளையும் தெரிவித்தார். இவ்விடயம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. கம்பனின் மிடுக்குள்ள இக்கவிஞனிடம் இவ்வளவு நற்பண்புகள் எங்கிருந்து வந்தன. இக்கவிஞன் மேல் வைத்திருந்த மதிப்பை இச்சம்பவம் பன்மடங்கு உயர்த்திவிட்டது. புத்தூர் வே. இளையகுட்டி என்ற கவிஞனின் பெயரை நினைக்கும் போதெ ல்லாம் இச்சம்பவமும் எனது நினைவுக்கு வருகின்றது. இந்நினைவுகளைப் பலருடனும் பகிர்ந்து கொண்டுள்ளேன். புத்தூர் வே. இளையகுட்டி வாழ்க; அவர்தம் கவிதைகள் பல்லாண்டு வாழ்கவென மனம் நிறைந்து வாழ்த்துகி ன்றேன்.

**அன்புடன்**
**ஆ. ராஜேந்திரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்வி வலயம்**



# பவளவிழா நாயகனுக்கு ஓர் வாழ்த்துச் செய்தி....

மருதமும் நெய்தலும் கைகோத்து இயற்கை அழகுக்கு அணிசேர்க்கும் புத்தூரின் மணற் பகுதிப் பிரதேசம் கலை வளமும் கல்வியறிவும் மிக்க சான்றோரை காலந்தோறும் பிரசவித்து தமிழையும் தமிழர்தம் கலையையும் மெருகூட்டி வருவது யாவரும் அறிந்ததே. இயற்கையான சூழலமைவு, நல்ல மனம் கொண்ட சான்றோர் சகவாசம் முதலியவற்றால் நாடறிந்த நல்ல கவிஞ ர்கள் இங்கே தோற்றம் பெற்றனர். இவர்களிலொருவராய் தமிழன்னை தவமி ருந்து ஈன்ற மைந்தனே ஆசிரியர் கலாபூஷணம் வே. இளையகுட்டி என்று சொன்னால் மிகையாகாது.

ஆசிரியராய், கவிஞராய், சிறந்ததொரு சமூகசேவையாளராய் பல் பரிமாணங்களைக் கொண்டவர் இவர். ஓர் ஒய்வு நிலை ஆசிரியராய் இன்று பவளவிழாக்காணும் இவர் எமது கல்விநிலையத்தில் கற்பிக்குங் காலத்தில் மாணவர்களை அன்புடன் அரவணைத்து ஒழுக்க விழுமயங்களோடு கூடிய சீரிய கல்வியை வழங்கியவர். இன்று பல உயர்பதவிகளை வகிக்கும் கல்வி யியாளர்களின் மானசீகக் குருவாய் விளங்குபவர்.

சமூகத்தோடும், இன ஆன்மாவோடும் ஒன்றித்துப்போன இவர் சமூகத்தேவைகளை அறிந்து கவி இயற்றுவதில் வல்லவர். இவருடைய கவிதைகள் சமூகத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. சமூகக் கொடுமைகளில் தலையாயதாக விளங்கும் சீதனக் கொடுமையை தன் கவிவரிகளால் குழிதோண்டிப் புதைத்தவர். இவர் வாழும் பிரதேசத்திலே உள்ள பிரசித்திபெற்ற ஆலயத்தின்மீது இவர் பாடிய பாடலானது ஆலயத்திற்கு சிறப்பைத் தந்ததோடு இவருக்கும் பெருமையை வழங்கியது.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட ஆசிரியரை சீருஞ்சிறப்புடனும் பேரும் புகழுடனும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து சமூகத் தொண்டாற்ற இறையாசி வேண்டுகிறோம்.

நன்றி

**உண்மையுள்ள,**
**திரு.சபா.குகதாசன்,**
**ஓய்வுநிலை பிரதி அதிபர்,**
**குகன் கல்வி நிறுவனம்,**
**ஆவரங்கால்.**



# ஆசியுரை

ஆசிரியர் உயர் திரு.வே. இளையகுட்டி அவர்களை நான் நன்கு அறிவேன். இவர்கள் நான் புத்தூர் கொத்தணி அதிபராகப் பணி யாற்றிய வேளையில் யா/புத்தூர் மிசன் பாட சாலையில் ஓர் ஆசிரியராகப் கடமையாற்றி வந்தார்கள். இப்பாடசாலை தரம் 1 தொடக் கம் 5 வரை வகுப்புக்களைக் கொண்டதாகும். இவர்களின் ஆற்றலுக்கும் அறிவுக்கும் தனது வாண்மை விருத்திக்கும் உரிய பாடசாலை யாகத் திகழவில்லை. இவர்களுக்கு பொருத்தமான ஓர் பாடசாலையை வழங்கி மாணவர் சமூகமும் அவர்களும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற நல்லெண்ணம் எனது மனதில் தோன்றியது. இவ்வேளையில் ஆசிரிய அன்பர் ஒருவரால் விடப்பட்ட சவாலையேற்று முன்னாள்கல்விப்பணிப் பாளர் உயர் திரு. தனஞ்செயன் அவர்களின் உதவியுடன் மிகக்குறுகிய நாட்களில் இவர்களை மூலாதாரப் பாடசாலையாக விளங்கிய யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கடமையாற்றுவதற்கு ஆவன செய்து முன்வைக்கப்பட்ட சவாலை முறியடித்து இவர்களின் செயற்பாடுகள் இங்கு சிறப்புறச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் இவர்களின் சேவைக்காலத்தில் பொருத்தமான வகுப்புக்களை வழங்கியமையால் மாணவர்களின் அறிவாற்றல், ஒழுக்கம், பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாடச் செயற்பாடுகள் யாவும் மிக உன்னத நிலையை அடைந்தன. இவர்கள் அதிபர், ஆசிரியர்கள் மாணவர் கள், ஏனைய பாடசாலைச் சமூகத்தினரின் ஏகோபித்த நன்மதிப்பையும் பாராட்டுக் களையும் பெற்றுத் திகழ்ந்தவர். இக்கல்லூரியே இவர்களின் ஆக்கங்களுக்கும், உயர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கியது என்றால் அது மிகையாகாது. இந்தவகையில் இவர்களது முன்னேற்றத்திற்கு நானும் சிறிது பங்களிப்புச் செய்துள்ளேன் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களென நம்புகிறேன்.

உயர் திரு. வே. இளையகுட்டி அவர்களின் பண்பு, பணிவு, ஊக்கம், செயற்திறன், மொழியாற்றல், கவிதையாக்கம், பட்டிமன்ற பங்கேற்பு மேலாக முகாமைத்துவம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இன்று நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் போன்றவை வெளி வந்து கொண்டிருப்பது மிகவும் ஓர் ஆரோக்கியமான விடயமாகும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவை பல்கிப் பெருகுகின்றன. இந்த வகை யில் கலாபூஷணம் இளையகுட்டி அவர்களின் ஆரோக்கியமான ஆக்கங் களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இடம்பெறவுள்ள பவளவிழா, கலா பூஷண விருது கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமை மிகவும் பொருத்தமான செயற்பாடாகும். ஆசிரியர் இளையகுட்டி அவர்களின் படைப்புக்கள் மேன்மேலும் ஓங்க எனது நல்லாசியினைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வே. சந்திரசேகரம்பிள்ளை J.P
ஓய்வுநிலை அதிபர்
(யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி சிறுப்பிட்டி)

# சேவையாற்றிய கால உப அதிபரின் பார்வையில்

எனது மதிப்புக்குரிய கவிஞர் புத்தூர் வே. இளையகுட்டி அவர்கள் ஓய்வுகாலத்தின் இறுதி நான்கு ஆண்டுகள் நான் உப அதிபராவும் அதிபராகவும் பணியாற்றிய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் சிரேஷ்ட உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவர். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தாறு மெல்லிய உயர்ந்த தோற்றம். இருபத்தாறு வயது இளைஞன்போல் வேகமாக நடப்பார். நான்கு திசைகளும் பார்வையை வீசி மாணவர்கள் ஆசிரியர்கள் செயற்பாடுகளை உன்னித்துப் பார்த்துணர்வார். நான் அதிபராக இருந்தாலும், தனது மூத்த வயதினை உரிமையாகக் கொண்டு சக அம்சங்களையும் சய அம்சங்களையும் கலந்துரையாடுவார். இவையாவும் பாடசாலைச் சமூக த்தின் மீது கொண்ட பற்றின் நிமித்தமே என்பதால் நான் அவற்றை எனது ஆலோசனைக்கு எடுப்பேன்.

அவருடைய நேரம் தவறாத கல்லூரி வருகை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கல்லூரி நேரத்துக்கு முன்பதாக நான் க.பொ.த உயர்தர வகுப்புக்கு கணிதம், பௌதீகவியல் என்பன கற்பிப்பதற்கு விசேட வகுப்புகள் வைப்பதுண்டு. நேரப் பதிவேட்டில் எனக்கு அடுத்த படியாக அவருடைய கையொப்பமே இடம் பெற்றிருக்கும். சிவப்புக் கோடு அவர் கண்ணுக்குத் தெரிந்ததில்லை. நேரமுகாமைத்துவம் அவரது உடன் பிறப்பு புதிய தலை முறை ஆசிரியர்களுக்கு இவ்விடயம் சமர்ப்பணம்

ஆசிரியத்தின் மகத்துவத்தை கருப்பொருளாகக் கொண்டு "புதிய வாத்தியாருக்கு பழைய வாத்தியார் கூறுவது...." என்னும் தலைப்பில் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அரிய கவிதை ஒன்றை ஆக்கியிருந்தார். பத்திரிகையில் அந்தக் கவிதை இடம்பெற்றபோது கல்விப்புலத்தில் பெரும் வரவேற்புப் பெற்றிருந்தது.

"சேவைக்காக உன்தை தேய்த்து
யாகக் குழியில் ஆகுதியாய் வா தம்பி"

என்னும் வரிகள் மூலம் புதிய ஆசிரியரைச் சேவைக்கழைப்பது மெய்சிலிர்க்க வைக்கிறது.

*1992* ஆம் ஆண்டு திரு.வே. இளையகுட்டி அவர்கள் எமது கல்லூரிக்கு மாற்றம் பெற்று வந்த சில நாட்களில் அவருடைய சில தனித்துவங்களை அறிந்து கொண்டோம். இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கடமை நேரத்திற்கு அப்பாலும் ஈடுபட்டமை நினைவில் நிற்கிறது. கலை கலாச்சார நிகழ்வுகளின் சிறந்த ஆற்றுகையாளர், கரப்பந்தாட்ட நுட்பங்களை அறிந்தவர். இவருடைய சேவைக்காலத்தில் இவை இரண்டுக்கும் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியவர். பேச்சு நாடகம் கட்டுரை சம்பந்தமான போட்டிகளில் மாணவர்களை நன்கு நெறிப்படுத்தி திறன்மிக்கவராக்கி பல பரிசில்கள் பெற வைத்தவர். கலைகலாசசாரக் குழுவினரான திருவாளர்கள் செ.விஸ்வலிங்கம், துரை எங்கரசு,

செல்லத்துரை, திருமதிகள் சாந்தா, ஜெயமணி, கௌரி ஆகியோருடன் இணைந்து சோமாஸ்கந்தாக் கல்லூரியின் திறமைகளை வெளிக் கொணர உறுதுணையாக இருந்தார்.

நாட்டார் கலைகளாகிய கரகம், காவடி என்பனவற்றை மாணவர்களுக்கு பயிற்றுவித்து ஆர்வமூட்டியவர்.

இன்னும் விசேடமாக நான் கண்டு கொண்ட திறமை என்னவெனில் இலக்கியப் பாடல்களை இசைகூட்டில் பாடி கலையம்சத்துடன் கற்பித்த லாகும். பாலர்பாடல்களை மேசையில் தாளவாத்தியமிசைத்துப் பாடி மாணவர்களை உற்சாகப்படுத்துவார்.

இவ்வாறு கலையார்வமும், கற்பித்தல் திறனும் கொண்ட திரு.வே.இ. அவர்கள் ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது என்பன பெற்ற செய்திகள் ஊடகங்களில் வெளியானபோது எனது ஊரவன் என்பதாலும், என்னுடன் ஆசிரிய சேவை ஆற்றியவன் என்பதாலும் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டேன்.

இன்று அவர் எழுபத்தைந்து வயது நிறைவு செய்து, பவள விழாக் காண்பதையிட்டு உளமார வாழத்துகின்றேன். அவர் தம் குல தெய்வமாகிய மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளையும் ஆரவங்காலூரை ஆட்சி செய்யும் நடராஜ இராமலிங்கப் பெருமானையும் வேண்டுகின்றேன். ஒய்வு நிலை ஆசிரியர் திரு. வே. இளையகுட்டி அவர்கள் என்றும் இளையவனாக உடல் உள நலத்துடன் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

நன்றி

அன்புடன்

**வ. ஆறுமுகம் J.P**
**ஓய்வுநிலை அதிபர்**
**ஆவரங்கால்.**



**KMS & G Family Business finance Manager Neawzeland**

# வாய்நிறைய நாவழைக்கும் வாத்தியார்

"**வா**த்தியார்" என்று வாய் நிறைய நான் அழைக்கும் புத்தூர் வே. இளையகுட்டி ஐயா அவர்களுடன் தொலைபேசியில் கதைக்கும்போது தனது பவளவிழா நிகழ்வு பற்றியும் மலர் வெளியீடு பற்றியும் எடுத்துரைத் தார். அந்த மலருக்கு ஆக்கமொன்றினை அனுப்பிவைப்பதில் பெருமை யடைகிறேன்.

என் மனத்திரையில் சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்தவை திருப்புக் காட்சிகளாகத் தெரிந்தன. என்னை அறியாமல் சிரிக்க வேண்டுமென்ற உணர்வு தோன்றியது. தமிழோடு குழைத்தூட் டிய விகட நிகழ்வுகளும், விகடக் கதைகளும் பசுமரத்தாணிபோல் நெஞ் சில் பதிந்திரு க்கின்றன.

இலவச நூல்களோ, சீருடைகளோ இல்லாத காலத்தில் ஏழைகள் கற்றல் என்பது "கல்லில் நார் உரித்தல்" போன்றது. அந்தவகையில் என் சிந்தனை ஒடிய வேளைகளில் தனது ஏழ்மை நிலையினை கூசாது கூறி எனக்கு தெம்பூட்டுவார். எனது முயற்சிக்கும் உயர்ச்சிக்கும் வாத்தியாரின் வார்த்தைகள் உயிர்ச்சத்து ஊசிமருந்து போல் இருந்தன. என்போன்ற மாணவர்களுக்கு புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் வழிகாட்டும் ஒளிக் கீற்றாக விளங்கியது. நான் கற்ற காலத்தில் அர்ப்பணிப்புடன் ஆசிரிய சேவை செய்த பலரை நினைக்கின்றேன். இன்றைய பவளவிழா நாயகனு டன் திருவாளர்கள் சீனித்தம்பி, கிருஷ்ணபிள்ளை (இராமமூர்த்தி) கதிர் வேல் ஆகிய ஆசிரிய தீபங்களை எண்ண கண்ணீர் வருகின்றது. மேலாக அதிபர் முருகேசு ஆசிரியரை நினைக்கின்றேன். "பொக்கற்"றில் இருந்து கல்வி உபகரணங்களுக்கு செலவிட்ட அந்தக் கண்ணியமும், கருணையும் மிக்க ஆசிரிய சமுதாயம் ஏழ்மை நிலை மாணவர்களுக்கு ஏணியும், தோணியும், என்றால் மிகையன்று.

சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு இளையகுட்டி வாத்தியாரிடம் தமிழ்கற்கும் பேறு கிடைத்தது. வெள்ளை வேட்டி, "நாஷனல்" அணிந்து பொன்னிற மேனியுடன் வகுப்பில் நுழையும்போது மாணவர் முகத்தில் மகிழ்ச்சி இழையோடும் "வாத்தியார் முதலில் கூறும் முகவுரையாக ஏதோ ஒரு விகடத்துணுக்கு அமையும். அந்த மனோநிலை யுடன் பாடத்தை இலேசாகப் புகுத்தி விடுவார். பொலிஸ்காரன் கிளி பிடித்தகதை "இன்றும் ஏகாந்தத்தில் நினைந்து சிரிப்பேன். இலக்கியப்

பகுதிகளை கற்பிக்கும்போது நாடக மேடையின் முன்னால் இருப்பது போல் உணர்வு ஏற்படும். நவரசங்களும் முகத்தில் தேக்கி நடித்துக் கற்பித்தல் அவரது தனிச்சிறப்பு

தமிழ்மொழிமீதும் தமிழ்ப் பாடம் மீதும் வாத்தியார் கொண்ட பற்றுக்கு உதாரணமாக, அவர் தம் வாரிசுகளுக்கு சூட்டிய அர்த்தம் நிறைந்த, தமிழ் ஒலி மரபுக்கு முரணில்லாத பெயர்களை காட்டலாம். நிர் மலன் , சாரங் கன், சாருமதி, அட்சயன், அபிநயன், நர்த்தனன், தரங்கிணி முதலிய நாமங்கள் இனிமை நிறைந்தவை. நாகரிக மாற்றங்களால் அடி பட்டுச் செல்லா தவை.

நியூசிலாந்தில் இயங்கும் "சங்க நாதம்" என்னும் பெயருடைய திரு.மு.அற்புதசிங்கம் அவர்களின் இயக்கத்திலுள்ள வானொலியில் பவளவிழா நாயக னின் ஆக்கத்தில் உருவான அன்னை புவனேஸ்வரியின் இசைப்பாடல்களை அடிக்கடி கேட்டு மகிழும் பாக்கியம் பெற்றவன் நான்.

திரு. இளையகுட்டி ஆசிரியர் உருவாக்கிய பலர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நன்னிலையில் உள்ளனர். நானும் ஒருவன். வாத்தியார் வேலை வணிகநோக்கு அற்றது. சேவைநோக்கு உடையது. என்பதற்கு வாத்தியார் உதாரணமாக வாழ்ந்தவர். வாத்தியாரின் உடல் உள நலன் களை வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிறைவு செய் கின்றேன்.

நன்றி

**மூ. சுப்பிரமணியம்**
**கணக்காளர்**
**நியூசிலாண்ட்**

# மாணவர் ஒருவரின் நினைவலைகள்.....

நள்ளிரவு,
நானும் நிலவும் விழித்திருக்கும்
ஒரு மிதமான இரவு.
சற்றே காற்றுநாடி
சாளரம் திறந்த வினாடி
சில்லென்றொரு காற்றின் துண்டு
பட்டுத்தெறித்தோடியது சட்டென்று!
சின்ன தூறலுக்கான
வானத்தின்
ஆரவாரத்தில்
அமைதியாய் ஒதுங்கிய நிலவாய்
சிங்கையூரின் அவசரங்களில்
ஒதுங்கி உறங்கிய என் நினைவுகள்
மெல்ல மொட்டவிழும்
சில்லென்ற இதமான இரவு
எனக்கு
நல்ல ஞாபகம்
அப்போது நாங்கள்
ஆண்டு ஒன்பது.
நாங்கள் எல்லோரும்
"ஒரு தமிழனை"
வகுப்பறையில் பார்க்கிறோம்.
முண்டாசு பெரிய மீசை
இல்லையென்பதால்
எட்டயபுரத்து சுப்பிரமணியோ என்று
தடுமாறிவிடவில்லை.
என் தமிழாசிரியர்
திரு. வே. இளையகுட்டி.
புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கு புதிசாய்க் கிடைத்த
தமிழ்ப்பொக்கிஷம்.
வில்லிலிருந்து விடுபட்ட
வேட்டி கட்டிய அம்பாய்
நடந்துவரும்
அந்த இளைஞர்
அப்போதே ஐம்பதுக்கு

அருகே அகவைகொண்ட
புதுவையூர்க்காரர்.
முப்பதுகளின் ஆரம்பத்திலேயே
வெளியே தெரியும் தொப்பையும்
குனியத்தடுக்கும் தொந்தியையும்
கரைக்கத்துடிக்கும் தவிப்புக்களோடு
நினைத்துப் பார்க்கின்றபோதே
ஐயா உங்கள்
ஆரோக்கியத்தின் ஆச்சரியம்
மிக ஆச்சரியப்பட வைக்கிறது.
அப்போது
அழகுகளை ஆனந்தம் என்று
அதிசயங்களை ஆபூர்வமென்றும்
நம்பத்தொடங்கிய
அறியா வயசு எங்களுக்கு.
எப்போதும் போலவே
சாமிகளாடும் ஆசாமிகள்
சித்து விளையாட்டுக்கள் காட்டும் "பாபா" "ஆனந்தாக்கள்"
பத்திரிகைகளின் பக்கங்களை
பக்திமயமாய் ஆக்கிக்கொண்டிருந்தார்கள்
ஒரு நாள்
சிந்தனைகளின் குவியமாய்
சிலிர்த்துக்கிடக்கும் உங்கள் முகம்
சிந்தனைச் சிதறலாய்
வாடியிருக்கக் கண்டோம்
வைகுந்தவாசன்தான் கேட்டான்
"ஏன் சேர் ஒரு மாதிரி இருக்கிறிங்கள்?" எண்டு.
இலங்கை மந்திரிக்கும்
இந்தியத் தந்திரிக்கும்
சங்கிலி வரவளைத்துக்கொடுக்கும்
இவர்களின்
பட்டப்பகல் கொள்ளைகளில்
களவாடப்படுவது என்னவோ
பாமரனின் நம்பிக்கைகளும்
கஸ்டப்பட்டவன் காசுகளும்தான் என்றவாறே
உங்கள் பதிலிருந்ததாக ஞாபகம் ஐயா!
இற்றைக்கு
பதினெட்டு வருடங்களுக்கு முன்பே
தன்நம்பிக்கையையும்
தனக்கென்ற
தனித்துவமான கருத்துக்களையும்
நான் உங்களிடமிருந்தும்
கற்றுக்கொண்டிருக்கின்றேன்.
எதையும் நம்பும்


பேதை வயதில்

சரியாய் வழிகாட்டிய தங்களுக்கு
இத்தருணத்தில் நல்ல நன்றியையும்
தெரிவித்துக்கொண்டு விடுகிறேன்
"ல" "ழ" "ள" வேறுபாடுகளில்
எப்போதும் உங்களுக்கு கவனமதிகம்.
அதிலும் "ழ"வில் தனி அக்கறை.
நீங்கள் கடிந்துகொண்டதுபோல்
இப்பவும் இந்த உச்சரிப்புக்கள்
என்னிடத்தில் சரியான குறை.
ஆனாலும்
ஒரு மாணவனாய்
எழுதும்போது விடுவதில்லை பிழை
உங்களுக்கு
ஞாபகமிருக்கோ தெரியவில்லை சேர்,
மீசை லேசாய் அரும்பிய வயதில்
திரு.வேல்நம்பி அவர்களின்
"வெளிநாட்டு கல்யாணம்" என்ற நாடகத்தில்
பெண் வேடத்தில்
என் நடிப்புக்காய் பாராட்டியிருந்தீர்கள்!
பிறகு
பள்ளிக்கூடத்தல்
கௌரி ரீச்சரின்ர நாடகத்தில்
நாரதராய் வந்தேன்
"வேசம் உனக்கு நல்ல பொருத்தம் - உன்
பாட்டுத்தான் கொஞ்சம் வருத்தம்"
பாடல்களை தவிரித்துவிடு
என்றிருந்தீர்கள்
ஆக உங்கள் பாராட்டுதல்களும் கருத்துக்களும்
பின்னொருநாள் நான்
வளாக மேடைகளில்
"சிறந்த நடிகருக்கான" விருதுபெற
காரணமாக இருந்தனவென்று
நினைத்துக்கொள்வதுண்டு.
சேர்,
என்னுடைய தம்பி செல்வக்குமாரன்
ஆண்டு ஐந்து புலமைப்பரிசிலில் சித்தி,
என தமிழுக்கான சிறந்த பெறுபேறு
எல்லாத்துக்கும் மீண்டும் பெரிய நன்றி.
நீங்கள் அடிக்கடி சொல்லுவிங்கள்
"உன் கொப்பர் தெய்வேந்திரத்தை
கடைசிவரைக்கும்
ஓட்டத்தில்
கலைச்சு பிடிக்க முடியவில்லையென்று"
இன்று வாழ்க்கைப் பந்தயத்தில் நாங்கள்
சளைக்காமல் ஓட
சொல்லித்தந்ததே நீங்கள்தானே அன்று!
இடம்பெயர்ந்த காலத்தில்
உங்களை பூநகரியில்

சந்திக்கும் பாக்கியம்.
நீங்கள் கிளாலி கடந்துவந்தபோது
சித்தாப்பாவின் வயலோரத்தில் வரம்பில்
பூவரச நிழலில்
உங்களோடு கதைத்த அருமையான தருணம்
பிறகு
எங்கள் தமிழ்ச்சங்கம்
அகில இலங்கைரீதியில் நடத்திய கவிதைப்போட்டியில்
வென்றதற்காய் பரிசு வாங்க வந்தபோது
பேராதனையில் சந்தித்தேன்.
அப்போது நான் பொறியியற்பீடம்
கடைசி வருடம்.
என் ஆசானை
“யாழ்ப்பாணத்தின் பெரிய கவிஞனை”
மீண்டும் சந்தித்த கணங்கள்
மிகப்பெறுமதியானவை!
ஊரைப்பிரிந்து பல வருடங்கள்,
மீண்டும் வருவேன் சேர்.
பெரும் கவிஞர்களை தந்த
புதுவை மண்ணை
தொட்டு வங்குவதற்காக
உருண்டு புரளுதற்காக.
நான் நடந்த பாதையெல்லாம்
திரும்பப் பார்க்க வேண்டும்
நான் குளித்த கிணத்திலெல்லாம்
திரும்பக் குதிக்க வேண்டும்.
பூவரசங் காற்றில்
பூப்போல தூங்குவேன் - சில
பூஅணங்கு பார்த்த மதில் மீது - என்
பூவோடு குந்துவேன்.
ஓ.... மன்னித்து கொள்ளுங்கள் ஐயா!
ஊர் நினைவு வந்தால்
இப்படித்தான்
உலகமே மறந்து போகும்.
வரும்போது
கட்டாயம் உங்களிடம் வருவேன்
உங்கள் பாதம் தொட்டு பெறவேண்டிய ஆசிகளுக்காகவும்
எனக்கான வாழ்த்துகளுக்காகவும்.

நன்றி

-மாணவன்-
சி.தெ.ஞானக்குமரன் பொறியியலாளர் புத்தூர்.
சிங்கப்பூர்



# அயல்வாழும் அன்புள்ளத்தின் பார்வையில்!

**யா**ழ் பிரதேசத்தில் நடுவணாக விளங்குவது ஆவரங் காலூர். இவ்வூரின் சிறப்புப் பெயர் பெற்ற மணற்பகுதி என்னும் பகுதியில் சிறு விவசாயக் குடும்பமொன்றில் மூன்றாவது பிள்ளையாக தோன்றியவர் கவிஞர் இளையகுட்டி. குடும்பத்தின் கடைக்குட்டி. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த வர்கள். இவரின் பெற்றார் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு அந்தக்கால சிரேட்ட தராதரப்பத்திர வகுப்பு (S.S.C) வரை படிப்பித்தவர்கள். கிராமப் புறங்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே. இந்நிலையில் திரு. இளையகுட்டி அவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற ஆவரங்கால் மெ.மி.பாடசாலையில் படித்து இரண்டு விஷேட சித்திகளும் ஐந்து திறமைச் சித்திகளும் பெற்றிருந்தார். அவருக்கு வாய்த்த சிறுவசதிகளை சிந்தாமல் சிதறாமல் பயன்படுத்தி கடின உழைப்பின் மூலம் இந்தப் பெறுபேறுபெற்றமை இமாலயச் சாதனைதான்.

உலகில் வாழ்ந்த - வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானேர் தமது சுக நலன்களையும், குடும்ப நலன்களையும் பேணிக்காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பதை அறிகிறோம். ஆனால கவிஞர் வே.இளையகுட்டி அவர்கள் மேற்சொன்ன சமூகக் கொடுமைகளைச் சாடுவதே கவிதைக் கருப்பொருளாகக் கொண்டிருப்பதை கவிதை ஆவர்வலர்கள் கண்டு ஒப்புக் கொண்டிருப்பார். சிலகுளி நில முரண்பாடுகள் உறவினை முறிப்பதனைக் கண்டு கொதிக்கும் மனப்பாங்கை அவரிடம் கண்டிருக்கிறேன். சமூகத்தில் உள்ள சிறுசிறு இனக்குழுமங்கள் தம்மிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக் கூடாது என்பதும் அயலவர் உறவு இறுக்கமாக இருக்க வேண்டும். என்பதும் அவருக்கும் எனக்குமுள்ள ஒத்த நோக்குகளில் ஒன்றாகும். தோ ட்ட வெளியிலும் கடை தெருவுக்குச் செல்லும் பாதையிலும் நாமிருவரும் சந்தித்தால் சிலநிமிடங்களாது தரித்து நின்று உரையாடுவது வழமை. இந்த உரையாடலின் கருப்பொருள் ஆவரங்கால் வாழும் மக்கள் பிரதேச, இனக்குழும வேறுபாடுகளால் விரிசல் படக்கூடாதென்பதாக இருக்கும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவர் கற்றகாலத்தில் தமிழ்த் துறையிலும் விளையாட்டுத்துறையிலும் பலசாதனைகளைப் புரிந்ததோடு இவை சம்பந்தமான பல பொறுப்பான பதவிகளையும் வகுத்துள்ளார். என்ப தையும் இவர்கால ஆசிரிய மாணவர்கள் மூலம் அறிந்துள்ளேன். நூலகப் பொறுப்பாளர் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஆகிய பதவிகளை வகுத்தார் என்பதையும் இவருடைய சக ஆசிரிய நண்பர்கள் மூலம் அறிந்திருக்கிறேன்.

தாம் வாழும் பிரதேசத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மீது பக்திப்பாமாலை தொடுத்தும் சமயபாட அறிவுப் போட்டிகள் நடாத்தியும் சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவை சம்பந்தமான வெளியீடுகள், பரிசுத்தின நிகழ்வுகள் என்பனவற் றுக்கு என்னையும் அழைப்பதில் இவர் தவறுவதில்லை.

கவிஞர் இளையகுட்டியின் பிறந்த இடமும் திருமண பந்த இடமும் மணற்பகுதியே. இவருடைய மாமனார் ஆறுமுகம் அவர்கள் வசதியும் புகழும் படைத்தவர். கவிஞரின் மனைவி மனைக்குரிய இலக் கணங்கள் அமைய ப்பெற்றவர். கவிஞரின் மூத்தசகோதரர் செல்லத்தம்பி ஆங்கில அறிவு நிரம்பி யவர். அரச சேவையில் பணியாற்றியவர்.

கலாபூஷணம், ஆளுநர் விருது என்னும் அரச விருதுகள் பெற்ற கவி ஞர் இளையகுட்டி தமது இரண்டு ஆண்பிள்ளைகளையும் ஆசிரியர் காளக உருவாக்கியுள்ளார். மருமகள் ஒருவரும் ஆசிரியை. பொதுவாக ஆசிரிய பரம்பரை எனலாம். பெண்பிள்ளை ஒருவர். வெளிநாட்டில் வாழ்ந்து தற்போது கொழும்பினை வதிவிடமாகக் கொண்டுள்ளார். மூன்றுபிள்ளைகளையும் ஆறுபேரப்பிள்ளைகளையும் வம்சக்கிளை களாகக் கொண்ட ஆசிரியர் தமது துணையுடன் பவள விழா மேடையில் வீற்றிருக்கும் போதும், இவர்களை வாழ்த்தி ஆன்றோரும் சான்றோரும் உரைக்கும்போதும் இந்தக் கிளைகளும் மற்றும் உறவுகளும், நட்புகளும் அடையும் பூரிப்புக்கு அளவு கோல் ஏது. பவளவிழா நாயகன் தமது குடும்பத்தாருடன் பல்வேறு பாக்கியங் களும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறையருள் வேண்டுவோமாக.

நன்றி

**மூ. ஆனந்தக் கிருஷ்ணர்**
**சமாதன நீதவான்,**
**அச்சுவேலி ப.நோ.கூ.ச.**
**முன்னாள் பொதுமுகாமையாளர்.**

# அயலவன், அன்பன், கவிஞன்

என் அயலவனும் அன்பனும் கவிஞனுமாகிய திரு.வே. இளைய குட்டி அவர்கள் எனது அமுதவிழா மலரில் (காலச்சுவடு) என்னைப்பற்றி எழுதிய ஆக்கத்தினை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். தந்தை செல்வாவின் இணைபபாட்சிக் கொள்கைப் பாசறையில் வளர்ந்தவன் நான் என்னிலும் சுமார் பத்துவயது இளையவரான திரு. இளையகுட்டி என் வழியில் என்னால் ஈர்க்கப்பட்டவர் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். இதுவே எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட இறுக்கமான தொடர்பு ஆகும். சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளையின் கருத்துப்படி நாங்கள் இருவரும் உயர்ந்தவர்கள். அதாவது சலுகைக்காக தலை தாழ்த்தாத உயர்ந்த சாதி. உரிமைக்காக நிமிரும் சாதி வாலிபப் பராயத்திலிருந்தே நிமிர்ந்து நிற்கின்றோம். இப்போது இருவருமே சில வயது வித்தியாசமுள்ள கிழங்கள். ஆனாலும் கூனல் எங்களை அணுகவி ல்லை. கூடுவிட்டுக் கூடு பாயாத மானஸ்தக் கிழங்கள், பவளவிழாக் காணும் அன்பின் இளையகுட்டி என்றும் விடுதலை விரும்பி.

தமிழ்த்தேசியப் பற்றுக்கொண்ட அன்பன் வறுமையைச் சிவப்பாக்கி, அதற்குள் சலுகைச் சித்து விளையாட்டுக் காட்டும் சோரத்தனத்துக்குள் சிக்காதவர். நேர்வழியில் தடம் பதிக்கும் நிமிர்ந்த நடையினன்

இவர் ஆசிரியத் தொழிலின் எடுத்துக்காட்டானவர் என்பதை பல ஆசிரிய நண்பர்கள் மூலம் அறிந்திருக்கிறேன்.

தமது பகுதியிலுள்ள கலையகம் சனசமூக நிலையத்தின் ஆரம்ப காலத் தலைவர் திரு.சி.அரியகுட்டி அவர்களை அடுத்து, நீண்ட காலமாக அந் நிலயத்தின் தலைவராகவும், போஷகராகவும் பணியாற்றியவர் என்பதை அயலவன் என்ற வகையில் நன்கு அறிந்திருக்கின்றேன்.

ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தின் ஆண்டு விழாவில் அம்மண்டபத்தின் அறக் கட்டளைத் தலைவர் உயர் திரு. வே.சிவசுந்தரம் அவர்களின் வள்ளன்மை, மண்டபத்தின் சமூக உயர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கி அரியதோர் கவியரங்கு நிகழ்த்தி அறக்கட்டளை நிறுவனத்தின் உறுப்பினரான உயர்திரு. வே. கந்தசாமி அவர்களாய் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். ஆவரங்கால் ஒன்றியத்தினால் கவிதைத் திறனுக்காக கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னம் பெற்றுக்கொண்டவர்.

கவிஞர் இளையகுட்டி அவர்கள் ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது என்பன பெற்றமை அயலவன் நண்பன் என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகின்றன. இன்று அவர் எழுபத்தைந்து வயதினைப் பூர்த்தி செய்து பவளவிழாவினைக் கொண்டாடுகிறார். மிக்க மகிழ்ச்சி எனது அமுதவிழா மலரிலே "நூற்றாண்டு விழாக் காண்பீர்" என்று வாழ்த்தினார். அவ்வாழ்த்து அவருக்கும் பொருந்த வேண்டுமென சிவதலம் ஆவரங்கால் உறையும் நடராஜ இராமலிங்கப் பெருமானை வேண்டி, அவ ரும் குடும்பத்தினரும் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ வாழ்த்துகின் றேன்.

அன்புடன்
ஆவரங்கால் சின்னத்துரை J.P

# யாழ்ப்பாணக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

பவள விழாக் காணும் இளையகுட்டி சேர் எம் தமிழ்த்துறைக்கு மிகவும் சிறப்புப் பணியாற்றிய பெரியவர். சிறந்த கலைஞனாக பார் போற்ற வாழும் இவர் நாட்டுக்கூத்துத் துறையில் தனித்துவமானவர். எங்கள் வலய நாட்டுக்கூத்துப் போட்டிகள் மாவட்ட, மாகாண நாட்டுக் கூத்துப் போட்டிகள் எல்லாவற்றிற்கும் பிரதம நடுவராக கடமை யாற்றுபவர். நடுவுநிலை தவறாமல் பாரபட்சம் காட்டாது செயற்படும் உத்தமமான நடுவர். அதுமட்டுமல்லாமல் தீர்ப்புக்கள் வழங்கும்போது ஒவ்வொரு நாடகத்திலும் உள்ள நிறைவுகள். திருத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பவற்றை மிகச் சிறப்பாக, நேரம் கருதாது, பிள்ளை களுக்கு கூறிநெறிப்படுத்துவார். அவருடைய சேவை எங்கள் தமிழ்த் துறைக்கு காத்திரமானது. கலையன்னையீன்றெடுத்த அருங்கலைஞர் எங்கள் பாரம்பரிய கலைகளின் சிறந்த காவலனாக இருந்து கலைகளை இளந்தலைமுறைகளுக்கு கொடுத்து வரும் இவர் இன்னும்பல ஆண்டு கள் சுகத்தோடு, மகிழ்வோடு வாழ்ந்து நூற்றாண்டு காணவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி. மீரா அருள்நேசன்**
B.ASp MA.B.G.DF
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்த்துறை)**
**யாழ்ப்பாணக் கல்வ வலயம்**


# பவளவிழா நாயகனைப் பார் புகழ வாழ்த்துகின்றேன்

திரு. வே. இளையகுட்டி அவர்களின் பவள விழாவின் மலருக்கு வாழ்த்து வழங்குவதில் மட்டமற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின் றேன். பவள விழா நாயகன் 30 ஆண்டுகளிற்கு மேலாக ஆசிரிய சேவை யினை சமூகத்திற்கு வழங்கியதில் அவரின் கல்வித் தொண்டினை அவர் வாழும் காலத்திலேயே இந்தப் பவளவிழா மலர் சான்று பகிர்ந்து நிற்கின்றது.

சமூகம் வேண்டி நிற்கும் வேண்டுகைளை மனத்தினில் கருக் கொள்ளச் செய்து அவற்றிற்கு கருத்தாண்மை செய்யும் படைப்பாளிகள் வாழும் படைப்பாளிகளாவர். அந்தவகையில் இன்று பவள விழாக் காணும் பவளவிழா நாயகனின் படைப்பும் வாழும் தன்மை பெற்றவை களாகும். அத்தகைய படைப்பாளிகள் வரிசையில் எமது பவளவிழா நாய கனுக் கும் தனியிடமுண்டு.

எப்போது ஒரு நாட்டில் போராளிகளின் ஆயுதங்கள் தோழ் களிலிருந்து கீழ்நோக்கி தொங்க விடப்படுகின்றனவோ அத்தகைய சந்தர்ப்பங்களில் படைப்பாளிகளின் பேனா முனைகள் வீச்சுப் பெற்றன வாக விளங்க வேண்டிய தேவை சமூக நியதியாகவுள்ளது. இந்நியதியி னூடாக நமது சமூகம் இழந்த இழப்புக்களுக்கும், தவிப்புக்களுக்கும் ஆறுதலளிக்கும் நிவாரணியாகவுள்ளது. இந்த வகையில் நமது பவள விழா நாயகனின் பணி சிறக்கவும் அவரின் வாழ்வு வளம்பெறவும் வாழ்த் துகின்றேன்.

த.தவேந்திரராசா
ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
மருதங்கேணி, கரவெட்டி



# இளையவருக்கு இன்று பவளவிழா

முதியவர்கட்கு பவளவிழா
முன்னின்று நடாத்தும் நாளில் - இவ்
இளையவர்க்கு பவளவிழாவோ?
இனியவிழா இனிதே சிறப்புறுக

வயதிலே முதியவர் இவர்
வாலிப மிடுக்கின்று மிவர்க்கு!
நலமுடை இளையகுட்டி
நல்லாசன் வாழ்க! வாழ்கவே!

வீரமாநகர் கவிதை நூலை
விழிப்புடன் படித்ததினால்
ஆரத்தழுவிய கவிஞரிவர்
அழகுதமிழ கவிபடைத்தார்

இளமைப் பருவத்தில்
இனிதாய் கவி படைத்தார்
மரபு வழிப்பண்டிதர்கள்
மனநிலையை மழுங்கடித்ததினால்
தன்னாற்றல் தவிர்த்து வைத்து
ஐம்பது வயது இளைஞனாகி
அழகு தமிழ் கவி படைத்தோன்
மக்கள் துயர் நிலையை
மானிட வாழ்க்கையினை
தக்க பயனாக தரணியிலே
தமிழ்க் கவிதை தருவோன்

ஆண்பாவம் கவிதை நூலே
அவர் திறமைக்கு சான்றாகும்
புதுவை புவனேஸ்வரி அம்பாளுக்கு
பூச்சரம் சூடியதுபோல
இசைத்தமிழ் பாமாலையை
இனியகவியாக தந்த கவிவாணன்

வயது முதிர முதிர இவர்
கவிவளமும் வலிமை பெற்றதுவே!
கவியரங்கத் தலைமைகளும்
கவியரங்குகளும்
கலாபூஷணம் விருதும்
இவர் திறமைக்கு சான்று
இனிய இசையார்வத்திற்கு
இவர் பாவடிவம் புகழ் பேசும்

எழுது எழுதென்று
இவரைத் தட்டிக்கொடுக்க
எவரும் முன்வரவில்லை
தனது முயற்சியாலே தானாக
கற்று கவிபடைப்போன்.

வயதிலே முதியவர் இவர்
செயலிலே இன்னும் இளைஞர் இவர்
செம்மண்ணில் கால்பதித்து
பொன்மண்ணாய் மாற்றும் - இம்
மண்ணின் மைந்தர்களிலொருவர்
வியர்வை துளிகளிலே தன்
வாழ்க்கை முறையில் வளம் பெற்றோன்

நல்லாசான் என்பதனை
நாடறிந்து
வளரும் பயிர்களுக்கு
வழிமுறையாய் கல்வியூட்டி
புலமை திறனுக்கு
புகழோங்க வைத்தவர்
தானுமொரு மாணவனாய் கூடி
தன் கடன் பணித்தோன்.

முன்னணி உதைபந்தாட்ட வீரன்
கண்ணொளிரக் கால்வேகம் கொண்டோன்
மண்ணதிர தன் கழகம் வீனஸ்க்கு
மனத்துடன் பந்து கொண்டாடுவோன்

பெருமையில்லாச் சான்றோன்
பெருமை படத்தன் செல்வங்களை
கல்வியிலே வளர்த்து வைத்தோன்
வாழ்க்கை முறையின் தத்துவங்களை
நேர்த்தியாக்கி நிமிர்ந்துவாழ்வோன்

பவளவிழா நாயகனே
பாவரங்க நாயகனே
உன்னத ஆசானே
உதைபந்தாட்ட வீரனே
வியர்வைத் துளிகளினால்
விடிவு பெற்றவனே!

கலாபூஷணமே - கவிவாணனே
இசை ஆர்வலனே
இளையகுட்டி என்றும்
இனியவரே
பல்லாண்டுகாலம் வாழ்கவென
வாழ்த்துகின்றேன்!

வதிரி - சி. ரவீந்திரன்

# வாழ்த்துரை

**யா**ழ்ப்பாணத்தில் இயற்கை எழில் நிறைந்த கலைவளமும் தமிழ் மணமும் செழிக்கும் புத்தூர் என்னும் கிராமத்தில் பிறந்த கலை இலக்கிய சேவைக்கு அரும்பணியாற்றிவரும் திருவாளர் புத்தூர் இளையகுட்டி அவர்கள் தனது 75 ஆவது அகவையினை பூர்த்தி செய்தமையை நினைவு கூறும் முகமாக பவளவிழா மலரினை வெளியிடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் தனது நாற்பது வருட ஆசிரியர் சேவைக் காலத்தில் கல்வி, கலை, கலாசாரப் பணிகளில் ஊக்கமுடன் முன்னின்று செயற்பட்டவர். இலக் கியத்துறையிலே மிகுந்த ஈடுபாடுகொண்டு மாணவரிடத்திலே படைப்பாற்றலையும் ஆர்வத்தினையும் ஏற்படுத்தி இத்துறை வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தவர். அத்துடன் பல்வேறு நாடகங்களையும் தயாரித்து நெறியாள்கை செய்து இளைய தலைமுறையினரின் கலை இலக்கியப் பணிகளுக்கு உந்து சக்தியாகவும் விளங்கியவர். பாரம்பரிய கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத் துத் துறையினை வளர்த்தெடுப்பதை அரும்பணியாற்றியவர். அத்துடன் தனது துறைசார்ந்த நாடகங்களை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை, கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூகநிலையம் ஆகிய இடங்களில் ஆற்றுகைப்படுத்தியுள்ளார்.

பாரம்பரிய கலைகளையும் பண்பாடுகளையும் வளர்க்கின்ற கலை த்துறையில் ஆர்வம் கொண்டவராக தமது கடின உழைப்பினால் கலையு லகில் முன்னின்று பல விருதுகளையும், பரிசில்களையும் பலரின் பாராட் டுதல்களையும் பெற்றுள்ளார். இவரது கலை இலக்கிய சேவைக் காக கலாசார அலுவல்கள் அமைச்சினால் "கலாபூஷண" விருது மற்றும் "கலைஞானசேகரி" விருதுகளும், வலிகிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினால் "செம்புலக்கலைஞர்" என்ற பட்டமும் வழங்கி கௌர விக்கப்பட்டுள்ளார்.

தன் கலைப்பணியினால் மற்றவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் கலைஞர் மேலும் எமது கலைத்துறைக்கும் தமிழ்த்துறைக் கும் பெருமை சேர்த்து நீண்ட ஆயுளோடு வாழவும் அவரது பவள விழா சிறக்கவும் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரூபினி வரதலிங்கம்**
**மேலதிக அரசாங்க அதிபர், அரசாங்க அதிபருக்காக**
**யாழ்.மாவட்டம்**



# இனியராம் இளையகுட்டியை வாழ்த்துவோம்

அகத்தொளி முகத்தினில்
அறிவொளி நடத்தையில்
அன்பினில் பண்புமிழ் சீர்
ஜெகத்தினில் உதித்தவர்
செய்த்தகும் கருமங்கள்
ஜெயம்தரும் வகைதெரிந்தார்

அகத்தும் புறத்தும்
ஆய்ந்துநல் வாழ்விதை
ஆக்கிடும் துணிவு கொண்டார்
மகத்துவம் என்றுமே
மக்களும் சுற்றமும்
மாண்புறும் வாழ்வு கண்டார்

பெருந்தனம் நல்மதி
பேச்சினில் கல்விசொல்
பேறவை எனச் சிறந்து
இருந்தவர் புகழொடு
இருந்திடல் வாழ்வென
இனித்தவர் இளையகுட்டி

குவித்தனர் இலக்கியம்
கல்வியால் நல்நெறி
குறைவிலார் துணைகள் சேர
பவித்திரன் மக்களின்
பாசத்தால் மனங்களில்
பவள நாள் ஒளிரவைத்தார்

கவித்துவம் மிக்கவர்
கற்றவர் யாவரும்
கருதிநற் பொருளின் மேன்மை

புவித்தலம் உள்ளநாள்
போற்றியே மகிழ்ந்திட
பூத்தது வாழ்த்துகின்றோம்

-நெடுந்தீவு மகேஷ் -

உதயன்

உதயன் Uthayan

# கற்றோர் போற்றும் கவிஞன்

28.06.2012

ஈழத்து இலக்கிய உலகில் இலைமறை காயாகப் பலரும் இருக்கவே செய்கின்றனர். காலத்தாலும் கற்றோராலும் இனங் கண்டறியப்பட்டு அவர்தம் புகழ் விரியப் போற்றப்படுவது எங்கள் மரபாகிவிட்டது.

கவிதைப் புலத்தில் தம்மைக் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்திப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தமது ஆக்கங்களை வெளியிட்டு வருபவர். மூத்த கவிஞரான வே. இளையகுட்டி. அவர்கள்

இவர் ஆவரங்கால் கிராமத்தைச் சேர்ந்த கல்விமான். ஓர் ஆசிரியராகப் பணி தொடர்ந்து இலக்கிய ஆக்கங்களால் தனது ஆளுமையை வெளிப்படுத்தி வருபவர்.

உதயன் நிறுவனத்தின் தொடக்க நாள்களிலிருந்தே உதயன், சஞ்சீவி பத்திரிகைகளில் தரமான கவிதைகளை எழுதி வருபவர்.

உதயன் வெள்ளிவிழா சிறப்புக் கவிதைப் போட்டியில் பங்கு கொண்டு மரபுக் கவிதைகக்கான முதற் பரிசினை வென்ற பெருமைக்குரியவர்.

இன்று பவளவிழாக் காணும் கவிஞர். வே. இளையகுட்டி யின் கவிதைப் பணி பாராட்டுகளுக்கு உரியதாகும்.

அவரது சேவைகள் மக்கள் முன்னே மதிப்புயரும் இவ் வேளையில், அவருக்கென வெளிவரும் பவளவிழா மலர் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

ம.வ.கானமயில்நாதன்,
பிரதம ஆசிரியர்,
உதயன்.

New Uthayan Publication (Pvt) Ltd.
361, KASTHURIYAR ROAD, JAFFNA
Telephone & Fax
021 222 9933, 3837, 9944

பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වලිකාමම් නැගෙනහිර - කෝපායි.

Divisional Secretariat, Valikamam East - Kopay.

Divisional Secretary : 021 223 0013 Fax : 021 223 0011 E-mail: Valieast@gmail.Com


எனது இல / මගේ අංකය / My No

உமது இல / ඔබේ අංකය

திகதி / දිනය 13.07.2012.

# வாழ்த்துரை

**கா**லத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது

சைவத்திற்கும் தமிழக்கும் தழிழர் பண்பாட்டுடன் இணைந்த கலைகளுக்கும் சிறப்பு மிகு முக்கிய கேந்திரமான யாழ் மாவட்டத்தில் புத்தூர் பகுதியின் மூத்த கலைஞர் கலாபூஷனம் புத்தூர் வே. இளைய குட்டி அவர்களின் பவளவிழாவையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மல ருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. அந்தக் கண்ணடி தான் மக்களின் வாழ்வியல்புகளை நிதர்சனமாகப் படம் பிடித்து காட்டு கின்றது. மக்கள் வேறு கலை வேறு இலக்கியம் வேறல்ல மூன்றுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. கலைஞர்கள் கலை வடிவே உருவான வர்கள். கலைகளின் தனித்துவத்தையும் உள்ளடக்கத்தையும் பேணிப் பாது காப்பவர்களும் அவர்களே.

அந்த வகையில் புத்தூர் இளையகுட்டி அவர்களின் இலக்கியப்பணி பாராட்டப்பட்ட வேண்டிய ஒன்றாகும். இவர் வலிகாமம் கிழக்கு பண் பாட்டுப் பேரவை உறுப்பினராகவும் செயற்பட்டு கௌரவத்தையும் பெற வழி சமைத்துள்ளது.

ஒரு நீண்ட கலை யாத்திரை மேற்கொள்ளும் இக்கலைஞன் தனது அனுபவங்களை செப்பனிட்டு வெளிப்படுத்தும் முயற்சியில் மானிட நேயத்தின் பதிவுகளே மேலோங்கி உள்ளன.

எனவே இவரது கலைப்பணி சிறந்து விளங்கவும் இத்துறை சார்ந்த மேன்மைகள் பல பெறவும் இறையாசி வேண்டி விழா சிறப்புற நடைபெற அன்புடன் வாழ்த்துகின்றேன்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர்
வலிகாமம் கிழக்கு
கோப்பாய்

ம.பிரதீபன்
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
வலிகாமம் கிழக்கு - கோப்பாய்


Asst. Divisional Secretary : 021 223 0014 Accountant : 021 223 0012 Asst. Director Planning : 021 321 6421
Administrative officer : 021223 0015 General : 021 223 0011 Samurdhi Manager : 021 2230 489



# மாணவனின் பார்வையில்

பவளவிழாக் காணும் எனது ஆசான் பாதம் பணிந்து என்மனப்பதிவுகளை வெளிப்படுத்துகின்றேன். கல்வியில் கண்ணாய், கடமையில் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்த ஆசானின், யாவரையும் ஒன்றிணைக்கும் இனிய வார்த்தை, எல்லோரையும் வரவேற்கும் பொலிவுமுகம் என் மனதிற்கு என்றும் மகிழ்வளிப்பவை. இவரின் சீரிய சிந்தனை, தெளிந்த அறிவு, தெளிந்த தெள்ளமுதாம் பேச்சு, நகைச்சுவை, தேவையறிந்து மிகவும் பொருத்தமுற எதிர்பார்ப்புக்கு மேல் வழங்கும் அறிவு என்பன என்றும் என்மனதில் பசுமரத்தாணிபோல் நிற்பன.

தமிழ் ஆற்றலும் விருப்புங்கொண்டு தமிழ் புலமையுள் திளைத்த இவரிடம் கவித்துவம் பொங்கி வரும். இவர் கவிதைகள் சமூக நெருடல்கள், மனித அவலங்களைப் புட்டுக்காட்டி மக்கள் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் அமைந்து விளங்குவன. சொல்ல வேண்டும் என்று பட்டதைக் கவிதைகளில் மனம் பதியும்படி கூறும் சிறப்பு இவரின் தனித்துவம். எனது ஆசான் ஈழத்துத்து தமிழ் அறிஞர் வரிசையில் வைத்துப் பல்வேறு அமைப்புகளாலும், புலமையாளர்களாலும் போற்றப்படுகின்றமை என்போன்ற அவரின் மாணவர்களை ஆனந்தக் கடலில் மூழ்க வைக்கின்றது.

இவர் மாணவர் மனங்கொள்ளுமாறு மிகுந்த ஈடு பாட்டுடன் கற்பித்த அந்த நாட்கள் என்மனதில் என்றும் நிலைத்திருப்பன. மாணவர்கள் எல்லோரும் இவர்கற்பிக்கும் பாடத்துடன் கலந்துபோவோம். எந்த நிலை மாணவரையும் தன்னுடன் ஈர்த்துப் பாடம் புகட்டும் திறன் கண்டு திளைத்தோம். தமிழ்ச் சுவை மேலோங்கக் கற்பிக்கும் இலக்கிய பாடங்களின் தொடர்ச்சியை எப்பொழுது கற்போம் என்று ஆவலுடன் காத்திருக்கவைத்த ஆசிரியப் பெருந்தகை.

நல்லாசானாய், சமூக சேவையாளனாய், நயமுறு கவிஞனாய், பலர்போற்ற வாழும் காவிய நாயகனே இன்னும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இப்பணிகளில் தொடர இறையாசி வேண்டி வாழ்த்தின்றேன்.

தாங்கள் மாணவன்
மு. சந்தரசேகரம் M.A
ஆசிரிய ஆலோசகர்.(தமிழ்)

# எங்கள் உறவை வாழ்த்துகின்றோம்

**யா**ழ்ப்பாணத் தீபகற்பத்தில் வலி கிழக்கில் புகழ்பூத்த புத்தூர் மணற்பகுதியில் ஒரு வறிய குடும்பத்தில் பிறந்தவரான வே.இளையகுட்டி ஆசிரியர் வறுமை வளர்ச்சிக்கு தடையல்ல, அத்தடையை வெற்றி கொண்டு வாழ்வதற்கு உயர்ந்த இலட்சியம், விடாமுயற்சியும் தேவை. இப்பண்பு இவரிடம் இருந்தமையால் இன்று ஆசிரியராய் கவிஞராய் கலாபூஷணமாய்உயர்ந்த பட்டங்களைப் பெற்றுப் போற்றப்படுகிறார். இவருடைய இளமைக் காலத்தில் ஆவராங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் படித்து பின் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆசிரியராக இருந்த இவர் கவிதைகள், கதைகள் எழுதி பத்திரிகை வாயிலாக வெளியிட்டுவந்துள்ளார். இவருடைய கவிதை தொகுப்பு நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. இவருடைய சேவையை பாராட்டி கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். இவர் எங்கள் உறவினர் என்பதாலும் சமூகத்திற்கு உதவும் பண்பால் உயரந்தவர் என்பதாலும் இவரை இப்பவள விழாக் காலத்தில் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். தொடரட்டும் இவர் பணி பெருகட்டும். இவர் புகழ் என்றும் எங்கள் தாய் புவனேஸ்வரி துணையிருப்பாள்.

கவிஞருடைய தந்தை வழி உறவினர்கள் சார்பில் இந்த வாழ்த்தினை சமர்ப்பிக்கின்றோம்.

மு. பரமசிங்காரம்
ஆவராங்கால்

# மாணவியின் பார்வையில்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" அந்தவகையில் திரு. வே. இளையகுட்டி என்ற இலக்கியச் செம்மல் சிறந்த கல்விப் புலமை பெற்ற ஒரு ஆசான் ஆவார். இவர் புதுமையான, ரசிக்கத்தக்க பல கவிதைகளை ஆக்கிப் படைத்த கவிஞனும் ஆவார். இவ்வாசான்களின் சிறந்த வழி காட்டிலிலேயே பல மாணவர்கள் சிறந்த கல்வியாளர்களாகத் திகழ்ந்து விளங்குகின்றனர். அந்தவகையில் இளையகுட்டி என்ற ஆசிரியரின் வழி காட்டலிலே கற்று வந்த மாணவர்களிலும் நானும் ஒரு மாணவியே!

இளையகுட்டி என்ற ஆசிரியர் நாம் முதலில் சந்தித்தது ஆவரங்கால் குகன் கல்வி நிறுவனத்திலேயே ஆகும். அப்பொழுது நான் தரம் 06 இல் கல்விகற்றுக்கொண்டிருந்தேன். முதல் நாள் இவர் எமது வகுப்பறைக்கு வரும் போதே நான் நினைத்தது சரியானதாகவே இருந் தது. இவர் தமிழ்சேர் போல இருக்கு" என எனது மனம் சொல்லியது. அவர் தமிழ்ப் பாடத்தையே எமக்குப் புகட்டுவித்தார். இவரது நடை உடை பாவனை, இவரை தமிழ் ஆசான் என நினைக்க வைத்தது. வெண் ணிற மேற்சட்டை வெள்ளைவேட்டி அணிந்து வரும் அவரது தோற்றம் பார்ப்போரின் உள்ளத்தையே தூய்மை செய்யும் அளவுக்கு தூய்மையே சொரூபமாகக் காட்சிதருவார். கண்ணாடியும் ஒரு கையில் "சோக்" ஒரு கையில் புத்தகமும் என்றவாறு நிமிர்ந்த நடையுடன் வகுப்பறையில் நுழையும் காட்சி இப்பொழுதும் எனது மனதில் நிலைத்துள்ளது. இவர் தனது கற்பித்தல் காலத்தில் திசைகள் என்ற பெயருடன் வெளிவந்த சிற்றிதழில் பிரசுரமான கவிதைகளிற் சில என ஆய்வுக்கு எடுத்தபோது புதுக்கவிதைகளில் சில புரியாத பகுதிகளின் பொருளைப் புரியவைத்து வியக்க வைத்தவர். உதாரணமாக சோலைக்கிளி, தாட்சாயணி வளவை வளவன் ஆகியோரின் கவிதைகளின் பூடகப் பொருளை வெளிச்சமிட்டுக் காட்டியவர்.

செயற்பாட்டை சிறந்த அணுகுமுறை நுட்பங்களுடன் செயற் படுத்தினார். எமது ஆசான் கையில் பிரம்புடன் நின்றாலும் மாணவருக்கு தண்டனைகள் வழங்குவதில்லை. தனது அன்பான வார்த்தைகளால் கட்டுப்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டை திறம்பட நடாத்துவார். வகுப் பறையில் எந்நேரமும், அழகான புன்முறுவலுடன் எல்லா மாண வருக்கும் விளங்கும் வகையில் பாடத்தை சொல்லித்தருவார். பல கதை கள், கவிதைகள் சொல்லுவார். இதன் காரணமோ, என்னவோ நான் தமிழ்ப்பாடம் நடைபெறும் நாட்களில் வகுப்புக்கு ஒழுங்காகச் செல் வேன். இவர் பல மாணவர்களை பெயர்களைச் சொல்லி பாடங்களின் விளக்கங்களை கேட்டு தனது கற்பித்தலை மேற்கொள்வார். ஆனால் பல நாட்கள் சென்ற பின்னரே என்னுடன் நேரடியாக எழுப்பி வினா ஒன் றைக்கூறி விடை கேட்டார். அதற்கான சரியான விடையை நான் கூறி னேன். பின்னர் ஒருநாள் "நான்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி வருமாறு வீட்டுப்பாடமாகத் தந்துவிட்டார். நான் அவ்வேலையை

ஒழுங்காகச் செய்து வகுப்பிற்கு வந்தேன். கட்டுரை எழுதியவர்களை எழுந்து நின்று வாசிக்க வைத்தார். நானும் எனது கட்டுரையை வாசித்தேன். அக்கட்டுரை மூலமாகவே நான் யாருடைய மகள், எனது பெயர் அவருக்குத் தெரிய வந்தது. அன்றிலிருந்து என் மீது அதிக அக்கறையுடன் பல ஆலோசனைகளை வழங்கி பாடங்களை செய்விப்பார். அடிக்கடி வகுப்பறையில் விஜி எழும்பி சொல்லும்" என்று கூறும் வார்த்தை இப்பொழுதும் எனது காதருகில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. எப்பொழுதும் பண்பாகவும், அமைதியாகவும் தனது கற்பித்தல் செயறபாட்டை நிகழ்த்தும் ஓர் சிறந்த ஆசான். நான் மட்டுமல்ல எனது சகோதரர்கள், சகோதரி அணைவரும் இளையகுட்டி சேரிடம் கல்வியைக் கற்றுள்ளோம். தமிழ்ப்பாடம் அதுவும் இளையகுட்டி சேர் படிப்பிப்பது என்றால் மிகவும் சுவையாகத்தான் இருக்கும். தரம் 6 தொடக்கம் 9 வரை நான் சேரிடம் தமிழ்ப்பாடத்தை கற்றுள்ளேன்.

இவர் சிறந்த ஆசான் மட்டுமல்ல. சிறந்த வழிகாட்டியாகவும், சிறந்த சமூகசேவகனாகவும், சிறந்த உயர்வான பண்பாளனாகவும், பெரிய கவிஞனானகவும் எம் முன் திகழ்ந்து கொண்டிருக்கிறார். எனது ஆசானின் வழிகாட்டலிலே தமிழ்ப்பாடத்தை கற்றதன் பயனால் எனக்கு, தமிழ், இலக்கியங்கள் மிகவும் பிடித்தவையாக இருந்தது. க.பொ.த.சா/த, கா.பொ.த.உ/தங்களில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்திகளை பெற்றது. எமது ஆசானின் வழிகாட்டலினாலேயே ஆகும். அத்துடன் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப்பாடத்தையே சிறப்புப் பட்டத்திற்குரிய பாடமாகக் கற்றேன். அந்தப் பெருமையும் இளையகுட்டி சேரினையே சாரும்.

அது மட்டுமல்லாமல் பல்கலைக்கழகத்தில் எனது இறுதிவருட ஆய்வுக்கட்டுரைக்குரிய தலைப்பு "கவிதைகள்" பற்றியதாகும். அதற்கான பல ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொண்டு, பல கவிதைகளை ஆக்கி, பல கவிதைகளுக்குரிய விளக்கங்களைக் கூறி முழுமையான ஒரு ஆய்வுக் கட்டுரையை நான் வெற்றிகரமாக எழுதி முடிப்பதற்கு பல உதவிகளைச் செய்தார். எனது ஆசான் இந்தவகையில் தான் அவருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். இவ்வாறாக பல ஆசிரியர்களிடம் பல பாடங்களை சிறு வயது முதல் பல்கலைக்கழகம் வரை சென்று கற்றுள்ளேன். பல ஆசான்களில் ஒருசில ஆசான்கள் மட்டுமே மாணவர்களில் மனதில் இடம் பிடிப்பர். அந்தவகையில் மதிப்புக்குரிய பண்புக்குரிய ஆசான்களில் ஒருவர் இளையகுட்டிசேர் என்பதை கூறிக் கொள்ளவிரும்புகின்றேன். எமது ஆசான் இன்னும் பல ஆண்டுகள் பல விருதுகள் பெற்று பல நூல்களை ஆக்கி தனது குடும்பத்துடன் சீர் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. பகீதரன் விஜயலக்சுமி**
**ஆசிரியை இயக்கச்சி அ.த.க.பாடசாலை**

சி. கிருஷ்ணபிள்ளை
சமாதான நீதிவான்
ஆவரங்கால்
புத்தூர்.

S. Krishnapillai
JUSTICE OF THE PEACE
AVARANGAL
PUTTUR.

# சக மாணவன் ஒருவரது பார்வையில்

இன்று தனது 75 ஆவது வயது பூர்த்தியில் முதுவிழா கொண்டாடும் நண்பர், ஆசிரியர், கவிஞர் புத்தூர் திரு.வே. இளையகுட்டி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமகால வயதினராக நாங்கள் இருவரும் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் அன்றைய பாலர் கீழ் வகுப்பு பிரிவில இருந்து க.பொ.த.(சா.த) வகுப்புவரை ஒன்றாக அருகருகே அமர்ந்திருந்து கல்வி கற்று ஒன்றாக வெளியேறியவர்களாவோம்.ஸ

பாடசாலையிலிருந்து வெளியேறிய பின் பால்ய பருவத்தில் புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் ஆரம்பித்து இருவரும் ஆசிரியர்களாக கடமையாற்றி புத்தூர் கிராமத்தில் ஒரு கல்விப்பாரம்பரியத்தை ஏற்படுத்தியாதில் எங்கள் இருவருக்கும் முக்கிய பங்குண்டு.

மாணவப் பருவத்தில் இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் உயரிய பண்புகளுடன் கூடிய மாணவமாகத் திகழ்ந்தார். இந்தப் பண்புகள் இன்று முதுமையிலும் ஆசிரியர் கவிஞர் திரு.வே இளையகுட்டி அவர்களிடம் மேலோங்கி இருப்பதைக் காணலாம்.

இவரது ஆசிரியப் பணியினால் கூர்மை அடைந்த மாணவர்கள் பலர். மாணவப் பருவத்தலேயே இவர் நகைச்சுவையாகவும் விகடமாகவும் பேசும் இயல்புடையவராகத் திகழ்ந்தார். இந்த நகைச்சுவை விகடத் துணுக்குகளை இவரது கவிதைகளிலும் நிறையக் காணல்ாம்.

சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை, சமூக கலாச்சார சீரழிவுகளை, அதன் தாக்கங்களைநேரிலும் அனுபவத்திலும் கண்டு உணர்ந்து மனம் நொந்து அதன் பிரதிபலிப்பாக வாழ்வின் பிற்பகுதியில் ஓரளவு முதுமைக்காலத்தில் கவிதைகள் புனைய ஆரம்பித்து மிகவேகமாக அத்துறையில் வளர்ந்து முன்னேறி தலை சிறந்த கவிஞர்கள் வரிசையில் தன்னை அடையாளப்படுத்தி இடம் பிடித்து பல திணைக்களங்ள், அமைப்புக்கள், ஸ்தாபனங்களிலிருந்து விருதுகள், சான்றிதழள்கள், பணப்பரிசில் பெற்று முன்னணிக் கவிஞராகத் திகழ்ந்த போதிலும் தன்னை முன்னிலைப்படுத்த ஓடி ஆடித் திரியாத சுபாவம் கொண்டவராகத் திகழ்கிறார்.

முதுவிழா கொண்டாடி மகிழும் நண்பர் கவிஞர் திரு.வே. இளையகுட்டி அவர்கள் தொடர்ந்தும் கவிதைத்துறையில் பெரும்பணியாற்றும் முகமாக புதுப்புது படைப்புக்கள் படைக்கவேண்டும் என வாழ்த்தி அதற்கு இறைவன் அருள் புரியவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்

- சி. கிருஷ்ணபிள்ளை -

புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தான
பரிபாலன சபை
Puthuvai Arulmihu Alady Murugan Thavasthana
Baripalana sabai

Regd Date 07.11.2000 Regd No RA/5/JA/771

ஆலடிமுருகன் கோயில்,
புத்தூர்
திகதி: 15.07.2012

தலைவர் President — பொருளாளர் Treasurer — செயலாளர் Secretary

## வாழ்த்துரை

எமது பிரதேசத்தில் கவிஞர் உயர்திரு. வே. இளையகுட்டி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் கலாபூஷணம் ஆளுநர் விருதுகள் பெற்றவர். இவர் நாடகப் பிரதியாக்கம் செய்வதிலும் கவிதைகள் புனைவதிலும் சிறந்து விளங்கியவர்.

அயற் கிராம மக்களிடையே நல்லுறவைப் பேணுவதிலும் ஆர்வமுடையவராக விளங்கினார்.

இன்று பவள விழாக்காணும் அவர் மேலும் பல விருதுகள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நன்றி

தலைவர்
சோ. இராஜலிங்கம்

செயலாளர்
ம.குபேரன்



# ஒரு கலைஞனின் பார்வையில் பவளவிழா நாயகன்

**1960** களில் எனது பள்ளிப்பருவம், நான் பிறந்த மண்ணில் எம் மூதாதையர்களால் எம்மவர்க்காக உருவாக்கப்பட்ட புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் நானும் என் சகோதர சகோதரிகளும் கல்வி பயின்றுவந்தோம். அந்நாளில் விஷ்ணு வித்தியாலயம் கல்வியிலும், கலை நிகழ்வுகளிலும், விளையாட்டுத் திறன்களிலும் மாவட்ட மட்டத திலும், தேசிய மட்டத்திலும் முதன்மையாக விளங்கியதை யாரும் மறந்துவிட முடியாது. அதாவது நாடகம், இசை போன்ற போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்ததை தற்போதும் நான் நினைவு கூறுகின்றேன்.

இவற்றுக்கெல்லாம் காரணம் எமது கல்விக்கும் திறன்களுக்கும் வழிகாட்டிகளாக இருந்த அப்போதைய ஆசிரிய ஆசான்கள்தான். இன்றைய பவளவிழா நாயகன் திரு. வே. இளையகுட்டி ஆசிரியர் அவர்கள் எம்மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அதிலும் எனது நெருங்கிய உறவினர். அதற்கும் மேலாக எமது கிராம மக்களின் முன்னேற்றத்திற்குப் பலவகையிலும் வழிகாட்டியாக, முக்கியமாக என்னைப்போன்ற பலரின் கல்விக்குத் துணையாகவிருந்து உருவாக்கிய ஆசான் என்று சொன்னால் மிகையாகாது.

நான்கு தலைமுறையுடன் கூடிய ஒரு பாரம்பரிய கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். நானும் எனது சகோதர சகோரிகளும் விஷ்ணு வித்தியாலயத்தில் கல்வி பயின்ற காலத்தில், கல்வியுடன் கலை நிகழ்வுகளிலும் எமக்கு ஊக்கம் கொடுத்து எமது எதிர்கால வாழ்விற்கு உரமூட்டியவர் திரு.இளையகுட்டி ஆசிரியர் அவர்கள்.

குறிப்பாக அவர் எமக்கு ஆசிரியராக இருந்த காலத்தில் மார்க் கண்டேயர், சகுந்தலை, அரிச்சந்திர மயானகாண்டம் போன்ற நாடகங் களில் நானும் எனது சகோதரிகளும் முக்கிய பாத்திரமேந்தி நடித்திருந் தோம் மார்க்கண்டேயராக நானும், பாலமார்க்கண்டேயராக இளைய சகோதரி திவ்வியமலரும், சகுந்தலையாக மூத்த சகோதரி திருச்செல்வ மும் நடித்துப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்ததை என்னால் மறக்க முடியாது.

அந்தச் சிறுபாராயத்தில் எமக்கு நடிப்பு என்றால் என்னவென்றே தெரியாது. அப்போது எமக்கு நடிப்புப் பயிற்சியை வழங்கி, எமது

கலைத் திறமைகளை வெளிக்கொணர உதவியர் ஆசான் வே. இளையகுட்டி அவர்களே. இசையைக் கற்காவிட்டாலும், இசையின் மேல் அதீத பற்றுக் கொண்டதோர் இரசிகனாக விளங்கினார். அதற்கு உதாரணமாக நான் இசையில் எனது பட்டப்படிப்பை முடித்து வந்த போது, ஆசிரியர் அவர்கள் தமக்கென ஒரு புதிய வீட்டை நிர்மாணித் திருந்தார். அந்தப் புதிய வீட்டின் கிரகப் பிரவேசம் கொண்டாட்ட நிகழ்வில் எனது இசை நிகழ்ச்சியினை நடாத்தி என் இசை வளர்ச்சிக்குப் பெருமை சேர்த்தார்.

நான் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், எனது எதிர்காலம் இசைவாழ்க்கையாக அமையும் என அப்போது நான் நினைத்ததில்லை. விஷ்ணு வித்தியாலயத்தில் சாதாரணக் கல்வியினை முடித்து உயர்தரக் கல்விக்காக வேறு பாடசாலைக்குச் சென்ற சமயம் இந் தியாவிற்குச் சென்று பட்டம் பெறவேண்டும் என்று ஊக்கமும், உற்சாக மும், கொடுத்தவர்களில் திரு.இளையகுட்டி ஆசிரியர் ஒருவர் என்பதை நான் மறக்கவில்லை

ஒருவன் தன் வாழ்க்கையில் கல்வியிலும் வேறு பலவழிகளிலும் முன்னேறி சமுதாயத்தில் பலராலும் போற்றும் வகையில் திகழும்போது பழையனவற்றையும், கல்வியில் நம்மை வழிகாட்டியவர்களையும் மறப் பது நன்றன்று. எம்மை ஏற்றிய ஏணியை எட்டி உதைப்பதா? உண்மை யில் நான் இந்நிலையில் வாழ்கின்றேன் என்றால் சிறு வயதில் எமக்குக் கல்வியைக் கற்றுத் தந்து, வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிய வைத்து வழிகாட்டிய ஆசிரியர்கள்தான் என்பதை நாம் நிச்சயம் உணரவேண்டும்.

அந்த வகையில் பவளவிழா நாயகனான திரு.வே.இளையகுட்டி ஆசிரியர் அவர்கள் முக்கியமாக என் இசைத் திறமைகளை வெளிக் கொணரப் பலவழிகளிலும் உதவியவர் என்று கூறுவதில் நான் பெருமை யடைகின்றேன். மென்மேலும் விழா நாயகன் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் கலைக்கும் பிறந்த மண்ணுக்கும் சேவையாற்றிப் பெருமையடைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**சங்கீதபூஷணம்**
**எஸ்.பத்மலிங்கம் M.Phil(Music)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**சிங்கப்பூர் இந்திய நுண்கலைப் பீடம்,**
**சிங்கப்பூர்.**

# மூத்தகிளையின் நினைவுகள்

**எ**ன் தந்தையின் குடும்பமோ மிக ஏழ்மை நிறைந்தது. ஏழ்மை யிலும் செம்மையாக வாழ்ந்த அந்தக் குடும்பத்தின் கடைக்குட்டியான என் தந்தை கைக்குக் கிடைத்த மிகச் சொற்ப வசதியைக் கொண்டு அந்தக் கால எஸ்.எஸ்.சி வரை படித்துச்சித்தியெத்தியமை பெரும் சாதனைதான். என் அப்பா அடிக்கடி இதனைக் கூறுவார். எப்படியோ நடுத்தர வாழ்க் கைக்கு அடிகோலிய ஆசிரியத் தொழிலைப் பெற்று கடுமையாகச் சிந்தித் துத் திட்டமிட்ட படியாலும் அம்மாவின் குடும்பம் ஓரளவு வசதியாக இருந்தமையாலும் பிள்ளைகளாகிய எங்கள் மூவரையும் ஓரளவு வசதி யாக வாழவைக்க முடிந்தது. யாழ்குடாநாட்டின் பிரபலம் மிக்க பாட சாலைகளில் எங்களைப் படிக்க வைத்தமையும் ஓரளவு சாதனையே.

எனது இருபத்திரண்டு வருட ஆசிரிய சேவையில் கண்ட, எடுத் துக்காட்டாக் கூறக்கூடிய ஆசிரியர் எனது தந்தை என்றால் அது மிகை அன்று. ஆறுபது வயது வரையிலும் அதன்பின் தனியார் கல்வி நிலை யங்களிலும் அவர் கற்பிக்கும் போது பாடத்திட்டம், பாடக்குறிப்பு, பாட ஆயத்தம் என்பவற்றில் கண்ணும் கருத்துமாக இருப்பார். இதற்குமேலாக நேர முகாத்துவம் தந்தையின் சிறப்பியல்பு "நாற்பது வருடகால ஆசிரியப் பணியில் ஒரு நாளேனும் பாடசாலைக்கு பிந்திச் சென்றதில்லை" என பெருமையுடன் கூறுவார். எம்மையும் தன் வழியில் செல்லுமாறு வலி யுறுத்துவார்.

தான் செய்யும் தொழில் மீது, அவர் வைத்துக் கொண்ட பற்றின் வெளிப்பாடுதான் இவை. அதன் பிரதிபலன் தந்தையின் மாணவர்கள், சக ஆசிரியகள் அதிபர்கள் அளித்த பாராட்டுக்கள் என்பனவாகும்.

அன்று அவர் எமக்கு ஊட்டிய அழகு தமிழே ஓரளவாயினும் பெயர் சொல்லத்தக்க எனது பாடநூல்களின் ஆக்கத்திற்கு உதவுகின்றது என்பது மறுக்க வியாலது. எனினும் அவர் எமக்கு வழங்கிய வசதிவாய் ப்புக்களையும், ஊக்கத்தினையும் நாங்கள் பூரணமாக பயன்படுத்தினால் இன்னும் உயர்ந்திருக்கலாம்.

அவயத்து முந்தி இருக்க முடியாவிட்டாலும், அவையில் ஒரு வராக எங்களையும் மதிப்போடு உட்காரவைத்த தந்தையின் பவளவிழா நிகழ்வு எங்களுக்கு மகிழ்வினைத் தருகின்றது. தந்தையின் உடல் உள ஆரோக்கியத்திற்காக, அவர் பாமாலை சூட்டிப் பரவிப் பணிந்த புவ னேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம்.

இ.நிர்மலன்
சென்றஅன்ரனிஸ் ஆண்கள் கல்லூரி
கொழும்பு - 13

"ஸ்னார் புத்தக வெளியீட்டகம்"
புத்தக சாலை
கொழும்பு – 13

# மூன்றாம் தலைமுறையின் மூத்தவள்

ஒரு வயதும் நிரம்பாத நிலையில்
கடல் கடந்து ஸ்ரீ லங்கா தலைநகரில்
கால் வைத்தேன்
ஒல்லியாய், உயர்ந்த ஒருவர் என்கால்
தரையில் படவிடாது தாங்கினார்
யாரிவர்? புரியாத வயதெனக்கு.

“தாத்தாவிடம் போ பிள்ளை,
தாத்தாவிடம் கொடு பிள்ளை;
தாத்தவைக் கூப்பிடு பிள்ளை
அம்மாவின் ஏவல் இவை
தாத்தா எனும் பாத்திரம்
சின்னஞ் சிறிசுகளுக்கு - இவ்வளவு
காத்திரமானதா?

அம்மாவின் அப்பா - அவருக்கு இன்று
முக்கால் நூற்றாண்டு முதுவிழாவாம் - பவளவிழா
ஐந்தாம் தரத்து “ரீச்சர்” அத்தனையும் சொன்னவர்
ஐம்பதில் பொன்விழா; அறுபதில் மணிவிழா;
ஏழுபத்து ஐந்தில் பவளவிழா; எண்பதில் அமுதவிழா

சாதனை மனிதருக்கு எடுக்கும் விழா
தாத்தாவுக்கும் பொருந்துமா?
வாரிசுகள் எங்களுக்கு தாத்தா
சாதனையாளர்தான்

பூப்படைந்த போது, பாதை தடைப்பட்டாலும்
மூப்பினை எண்ணாது
அம்மம்மாவுடன் வந்தணைத்து
ஆசீர்வதித்த அந்த நாள்

அதுவே என் வாழ்வில் பொன்னாள்-
அன்பைச் சொரிவதில் அவருக்கு நிகர் அவரே!
ஆனாலும்
கண்டிப்பிலும் நிகரில்லா கறார் பேர்வழி
நித்திரைக்குச் செல்லுமுன்னே குட்டிப்பிரசங்கம்

"திட்டமிட்ட நேரச் செயலாற்றல்,
திட்டமிட்ட சிக்கனச் செலவாற்றல்,
திட்டமிட்டவாறு பொருள்பேணல்
திட்டமிட்டுத் துறையை தேர்வு செய்தல்
திட்டம்; திட்டம்; திட்டம்
திட்டமில்லா வாழ்வு
மட்டசுத்தமில்லா மனையமைப்பு"
கவி நயத்துடன் தரும்போதனை
பதின்ம வயதில் சற்றுக் கசந்தாலும்
பழுத்து வீழ்ந்த தீங்கனிச் சுவையும் சத்தும்
என்னிள வயதினரே,
தாத்தாமார் கூறுவது அறுவையல்ல
அனுபவத்தின் பெறுமதிகள்.
அவர்கள் எம் நெறியாளர்
செவி மடுத்துப் பயனடைவீர்!

லதாங்கி – அசோகன்
மாணவி
வெள்ளவத்தை இந்து மகளிர்
கல்லூரி

# ஒரு நண்பனின் பார்வையில்

**வா**ழ்தலின் மகத்துவம் உணர்ந்து வாழ்தல் கடினமானது. அன்பும் நட்பும் கலந்த எமது உறவுக்குள் இளையகுட்டி மாஸ்ரர் இளமையிலிருந்தே என்னுடன் நெருங்கிப் பழகியவர். நண்பனாய் ஆசிரியராய் சமூக உறவாய் உறவாடியவர். எமது அயலில் கற்றவர் என உயர்ந்து பழகினாரோ அவ்வாறே எம்முடன் ஆசிரிய பதவியில் மேன்மையுற்றபோதும் நேசம் குறையாத சிநேகம் அவருடையது. பொறுமை, இரக்கம் அன்புடன் உறவு கொண்டாடி வாழ்பவர். கோபம் கொள்ளும் போதெல்லாம் எமது தவறுகளின் ஆழத்தை அழுத்தி உணர்த்தும் பண்பாளர். எமது அயல் உறவுகள் உயரச் சமூக சேவைகளால் எமது மக்களுடன் வாழ்பவர். எழுத்தாற்றல் மிக்கவர். அவரது எழுத்துக்கள் இலட்சிய நோக்குடன் இலக்கியச் இலக்கியச் சுவை குன்றாது. திகழ்பவை தமிழ்ப் பற்றும் தமிழ் ஞானமும் அவரது தமிழ் இலக்கிய ஆற்றல் வளர உதவியதெனலாம். அத்தகு இலக்கிய ஆற்றலின் வழி புதிய ஆக்கங்களை அவர் உருவாக்கவும் அவற்றுக்கான பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெறவும் தூண்டுகோலாயின. அவர் வாழ்ந்த வளர்ந்த சூழலில் சமூகத்தின் விழிப்புணர்ச்சிக்காகத் தம்மையும் தமது அனுபவங்களையும் பகிர்ந்துழைத்து வாழ்வதின் மூலம் பவள விழாக்காணும் இளையகுட்டி மாஸ்ரர் என்றும் நம்மவர் மத்தியில் நினைக்கும் பாராட்டுக்கும் உரியவராவார்.

நற்றவம் செய்தவர் பெற்ற பிள்ளைகளில் ஆண்கள் இருவரும் அவர் வழியில் ஆசிரியர்களாய் கற்றவர் மத்தியில் புகழுடன் வாழ்கின்றர். அவரது ஒரே மகள் நல்ல கணவரைப் பெற்றுயரப் பேரர்களைக் கண்டு இன்புற்றுக் களித்து வாழ்கின்றனர். மனம்போல வாழவும், மதிப்பவர் முன் உயர்வும் பெற்றவர் அவரிடம் கற்றவர்கள் வங்கியிலும், தொழில் நிறுவனங்களிலும் உயர்பதவிகளைப் பெற்றபோதும் இளையகுட்டி மாஸ்ரரின் மதிப்புக்கும் அன்புக்கும் என்றும் சிறப்பளிப்போராய் வாழ்கின்றனர். நல்லன சிந்தித்து நல்லன செய்யும் அவரது கலைத்துவம் மிக்க ஆற்றலால் எல்லோர் மனத்திலும் இனிமையாய் ஒளிர்பவர். இளையகுட்டி மாஸ்ரர் அவரது பவளவிழா நிகழ்வுக்குள் எம்மையும் மதித்துயர்த்தி வாழ்த்துக்கள் பெற்ற செயல் எம்முள்ளத்தை மகிழ்விக்க அவர் மேன்மேலும் நீண்ட ஆயுளுடன் நிறைவான எல்லாம் சேர்ந்து வாழ வாழ்த்துகின்றேன்.

**நா. கணபதிப்பிள்ளை**
**கோண்டாவில்.**



# கலையகம் சனசமூக நிலையம்
# வீனஸ் விளையாட்டுக்கழகம்

தலைவரின் உள்ளத்திலிருந்து
பவளவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

**வா**லிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் செழிப்பான பிரதேசங்களுள் புத்தூர் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமம் கல்வி, கேள்வி ஞானங்களிலும் மிகுந்த சாதனையாளர்களைத் தன்னகத்தே கொண்டதாகும். அந்த வகையில் பவளவிழாவினைக் காணுகின்ற "புத்தூர் வே.இளையகுட்டி" என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற கதாநாயகனும் போற்றப்படவேண்டியவராவார். பவளவிழாவினைக் கொண்டாடும் இவரை வாழ்க பல்லாண்டு! என வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

"அன்னசத்திரம் ஆயிரம் நாமத்தி
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
இன்னயாவினும் புண்ணியுங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதியாரின் வாக்குக்கு அமைய, விழா நாயகனான வே. இளையகுட்டி அவர்களும் ஆசிரியராகப் பணியேற்று பல ஏழைமாணவர்களின் கல்விக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் என்றால் மிகையில்லை. தமிழில் மிகுந்த ஆர்வங்கொண்ட இவர் எழுத்துலகிலே கவிதையினூடாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டவராவார். இவர் தனக்கென்றொருபாணியிலே எதற்கும் அஞ்சாமல் தனது கருத்துக்களை கவிதைமூலம் வெளிச்சம் போட்டுக்காட்டிய மகத்தான கவிஞராவார். அத்துடன் ஏனைய கவிஞர்களைப் போல புனைபெயரில் எழுதாமல் வெளிப்படையாக சொந்தப் பெயரிலேயே எழுத்துலகில் வலம் வந்தவர். அது மட்டுமன்றி ஊரின் பெயரினை தனது பெயரின் அடையாகக் கொண்டு தன்னை அறிமுகப்படுத்திய சிறந்த பண்பாளர் ஆவார். எடுத்துக்கொண்ட விடயத்தினை நகைச்சுவையுணர்வோடு கவிதை வடிப்பதில் இவருக்கு நிகர் இவரேதான்.

இவர் ஆசிரியராக, கவிஞராக மட்டுமன்றி தான் சார்ந்த கிராமத்தின் கல்வி மேம்பாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்த ஒப்பற்ற தலைவராவார். "கலையகம்" சனசமூகத்தின் போஷகராகவும், ஆயுட்கால உறுப்பினராகவும் திறம்படச் செயலாற்றிய செயல்வீரன். இந்த நிலையத்தின் கரப்பந்தாட்டவீரர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

தள்ளாத வயதிலும் தளராத உறுதியோடு தமிழுக்கும், தான் சார்ந்த கிராமத்திற்கும் வே. இளையகுட்டி ஐயா அவர்கள் வழங்குகின்ற ஆலோசனைகளும், வழிகாட்டல்களும், இளஞ்சந்ததியினராகிய எம்மை மெய்சிலிர்க்க வைப்பதோடு, அவரின் உந்துதல் எம்மைச் செயலாற்ற வைக்கின்றன.

பவளவிழாக்காணும் ஆசிரியர் அவர்கள் நீண்டகாலம் சீரும் சிறப்புடனும் நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*'தாம் இன்புறுவது உலகுஇன்புறக் கண்டு*
*காமுறுவர் காற்றறிந்தார்" (குறள் 399)*

*'வாழ்க! வளமுடன்*
*வளர்க நும்பணி"*

**கலையகம் சனசமூகநிலையம்**
**புத்தூர்.**

**என்றும் அன்புடன் வாழ்த்தும்**
**கு.சுந்தரச்செல்வன்**
**(தலைவர்)**

E.RATNAM
in (HONS), H.N.Dip.Acc.N.C.BS,M.Phil (Reading)phD
ID
ARTMENT OF MARKETING
ULTY OF MANAGEMENTSTUDIES
DMMERCE
VERSITY OF JAFFNA
LANKA

MR.E.RATNAM
12/1 RAILWAY NORTH ROAD
KANDARMADAM
JAFFNA

# யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறையின் வாழ்த்துச்செய்தி

திரு. வேலுப்பிள்ளை இளையகுட்டி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவர் ஆவரங்கால், புத்தூர்கிழக்கில் வேலுப்பிள்ளை கதிராசி தம்பதியினருக்கு 1937 இல் செல்வமகனாக பிறந்தார். இவர் தனது பாட சாலைக்கல்வியை ஆவரங்கால் மெ.மி.பாடசாலையிலும்; தொழில்சார் கல்வியை திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையிலும் கற்றார் பின் னார் 06.02.1958 இல் ஆசிரியர் நியமனம் பெற்று ஆசிரியராகவும், அதிப ராகவும் நீண்டகாலம் மாணவர்களதும், பெற்றோரதும், பொது மக்களினதும் நன்மதிப்பைப் பெற்று சிறப்பாகப் பணிபுரிந்தார்.

மேலும் கோப்பாய் பிரதேச கலாச்சாரப் பேரவையின் உறுப்பி னராகவும், உப தலைவராகவும், நீண்டகாலம் சிறப்பாக பணிபுரிந்தார். இவரது கல்விப்பணி, கலைப்பணி, சமுகப்பணி, சமயப்பணி பல மட்டத் தினராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான இவரது சேவைகளைப் பாராட்டி ஆளுனர் விருது வழங்கப்பட்டது மட்டுமன்றி, அரச கலாசாரத்துறையினரால் கலா பூஷணம் போன்ற விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். இவை இவரது சேவைக்கு கிடைத்த சான்றுச் சின்னங்களாகும். இவற் றுக்கு மேலாக இவரால் வழிப்படுத்தப்பட்டு, உதவிவழங்கப்பட்டு உயர் ந்தநிலையில் பல மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது இந்த உயர்நிலைக்கு இவரே காரணம் எனக் கூறினால் மிகையாகாது. நான்கூட இவ்வாறு உயர்ந்த நிலைக்கு வருவதற்கு திரு.வே. இளைய குட்டி ஆசிரியர் அவர்களே காணரம். பாடசாலை அனுமதி பெற்றுத் தந்து, நிதி அடிப்படையில் உதவி என்னை வழிப்படுத்தி இந்நிலைக்கு உயர்த்திய பெருமை இவரையே சாரும். எனக்கு உதவியது போல பலருக் கும் உதவியதை நான் அறிவேன்.

இவர் வாழ்க்கைத் துணையாக ஆறுமுகம் தம்பதிகளின் மூத்த புதல்வியான ரஞ்சனா தேவி அவர்களை திருமணம் செய்து கொண்டார். இவரது பிள்ளைகள் சகல வளங்களுடனும் பெருமைக்குரியவர்களாக இன்று வாழ்வதைக் கொண்டு இவரின் நீதியான, நேர்மையான வாழ்வை சான்றாக்கிக் கொள்ளமுடிவதுடன் இவர் குடும்பத்தவருடன் இந்த அவனியில் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

E. Ratnam (J.P.)
B.Com(Hons).N.C.B.S.H.N.Dip.in Acc.
M.A.A.T.M.Phil..
Senior Lecturer Gr-I
Regd. No. 3/06/NE/J/P156
UNIVERSITY OF JAFFNA-SRI LANKA




ஸ்ரீ புவனேஸ்வரி ஆலயத்தின் முகப்புத் தோற்றம்...




விழா நாயகனது இல்லத்தின் தோற்றம்...


பவளவிழா நாயகன் கவிஞர் இளையகுட்டி அவர்களின் வெவ்வேறு காலத்தோற்றம்.....



1965



1995



2012

# இயல் - 02

# வாழ்வியல்

# என்னையே நானறிவேன்!

ஆவணப் படுத்திவைக்கும் அளவிற்கு
என்குடும்பம்
ஊர்போற்றும் செழிப்புக் கொழித்ததல்ல
ஆயினும்
ஏழ்மையிலும் செம்மையாய், ஏமாற்றி அறியாத
நேர்மை நிறைந்ததாய்
"வேர்வையில் குளித்தாலே வீட்டில் உலையாடும்"
என்ற
வார்த்தைக்கு இலக்கணமாய் வாழ்ந்த குடும்பம்;
ஏழைக்கும் மகிழ்வுண்டு; இயற்கை நியதி
இவர்களுக்கு நாம்மூவர்; இவரில் கடைக்குட்டி
இளையகுட்டி!
அண்ணன் ஒருவரும், அக்காள் ஒருத்தியுமாய்
சந்நிதியான் தந்ததென தாய் தந்தை மகிழ்ந்தார்கள்.

"ஆத்தங்கரையானுக்கு அரோகரா" எனுமோசை
கேட்பதற்காய் அன்னை
கிழப்பருவம் அடைந்திடினும்
வேர்க்க நடந்து சென்று வேண்டியது
வேலன் திருச்செவியேற,
ஏழ்மைப் படிதாண்டி இன்றுள்ள நடுத்தரத்தில்
நானும் நுழைந்தேன்

வயது திருமணம், வாழ்விடங்கள், வாழ்வியல்கள்,
வாரிசுகள் என்று வகைப்பட்டோம் மூவர்.

இனி,
என்னையே நானறிவேன்..." என்றும் தலைப்புக்கு
ஏற்றதாய் என்னுரையை விரிக்கின்றேன்.


நடுத்தரத்தான் வாழ்வு திரிசங்கு சொர்க்கம்
இருவகை வாழ்வியல் இடுக்கில் அகப்பட்டு...
என்போன்ற நடுத்தரத்தார் இதனை உணர்ந்திருப்பார்

வெள்ளையுடை, பிள்ளைகளின் கல்வி, அயல் நடக்கும்
நன்மை நிகழ்வுக்கு மொய் எழுதல்
பல்வகைப் பொதுநிதிப் பட்டியலுக்கு
கிள்ளித் தெளித்தல்... அப்பப்பா
பொருளியலில் கலாநிதி பெற்றவரின் மேலாவாள்
நடுத்தரத்தான் மனைவியென்றால் மிகையில்லை
மண்டையக் குடைந்து, மனைவியும் நானும்

மாதாந்த 'பட்ஜெட்" தயாரித்து - எப்படியோ
வண்டியை ஓட்டி - நின்று
முக்கால் நூற்றாண்டை நிறைவு செய்த
முதுகிழவனுக்கு ஓர் நப்பாசை - தப்பு, தப்பு
நடுத்தரத்து வருவாயில் இடுக்கிப் பிடித்து
தம்மை ஒடுக்கி எம்மை வளர்த்த
தந்தைக்கும், அனுசரனையாய் இருந்த அன்னைக்கும்
நன்றி விழாவாக என்மூன்று கிளைகளொடு
உபகிளைகள் ஆறும், உறவுகளும், நட்புகளும்
என்னிடம் கற்றுயர்ந்த பல்வேறு மாணவர்களும்
எடுக்கும் பவளவிழா.
நப்பாசையோ அன்றி, தப்பாசையோ
நான் அறிவேன்

நன்றி வணக்கம்

வே. இளையகுட்டி


VALLAI - EAST SPORTS ASSOCIATION

V. E. S. A.

KOPAY DIVISION

1968 1969

This Certificate is Awarded

to V. Elayakotty.

of Venus Puttor Sports Club

for obtaining the 1st Place

in 220 metres.

President

Joint Secretaries

JOTHI PRESS, JAFFNA.



## பாராட்டி வாழத்துகிறோம்.

இலங்கை இந்து கலாச்சார அமைச்சால் கொழும்பு 7 இல் அமைந்துள்ள ஜோன் டி.சில்வா கலை அரங்கில் இன்று 17.12.2011 நடைபெறும் கலாசார விழாவில்

கௌரவ

# "கலாபூஷனம்"

விருது பெறும் புத்தூர் மணற்பகுதி

**திரு.வே. இளையகுட்டி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளையும் பெற புத்தூர் ஸ்ரீ புவனேஸ் வரி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

பரிபாலனசபையினரும், அங்கத்தவரக்ளும்,
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்,
மணற்பகுதி, புத்தூர்.

# இலக்கியத்துக்கான கலாபூஷணம் விருது இளைய குட்டிக்கு வழங்கி கௌரவிப்பு


(12.01.2012 தினக்குரல்)

**2011** ஆம் ஆண்டுக்குரிய கலா பூஷணம் விருது வழங்கும் நிழக்வு கடந்த டிசம்பர் மாதம் கொழும்பு ஜோண்டி சில்வா கலையரங்கில் நடை பெற்றபோது இலக்கியத் துறைக்கான விருதினை புத்தூர் வே. இளையகுட்டி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட பிரபல திரைப்பட நடிகை மாலினி பொன்சேகா இவ்விரு தினையும், காசோலையையும் வழங்கி கௌரவித்தார். இவர் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர் என்பதுடன் பல கவிதைப் போட்டிகளில் பரிசில்களையும் பாராட் டுக்களையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்தாண்டு ஆளுநர் விருதினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



பவளவிழா நாயகனும், மனைவியும்-இளமைத் தோற்றமும் - 1963



பவளவிழா நாயகனும் தற்போதய தோற்றமும் - 2012



புத்தூர் மணற்பகுதி வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழா நிகழ்வில் வெற்றியாளர் ஒருவருக்கு பரிசளிக்கும் போது.....



புத்தூர் மணற்பகுதி "வீனஸ்" விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தியபோது.....



மூன்று பிள்ளைகளினதும் இளமைத் தோற்றம்

# மக்கள் முகம்



கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வருடந்தோறும் நடத்தும் கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வில் **2011** ஆம் ஆண்டுக்குரிய விருது பெறுவோரில் புத்தூர் வே. இளையகுட்டி இடம்பெற்றுள்ளார். இவர் ஓய்வுபெற்ற ஆசிரியராவார். இவர சென்ற ஆண்டு ஆளுநர் விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளிவிழா எழுத்தாகப் போட்டியில் மரபுக் கவிதை ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "ஆண்பாவம்" என்னும் கவிதைத் தொகுப்ப நூலையும் வெளியிட்டிருந்தார்.

சமூகப் பார்வையில் நாட்டமுள்ள இவர் கவிதை ஆற்றல், சமய இலக்கியத்திலும் வெளிப்பட்டிருந்ததால் தமது ஊரான புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் போரில் கீர்த்தனை வடிவத்தில் இரண்டு பாமாலைகளை ஆக்கியிருந்தார். இந்தப் பாமாலைகள் தென்னிந்தியா இசையமைப்பாளர் ராஜ்குமார் பாரதியின் இசையமைப்பில் உருவாவை.

சங்கீத பூஷணம் சி. பத்மலிங்கம் அவர்களின் பிள்ளைகள் வசந்தன், ஜெகீதா, ஆகியோரின் இனிய குரல் வண்ணத்தில் இறுவட்டு வடிவில் வெளிவந்துள்ளன. இலக்கியத்துறைக்கு ஆற்றிய பணிக்காக புத்தூர் வே. இளையகுட்டி அவர்கள் இவ்வாண்டு "காலா பூஷணம்" விருது பெறுகின்றார்.



JAFFNA DISTRICT

Teachers' Track & Field Athletic Meet

(Organised by the Education Dept.)

This is to Certify that

of ... was placed

FIRST / ~~SECOND~~ / ~~THIRD~~

in the 100 M event

Date ...

JAFFNA.

Director of Education
Northern Region



# நவீனத்துவம் என்ற பெயரில் தமக்கே புரியாமல் பலர் கவிதைகளை கையாள்கிறார்கள்

07.02.2010 அன்று தினக்குரல் பத்திரிகை வாரமஞ்சரியில் பிரசுரமான நேர்காணல்

இலக்கியச் செல்நெறியில் பல புதிய முகங்கள் நாளுக்குநாள் எமக்கு முன் தலைகாட்டுகின்றார்கள். சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம், ஆய்வு என்று இன்னும் பல வகையாகப்பிரிக்கலாம். இதற்குள் பக்தி இலக்கியமும் ஒரு தனி இடத்தை வகித்துக்கொள்கிறது.இன்றைய நவீன சாதனங்களின் வருகையானது பக்தி இலக்கியத்திற்கும் பங்களிப்பை வழங்கிவருகிறது. ஆலயங்கள் மீது தோத்திரப்பாடல்கள் அல்லது இசைப்பாடல்கள் வெளியீடு செய்வதாகும். அன்று இலங்கை வானொலியே "பக்தரஞ்சினி" நிகழ்ச்சியினூடாக ஆலயப்பாடல்களை வழங்கியது. இன்று ஆலயப்பரிபாலனசபைகளாலும், தனியாராலும் இவைகள் ஒலிப்பேழை அல்லது இறுவெட்டு வடிவம் பெற்றுவிடுகிறது. இந்தவளர்ச்சியானது ஒரு முன்னேற்றகரமான விடயமாகும். அதேபோன்று இலக்கியத்துறையிலும்; வாரம்மூன்றே அல்லது நான்கோ இலக்கிய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் இலக்கியப் பணியின் வளர்ச்சி என்றே கூறவேண்டும்.

இலக்கிய உலகில் குறுகிய காலத்துள் நன்கு அறியப்பட்ட கவிஞராக புத்தூர் வே.இளையகுட்டி திகழ்கிறார்கள். தனது ஐம்பதாவது வயதிலேயே கவிதை எழுதி பத்திரிகைகட்கு பிரசுரிக்கும் ஆவலைப்பெற்று சிறந்த ஆசிரியராக ஆறாம்வகுப்பு மாணவர்களுக்கு சேர்ந்து தானும் ஒரு மாணவனாக பாடல்களை பாடியும், கதைகள் சொல்வதிலும், சிறந்த பயிற்சிகளையும் வழங்கிப் பெயரெடுத்தவர். உயர்வகுப்பு மாணவர்களுக்கும்ஆசிரியத்தை வழிநடத்தியவர். பதுளை, யாழ்ப்பாணம் என்று இவரது கல்விச்சேவை வியாபித்திருந்தது. இசை, ஞானம் இயற்கையாகவே இவருடன் சேர்ந்துகொண்டது. கவிதை எழுதும் ஆற்றல் மிக்க இக்கவிஞர் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தும் தனது இளவயதில் மரபுப்பண்டிதர்களின் அச்சுறுத்தலினால் கவிதை எழுதுவதை தவிர்த்துக் கொண்டவர். மரபுக்கவிதையினூடாக தனது ஐம்பதாவது வயதிலேயே பத்திரிகைகள் ஊடக இலக்கிய உலகிற்கு வந்தவர். இவரது கவிதகள், சஞ்சீவி, தினக்குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும், இலங்கை வானொலியிலும், ஜீவநதி சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளது. 'ஆண்பாவம்' என்ற கவிதைத் தொகுப்பையும் வெளிக்கொணர்ந்தவர். தமது ஊர் ஆலயத்தின் 'இசைத்தமிழ்பாமாலை' என்ற தொகுப்பின் பாடலாசிரியரும் இவரே. சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் முன்னணி வீரராகவும் விளையாடிய பெருமை இவருக்குண்டு. புத்தூர் வே.இளையகுட்டி அவர்களை கொழும்பில் சந்தித்து பெற்ற அனுபவத்தை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.

**கேள்வி:- இலக்கியத்துறையில் உங்க ளுக்கு ஆர்வம் ஏற்பட்டது?**

பதில்:- நான் கல்வி கற்றது ஆவரங்கால் மெதடிஸ்மிஷன் பாடசாலை. (இப்போ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) எனக்கு ஆங்கில பாடசாலைகளில் படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதனால் நான் கற்ற பாடசாலையிலேயே தமிழ் இலக்கியம், தமிழ்மொழி இரண்டையும் எனது ஆசிரியர்களிடம் கற்று வகுப்புகளில் திறமையை வெளிப்படுத்தினேன். ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய "வீரமாநகர்" என்ற நூலே என்னை கவிதையில் நாட்டம் பெறவைத்தது. இந்நூலின் சொல்லடுக்கு, கவிதை ரசனை என்பன என்னைப் பெரிதும் கவர்ந்தது. அதேபோல சமய இலக்கியங்களில் "திருவருட்பயன்" போன்றவையும் என்னை கவிதை இலக்கியத்தில் நாட்டம் கொள்ளவைத்தது.

**கேள்வி:- காலங்கள் கடந்தே கவிதை எழுத ஆரம்பித்துள்ளதற்கான காரணமென்ன?**

பதில் :- இருபத்து நான்கு வயதில் நான் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் கவிதைகள் எழுதியபோது; கவிதைகளை எழுதும் என் சக ஆசிரியமாணவன் பத்திரிகைகட்கு கவிதைகள்" எழுதிக் கொண்டிருந்தார். அவர் என்னை பய முறுத்தி விட்டாரென்றே கூறவேண்டும். யாப்பு இலக்கணம் தவறாமல் எழுத வேண்டும். மிகக் கவனமாக எழுத வேண்டுமெனக்கூறி எனக்கிருந்த ஆர் வத்தை மழுங்கடித்துவிட்டார். ஐம்பது வயதை அடைந்தபோதே எழுத ஆரம் பித்தேன். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூ ரியில் படிப்பித்துக்கொண்டிருந்தகாலத்தில் ஆசிரியர் தினம் வட்டாரரீதியில் நடை பெற்றது. அன்றைய விழாவில் கவியரங் கில் பங்கேற்றேன். அன்று எனது கவி தைகள் எல்லோரது பாராட்டையும் பெற் றது. வட்டாரக்கல்வி அதிகாரி என்னை கட்டித்தழுவி பாராட்டுத்தெரிவித்தார். அப்போதுதான் என்னிடமும் ஏதோ திறமை உள்ளது என எண்ணி கவிதை எழுத ஆரம்பித்தேன். சஞ்சீவி பத்திரிகைக்கு கவிதைகளை எழுத ஆரம்பத்த நான் தொடர்ந்து ஈழத்துப் பத்திரிகைகட்கு எழுத ஆரம்பித்தேன். சஞ்சீவியில் வெளிவந்த கவிதையை இலங்கை வானொலியில் "கவிதைக்கலசம்" நிகழ்ச்சிக்காக இளையநம்பி தயானந்தா எடுத்து ஒலிபரப்பினார். அக்கவிதையின் தலைப்பு "ஆண்பாவம்" என்ற தலைப்பையே எனது கவிதைத் தொகுப்பிற்கு தலைப்பாக அமைத்துக்கொண்டேன்.

**கேள்வி :- ஆண்பாவம் கவிதைத் தொகுப்பை வெளியிட எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

பதில் :- வடமராட்சியின் ஆசிரியர்கள் எனக்கு பெரிதும் உற்சாகம் கொடுத்தார்கள். முக்கியமாக அமரர் ஜே.எஸ்.கிறிஸ்ததாஸ் ஆசிரியர் அவர்களே முன்னின்றார். போர்க்காலச் சூழலிலும் 2002 ஆம் ஆண்டு இந்நூலை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் வெளியீடு செய்து வைத்தேன்.

**கேள்வி :- உங்களது கவிதையின் பாடுபொருள் எதுவாக இருந்தது.**

பதில் :- மக்களின் வாழ்வு, துயரம் சார்ந்த
தாகவே இருந்தது. அவை பற்றியே எனது கவிதைகள் அமைந்திருந்தது. எழுது என்று யாராலும் தூக்கிவிடப்பட்டவனல்ல நான். எனது எழுத்தே எனக்கு ஒரு அங்கீ காரத்தைத் தந்தது.

**கேள்வி :- படைப்பாளிகள் தங்களுக்கு ஒரு குருவையோ, வழிகாட்டியையோ வெளிப்படுத்துவார்கள். இதில் நீங்கள் எந்த வகையில் அடங்குவீர்கள்?**

பதில் :- எனக்கு நானே என்றாலும் கவிஞர் முருகையனின் கவிதைகளில்

என்னை பறிகொடுத்து அதனூடாக அவரை எனது மானசீக குருவாக ஏற்றுக்கொண்டேன். கவிஞர் முருகையன் அவர்கள் மஹாகவி, நீலவாணன் ஆகியோரோடு வைத்துப் பேசப்படும் ஒருவர். அவரது கவிதைகள் மரபோடு, எளிமையும் மக்களுக்கு புரியும் படியான வகையிலும் அமைந்திருக்கும். மஹாகவியின் கவிதைகளை பாட நூல்களூடாக மாணவர்களுக்கு புரிய வைத்துள்ளேன்.

**கேள்வி:- இன்றைய கவிதைகளின் நிலை பற்றிய தங்கள் கருத்து என்ன?**

பதில்:- மரபு, புதுக்கவிதை என்பதற்கப்பால் நவீனத்துவம் என்றெல்லாம் புகுவந்துவிட்டது கவிதைகள் எவையானாலும் சொல்லாட்சி, சொல்வளம் மிக்கவையாக அமையவேண்டும். இன்று வெளியீட்டு வைபவங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அன்று நூல்கள் வெளியிட எழுத்தாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இன்று நவீன அச்சுசாதனங்களால் எல்லாமே வளர்ச்சி அடைந்துவிட்டது. எழுத்து என்ற வடிவங்களில் பல கோலங்களை கவிதையாக வடிக்கிறார்கள். எழுத்து என்பது மக்களைப் பற்றிய பாடுபொருளாக இருக்கவேண்டும். மக்களுக்கு புரியும் படியாக இருக்க வேண்டும். நவீனத்துவம் என்ற பெயரில் யாருக்குமே ஏன் தனக்கே புரியாமலே பலர் கவிதைகளைக் கையாள்கின்றனர். அவை இலக்கியமல்ல.

**கேள்வி:- கவிதை எழுத ஆரம்பித்த நீங்கள் "புதுவை புவனேஸ்வரி அம்பாள் இசைத்தமிழ் பாமாலைக்கு பாடல்களும் எழுதியுள்ளீர்கள். எனவே, பக்தி இலக்கியத்துள்ளும் உங்கள் திறமையை வெளிக்காட்டியுள்ளீர்கள்?**

பதில்:- இது சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்டதொன்று. எனது இளம் பருவத்தில் திராவிடர் கழகத்தில் பற்றுக்கொண்டு அதன்வழிநடந்தேன் ஆசிரியராக இருந்ததால் சமய அறிவைப் பெற்றிருந்தாலும் பெரிதாக அதனுள் நுழைந்து எனது தேடலில் இறங்கவில்லை. முதிர்பருவத்தின் ஆரம்பத்தில் ஆன்மீகத்தில் பற்று இருந்தது. ஏழைகளுக்கு ஏதும் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக இருந்தேன். எமது ஊரின் ஆலயத்திற்கு இசைப்பாடல்கள் பாடவேண்டும் என்ற கோரிக்கையை சங்கீதபூஷணம் S. பத்மலிங்கம் அவர்கள் ஆலய பரிபாலன சபையிடம் வைத்தார். எமதூரவரே, "வாத்தியார்" தான் எழுதவேண்டும்மெனவும் கோரிக்கைவிடுத்தார். பத்மலிங்கம் அவர்கள் எனது மாணவன். என்னை எப்போதும் வாத்தியார் என்றே அழைப்பார். அதனை ஏற்று எழுதமுற்பட்டேன். சமயத்தில் பெரும் ஈடுபாடு இல்லாத நான் எப்படி எழுதுவேன் எனச் சிந்தித்தபோது கோப்பாய் சிவானந்த சர்மாவிடம் (கவிஞர் கோப்பாய் சிவம்) புவனேஸ்வரி அம்மன் பற்றிய தகவல்களை பெற்று பாடல்களை எழுதலானேன். எமது கிராம வளங்கள் பற்றியும் இப்பாடல்களில் குறிப்பிட்டுள்ளேன்.

**கேள்வி :- பாடலாசிரியர் என்ற வகையில் புவனேஸ்வரி அம்பாள் இசைப்பாமாலை பற்றிய கருத்து என்ன?**

பதில்:- இப்பாடல்கள் மிகவும் அழகாக வரிகளுக்கு வரி புரியும்படியாக இசையமைத்து பாடப்பட்டுள்ளது. சங்கீத பூஷணம் பத்மலிங்கம் அவர்களது முயற்சியால் இப்பாடல்கள் சென்னையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்கீதபூஷணம் S. பத்மலிங்கம் அவர்களும் அவரது மகன் S.P.வசந்தனும், அவரது மாணவியும் கேரளாவைச் சேர்ந்தவருமான கே.ஆர். சியாமாளவும் மிகவும் சிறப்பாகப்

பாடியுள்ளனர். பாடல்களுக்கான இசையமைப்பை சுப்பிரமணிய பாரதியரின் கொள்ளுப் பேரன் ராஜ்குமார் பாரதி இசையமைத்துள்ளார். அவரது குழுவனரே அணிசேர் கலைஞர்களாகவும் பங்காற்றினார். இவர்களுடன் S.P வசந்தன் மெண்டலின் வாத்தியத்தையும் வாசிக்கின்றார். சென்னையில் கற்கும் இவர் டிப்ளோமா இன் மியூசிக்கில் மெண்டலின் ஸ்ரீனிவாசனின் முதல்தொகுதி மாணவனாகவும் உள்ளார். எனது பாடலுக்கு, அனைத்து கலைஞர்களும் ஒன்றிணைந்து வெற்றிபெற்றுள்ளனர்.

**கேள்வி:- சங்கீதபூஷணம் பத்மலிங்கம் அவர்கள் பற்றியும் இசையமைப்பாளர் இராஜ்குமார் பாரதி பற்றியும் கூறமுடியுமா?**

பதில்:- புத்தூர் விஷ்ணு வித்தியாலயத்தில் என்னிடம் பாடம் கற்றுக்கொண்டிருந்த பத்மலிங்கம் அவர்களை நாமெல்லோரும் அவரது குரல் வளத்தை அறிந்து வைத்திருந்தோம். தமிழ்த்தினப் போட்டிக்காக இவரைவைத்து "மார்க்கண்டேயர்" எனும் நாடகத்தை நமது தலைமை ஆசிரியர் முருகேசு அவர்கள் நெறிப்படுத்தினார். இந்நாடகம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது. அப்போது அந்நாடகத்தில் சிவலிங்கத்தைகட்டிப் பிடித்து மார்க்கண்டேயர் சிவரஞ்சினி ராகத்தில் பாடுகின்றார். பாடி முடிந்ததும். அக்கல்லூரி மாணவன் அவ்விடத்திற்கு வந்து இப்போது ஒருவர் பாடினரே அவர்யாரெனக் கேட்டார். நாம் பத்மலிங்கத்தை காட்டினோம். அவர் பத்மலிங்கத்தை பாராட்டினார். பாராட்டிய மாணவன் மு.செ. விவேகானந்தன். அவரும் பின் நாளில் பாடகராகத்திகழ்ந்தவர். அப்போ நாங்கள் எமக்குள் "ஒரு சங்கீத விற்பன்னன்" வருகிறாரென்று பேசிக்கொண்டோம். எமது கனவுகளும் நனவாகியது. அடுத்து சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரனார் ராஜ்குமார் பாரதி பாரதியாரின் உடைமைகள் அவரிடம் தான் உள்ளது. அவற்றைப்பெரும் பொக்கிஷமாக காத்துவருகிறார். எனது பாடல்களை எவ்வித சிரமுமின்றி இசையமைக்க முடிந்தென தொலைநகலூடாக செய்திபரிமாறினார் இதுவும் எனக்கு பெருமகிழ்வுதான்.

**கேள்வி :- அடுத்து உங்கள் இலக்கிய வெளியீடுகள் எப்போ வெளிவரவுள்ளது?**

பதில் :- எனது பவளவிழா 2012 இல் கொண்டலாடப்படும்போது எனது இரண்டாவது கவிதைத் தொகுதியை வெளியிட எண்ணியுள்ளேன் எதிர்வரும் ஆனிமாதம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மகோற்சவத்தின் போது சங்கீதபூஷணம் பத்மலிங்கம் குடும்பத்தினரின் குரலிலேயே "இசைப்பாமாலை" இறுவெட்டு வெளியிடவுள்ளோம். அதனையும் சென்னையில் தான் ஒலிப்பதிவு செய்யவுள்ளோம்.

## வடக்கின் அபிவிருத்தி , புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

### இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

கலைஞானகேசரி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 18.11.2001 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திய மூத்த கலைஞர் கௌரவிப்பின் போது யாழ்ப்பாண மாவட்ட ..... கோப்பாய் ..... பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திரு/திருமதி/செல்வி ..... வே. இளையகுட்டி (மங்குறை) ..... அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி கலைஞானகேசரி என்னும் பட்டம் அளித்து இச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்

True Copy
H. Anandakrishnan.
S. ANANDAKRISHNA,
JUSTICE OF THE PEACE
26.05.2009

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும்
வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு.

வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு, இந்து சமய கலாச்சார அலுவலகள் திணைக்களம் இணைந்து நடாத்திய மூத்த கலைஞர் கௌரவிப்பில் "கலைஞான கேசரி" பட்டம் பெற்ற சான்றிதழ்



மூத்த மகனின் குடும்பம்



மூத்த பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவின் போது.....




"ஆண்பாவம்" கவிதைத் தொகுதி வெளியீடு 2001 இல் நூலாசிரியர் முதற்பிரதி வழங்க யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. இ. இரட்ணம் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.....




பேரப்பிள்ளைகளுடன்.....





2011 ஆம் ஆண்டுக்குரிய கலாபூசனம் விருது பெறுவோரில் ஒருவராக கொழும்பு ஜோன்டிசில்வா கலையரங்கில் பழம்பெரும் திரைப்பட நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திருமதி. மாலினி பொன்சேகா அவர்களிடமிருந்து விருது பெறுதல்.....



ஆளுநர் விருது(2010) பெற்றபோது விருதுகளுடன்.....




புதுவை மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மீது ஆக்கப்
பெற்ற பாமாலையின் இசையமைப்பாளராகும் மகாகவி பாரதியின்
கொள்ளுப் பேரனுமாகிய திருராஜ்குமார் பாரதி அவர்களால் கவிஞர் வே.இளையகுட்டி அவர்களுக்கு
மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட பாராட்டுச்செய்தி



தமிழ்ச் சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கை

Tamil Society

University of Peradeniya

Sri Lanka

2003ம் ஆண்டு தமிழ்ச்சங்கத்தின் பவளவிழா வையொட்டி நாடளாவிய ரீதியில்

சிறப்புப் பிரிவு ........ மட்டத்தில் நடாத்தப்பட்ட

கவிதைப் ........ போட்டியில் ........ சிறப்பு

இடம் பெற்றமைக்காக ........ புத்தூரைச்

சேர்ந்த ........ திரு. வே. இளையகுட்டி. ........ அவர்களுக்கு

இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

*This certificate is awarded to* ........ V Elayakutty

*from* ........ Puttur

*for / being placed* special *in the Inter* ........ Special, Poetry

*Competition held at the National Level organised to commemorate*

*Tamil Society's* **75th Anniversary** *Celebrations in 2003.*

| Prof. M.A. Nuhman | Mr. M. Rubavathanan | Dr. P. Saravanakumar |
|---|---|---|
| Senior President | President | Senior Treasurer |

பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பவளவிழாக் கவிதைப் போட்டியில் திறந்த பிரிவில் சிறப்புப் பரிசுச் சான்றிதழ்



# உதயன்

## வெள்ளிவிழா

### எழுத்தாக்கப் போட்டி 2010

## பாராட்டுச் சான்றிதழ்

உதயன் வெள்ளிவிழா 2010 எழுத்தாக்கத் தேர்வில்

திரு/திருமதி/செல்வி ...லே.. இளையகுட்டி......................

அவர்களின்....கவிதை : "எங்கனம் மனிதம் வாழும்"......

முதலாம்/இரண்டாம்/மூன்றாம் சிறப்பு இடம் பெற்றமையைப்

பாராட்டி இச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

நிர்வாக இயக்குநர்


பிரதம ஆசிரியர்

எழுத்தாக்கத் தேர்வுக்குழுத் தலைவர்

Dr. T. KALAMANY EdD (Aus)
Senior Lecturer, Dept. of Ed.
UNIVERSITY OF JAFFNA



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரித் தமிழ் சங்கத்தால் வெளியிடப்பட்ட
"புதுவை" சஞ்சிகையை கவிஞர் வே. இளையகுட்டி
வெளியிட்டு வைக்க. முதற் பிரதியை முதன்மை ஆசிரியை
திருமதி கௌரி முகுந்தன் பெற்றுக்கொள்கிறார்.



J / Saiva Training College Inter House Sports Meet

TRACK & FIELD ATHLETIC MEET

1962

THIS IS TO CERTIFY THAT

V. ELAYACUTTY

[illegible] House

obtained the

FIRST PLACE

in 100 METRES event

President.


குறுந்தூரா ஓட்ட வீரனாகப் பெற்ற சான்றிதழ்



வலி கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவையால் "செம்புலக் கலைஞர்" கௌரவம் பெற்று யாழ்மாவட்ட முன்னால் அரசாங்க அதிபர் உயர்திரு கே. கணேஷ் அவர்களால் பொன்னாடை போர்த்தி, திலகமிட்டு கௌரவிக்கப்பமுகிறார் பிரபல எழுத்தாளரும் கோப்பாய் பிரதேச உதவி அரசாங்க அதிபராகிய செல்வி பிரேமினி (தாட்சாயினி) அவர்களும் அருகில் நிற்கிறார்



இளைய மகனின் குடும்பம்



ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம குருவினால் பொன்னாடை
போர்த்தி கௌரவிக்கப்பட்டபோது



உதயன் பத்திரிகையின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட
போட்டியில் சான்றிதளினை முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபையின்
திரு. சு. டிவகலாலா அவர்கள் வழங்கியபோது.....

Ministry of Sports
Northern Province Inter D. R. OO Divisions
Sports Festival, 1969

# First Track & Field Athletic Meet

**1969**

This is to Certify that
*V. Elayakutty* of *Valli East - Kopay* D. R. O. Division
Representing the
Mannar. Vavuniya, Jaffna District
obtained the

**SECOND PLACE**

in the
*100 Metres* for *Men*
held on 24th, 25th September 1969
at the Jaffna Stadium.

| F. C. Pietersz<br>G.A., J.D. | 25-9-69 | A. D. P. Jesudason<br>Inspector of Sports, N.P. |
|---|---|---|

குறுந்தூரா ஓட்ட வீரனாகப் பெற்ற சான்றிதழ்

# பவள விழா நாயகனின் குடும்ப விருட்சம்

**நாயகன்:** திரு.வே. இளையகுட்டி

**நாயகி:** திருமதி இ. ஸ்ரீரஞ்சனா தேவி

**புத்திரப்பேறுகளும், மருவியோரும்**

நிர்மலன் + பாலகௌரி
சாருமதி + அசோகன்
சாரங்கன் + தயாளினி

**மூன்றாம் தலைமுறை முத்துக்கள்**

தரங்கிணி, லதாங்கி,
அபிநயன், நர்த்தனன்,
அட்சயன், பபிஷா



விழா நாயகனது முழுக்குடும்பம்

## இயல் - 03

# கவியியல்



## "சமூகக் கவிக் கடமை"

*கவிதைத் தொகுப்பு*

புத்தூர் வே. இளையகுட்டி

## கவிதைத் தொகுதிக்கான என்னுரை

ஐம்பதுக்குமேல் அகவை வந்தபின்தான் கவிதைக்கென்று எழுதுகோல் எடுத்தேன். பத்திரிகைகள் அவற்றைப் பிரசுரித்து அங்கீகாரம் தந்தன. ஆசிரியத் தொழில்புரிந்து ஓய்வுபெற்றபின் அவற்றைத் தொகுத்து 'ஆண்பாவம்" எனும் தலைப்பில் வெளியீடு செய்தேன். "முதுமையில் பிறந்தாலும் கவிதைக்குழந்தை அழகாகவும், துடிப்பாகவும் இருக்கிறது" என்று ஆவர்லர்கள் சொன்னார்கள். பெருங்கவிஞர் முருகையன் அவர்கள் அளித்த அணிந்துரை இளமையை மீட்கும் ஏதோ" மாத்திரையாக இருந்தது. மேலும் எழுதத்தூண்டியது. எழுதியவை அத்தனையும் பிரசுரமாகின. இவற்றைவிட கவிதைப் போட்டி முடிவுகள் சில, பிரதேச ஆவண நூல்களில் எழுதிய வாழ்த்துக் கவிதைகள், கீர்த்தனை வடிவில் அமைந்து இறுவட்டு வடிவில் வெளியான பக்திப்பாடல்கள் என்பன பற்றிய சாதகமான மதிப்பீடுகள் 'நீயும் கவிஞன்தான்" என என்னைச் சுட்டுவன போல் உணர்ந்தேன்.

இனியும் ஒரு தொகுதியை வெளியிடவேண்டும் என்ற எண்ணத்தை தீர்மானம் ஆக்கின. இந்த இரண்டாவது கவிதைத் தொகுதியை நண்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் எனது பவளவிழாப் பரிசாக அளிக்கிறேன்.

இந்தத் தொகுதிக்கு கவிஞர் த.ஜெயசீலன் (பிரதேச செயலர்) வழங்கிய இரத்தினச் சுருக்கமான, கவிதை வடிவில் அமைந்த அணிந்துரை சிறப்பித்து அணி செய்கின்றது. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

- நன்றி

வே. இளையகுட்டி

# கவிஞனின் பார்வையில் இவர் கவிகள்

பொன் விளைக்கும் பூமி புத்தூர் பதியினிலே
இன்பத் தமிழுக்கும் இசைக்கும்
கவிதைக்கும்
விஞ்சும் சமய விழுமியச் சிறப்பிற்கும்
பஞ்சம் இருக்காது!
பரம்பரைப் புகழ் இங்கே
கொஞ்சமும் குறையாது!
பசுமை குடை பிடிக்க
நெஞ்சை நிறைய வைக்கும்
நெடுநெடொன்ற வாழைகளும்
எண்ணற்ற காய் கறியும்... புகையிலையும்
இறைந்திருக்கும்.
தோட்டமும் தங்க நிறவயலும்
மாடெல்லாம்
மேயும் தரவை குளம் கோவில் வெளி
ஆடம்பரமின்றி அழகு கொலுவேறி
ஆழும்பதி புத்தூர்

அப்பதியின் கவித்தோன்றல்;
புதுவை வழி வந்த எளிய கவி; முதுமைக் கவி
நரை காணாத
புத்தூர் இளைய குட்டி
ஆக்கிப் படைத்த அருமைச் சிறுபாக்கள்
சிந்தனையில் சிந்திச் சிதறிய துளிக்கவிகள்

ஆலயங்கள் மீது ஆன்ம
மெழுகுருகிப்
பாடிக் கொடுத்திட்ட பாடல்கள்
தமைத்திரட்டி
நாமும் உருசிக்க நல்விருந்தாய் தந்துவிட்டார்
அன்பர் கவிதை எளிமைக்கு உவமானம்

அன்பர் கவிதை சமூகத்தைக் கிண்டலிடும்
ஆர்ப்பாட்டம் இன்றி
ஆரவாரம் சொற்சிலம்பம்
ஏதுமின்றி
யாரும் புரியும் எளிய நடை
யாரும் இரசிக்கும் எளிய நயம் ததும்புகிற
வண்ணக் கவி தந்தார்!

புதுவைப் பதியுறையும்
சக்திக் கடவுளர்கள்; அவருறையும் தலங்களின்மேல்
பக்திப் பனுவல்கள் பல படைத்தார்
இறுவட்டில்
இடம் பெற்றிருக்கும் இனிய பல இசைப் பாடல்
யாத்து இசைமழையில்
காற்றும் நனையவைத்தார்!
இந்தத் தொகுப்பவரின் முழுமைத் தொகுப்பல்ல
இன்னும் கிளைவிரித்து
இவர்கவிதை வளரவேண்டும்
எங்கள் நிலையை எடுத்தியம்பி
எம்மிடர்க்கு
என்ன பரிகாரம் என்று கண்டு
தெளிந்துகூறி
எங்கள் நல்வாழ்வுக்கு, எங்களது மீட்சிக்கு
என்ன வழிகளென்று இவர்கவிதை பேசவேண்டும்
எங்கள் எதிர்காலம் இனிதாக
இன்னும்பல தெய்வங்களை வேண்டி
திருப்பாடலால் இறைஞ்சி
எல்லோரும் இன்புற்று இருக்க வைக்கும்
இலட்சியத்தை
நோக்கியவர் நடந்து நுட்பமின்னும் பலபயின்று
ஆக்கம் பல ஈழத்தாய்க்கு இவர் தரவேண்டும்.

**கவிஞர் த. ஜெயசீலன்**

# குடியிருப்பு

முத்தன் குடியிருக்கும்
அந்த நிலம்
மூன்று தலைமுறையாய் - அவன்
அப்பனும் அப்பனுக்கு அப்பனும்
கொத்திப் பயிரிட்டு
மூலையில் ஓர்
கொட்டிலிட்டு
வற்றிய உடலோடு
வாழ்ந்த இடம்

முதலாளி
சங்கரப்பிள்ளையின்
முதுசொமாம் அந்நிலத்தில்
முருகனுக்கு

கோவில்கட்டி குட
முழுக்காட்டுச் செய்து
மறுமையில் இறையின்பம்
பெறவேண்டும் என எண்ணி
மனையென்று சொல்லும்
சிறுகுடில் பிடுங்கி
மகேசன் மகனுக்கு
பெருங்கோவில் எழுந்தது.

கலச முழுக்காட்டுக் காணவந்தோர்
காதலாகி கசிந்து கண்ணீர்மல்க
வீடிழந்த முத்தனும்
விம்மியழுதான்

**ஜீவநதி தை - மாசி இதழ்**

# அவமானச் சின்னம்

நாலூரும் புகழ்பெற்ற சோதிடனின்
ஆலோசனை பெற்று,
அத்திவாரம் வெட்டி
கோள்நிலை பார்த்து
நாள்நிலை நிமிர்த்தி
நால்வகை வேலைக்கும்
நல்லநாள் தேர்ந்து
நாலு தலைமுறைகள்
வாழுமென நம்பி
ஏழூரும் மெச்ச
எழும்பிய மாளிகை!

ஓடிழுந்து, மரம்முறிந்து, சுவரிடிந்து
பூவிழந்த பெண் போல
தோற்றுதற்கு காரணம் யார்?

தானிறந்த பின்னாலே
யாருக்குச் சொந்தமென
ஆவணத்தில் தருமுன்னே - இதற்குரியோன்
காலன் வசப்பட, வாரிசுகள் வழக்கிட
வருடக்கணக்கில் கோப்புக்கள் துயில் கொள்ள,
தீர்ப்புக்காய் காத்திருக்கம் ஓரிரத்த வாரிசுகள்
தீண்ட முடியாத தீட்டான அவ்வீட்டின்
கள்வர்கள் கைவரிசை காட்டிய மீதிகள்
கறையான்கள் பதம்பார்க்க
உறவுக்கோர் அவமானச் சின்னமாய்
நிலைபெற்று நிற்கும் இடிபாடு.

**உதயன் 13.04.2008**

# காணிக்கை கண்ணீரே

நாடகப் பட்டறையில் புடம் போட்டு
நடிப்புலக நுண்மைகளில் நன்கு தேறி
நவரசங்கள் முகத்தில் நடம் புரியவைத்து
நம்மயிர்க்கால் சிலிர்க்கவைத்த கலையின் குன்றே

கலைஞரது சாட்டைநிகர் வசனந் தன்னை
கவிச்சுவையாய் கனல்தெறிக்க முழக்கம் செய்து
பகுத்தறிவுப் பெட்டகமாய் பரிமனித்த
பராசக்தி தந்த குண சேகரனே!

தாளலயம் தவறாத வசனம் உன்தன்
நாவுவழி நதியெழுக்காய் ஒலித்தபோது
பாமரனை, படித்தவனை பேதம் இன்றி
பைத்தியமாய் ஆக்கி வைத்த மனோகரனே

நாதசுர நறுக்குன்தன் வாய் நுழைத்து
பாதங்கள் தாளமிட சிரம சைத்து
சேதுராமன் குழலிசைக்கு உயிர் கொடுத்த
தில்லானா மோகனம்பாள் ஷண்முகனே

செக்கிழுத்து நெக்குருக வைத்துக் கண்ணீர்
சிந்த வைத்த சிதம்பரனே வெள்ள யர்முன்
சீற்றமுடன் மண்பெருமை சாற்றி நின்று
சிந்தையெல்லாம் நிறைந்தவனே கட்ட பொம்மா

சிரிப்பதற்கும் அழுவதற்கும் நடிகர் உண்டு
சிரித்தவண்ணம் அழுவதற்கு யாவருண்டு
கலைக்குநிகர் எவருமில்லா திலகமே எம்
கண்ணீரே காணிக்கை ஆக்குகின்றோம்.

**-உதயன்-**

# நன்று தூங்கும்

ஆறு திங்கள் கும்பகர்ணன்
நீண்ட துயில் கொண்டானென்றால்
அதிசயம் என்னஉண்டு?
அவனிலும் பன்மடங்கு விஞ்சியவர்
நாமன்றோ
தேர்தல் முடிந்தவுடன் தூங்குகின்ற
தேருநர் நாம்!
ஆறாண்டு கழிந்து "அடடா" என்றெழுந்து
கண்ணைக் கசக்குகின்றோம்

கண்முன்னே நிற்பவர் யார்?
சென்றமுறை கொண்டுவந்த பொய்மூடை
பன்மடங்கு பெரிதாக்கி
கொள்கை அடகுவைத்து,
கொள்ளையடிப்பதற்குக் கூட்டுச்சேர்ந்து
வந்து நிற்கும் - அரசியல்
வர்த்தகரை உற்றுப்பார்!

எதிரியை ஏமாற்ற உருமறைப்புச்
செய்யுமுறை
எங்கட்குப் புதிதல்ல.
பரப்புரைக்குள் உருமறைத்து - பவ்வியமாய்
கூனிக்குறுகி நிற்கும் வேட்பாளர்
கொண்டு வருவது பழையகள் - அதனை
மொண்டு வருவது புதுமொந்தை
உண்டு மயங்காதீர்!
சென்று உம் சோலி பாரும் - அன்றேல் நன்று
தூங்கும்!

**-உதயன்-**

# பணிதவம் பொங்கல் நாளில்

சென்னிற உதிரம் தன்னை
சிந்திடும் வியர்வை யாக்கி,
நெல்மணி விளைவிற்காக
நீரெனப் பாய்ச்சி நிற்பாய்
உன்னையே உரமதாக்கி,
உலகினுக் குணவை யூட்டும்,
அன்னையாம் உழவ, நீயே
அவனியின் ஆணிவாய்!

வைகறை எழுந் துழைத்து,
மைம்மலில் வீடு சேர்வாய்,
வெய்யிலும் மழையும் உன்தன்
மேனியில் தாங்கி நிற்பாய்,
கைகளும் காலும் தான் நீ
கண்டதோர் மிச்ச மன்றி,
உயந்நிலை உனக்கெந் நாளோ,
உழவர்க்கு உயர்வு என்றோ?

ஏராளன் பின்னே செல்லும்
இவ்வுல கொன்று பண்டை
நூலோர்கள் சொல்லிவைத்த
நுண்ணிய மொழியைப் போற்றி,
காராளர்வாழ்வு நாளை
மேலோங்க வேண்டி வெய்யோன்,
பாதார விந்தம் தன்னை
பணிதவம் பொங்கல் நாளில்.

**வே. இளையகுட்டி**
**புத்தூர்**
**[வலம்புரி. 15.01.2003]**

# அழிவின் மேல் எமது வாழ்வு

இரத்தநதி பாய்ந்தா லென்ன?
இளைஞர்கள் மாய்ந்தா லென்ன?
இந்நாட்டுப் பொருளா தாரம்
இறங்கு நிரை சென்றா லென்ன?
புத்தனுரைத்த அன்பு போதனை
புறக்குடத்தில்
விட்டநீர் ஆனா லென்ன?
விடுவோமா இலட்சியத்தை?

அதிகாரக் கதிரை தன்னில்
அமர்ந்து அநுபவிக்கும்
அதி உயர் இலக்கு எய்த
எதையுமே செய்வோம் நாங்கள்
அழிவு சிதைவு பற்றி
கவலைகள் எமக்கு இல்லை
அரசியல் வாதி நாங்கள்
அழிவின்மேல் வாழ்வமைப்போம்
அடுத்த எம் தலைமுறைக்கும்
குவித்திடும் வழி சமைப்போம்

**வீரகேசரி 11.05.2003**

# இனியொரு கால் பிறப்பெடுப்பீர்!

ஈராயிரம் ஆண்டு முன்னே "இரட்சிக்க" வந்தவரே - மனித
மீட்சிக்காய் அஹிம்சை வழிப் போராட்டம் சொன்னவரே!
பாராளும் மன்னர்மனை, பணம் படைத்தோர் செல்வ இல்லம்
யாதேனும் தேடாது,
வேர்வை சிந்தும் உழைப்பாளி யோசிப்பின் மனைவயிற்றில்
பார்போற்றக் கருக்கொண்ட பராபரணின் தூதுவரே!

உம்வரவும் போதனையும் உணர்த்துகின்ற தத்துவங்கள்
ஒன்றிரண்டா? ஆனாலும்
போதனைகள் யாவும் புறக்குடத்து நீராகப் போனதையா!
பாமரரும் புரிந்துணரும் பான்மையிலே நீர் சொன்ன - கற்
பாறையிலே வீழ்ந்த விதைக் கதையின் தத்துவமும்
மானிடரின் மனப்பாறை மீதினிலே
வேரூன்ற மாட்டாது வீணாகிப் போனதையா!

கெட்டவன் என்றுமே கெட்டவனா யிருப்பதில்லை
கொட்ட மடங்கி ஓர் நாள் குணவானாய் மீள்வன் என்ற
தத்துவத்தைக் கூறும் தகுந்த உவமையென
"தந்தையும் இருமகனும்" என்ற கதை சொன்னீரே1
இன்றைய சமூகமதை ஏற்கிறதா? - இல்லையில்லை.

"ஒரு கன்னம் அறைந்தார்க்கு மறுகன்னம் கொடு" என்ற
உயர்வான தத்துவத்தை தவறாகப் புரிந்தவர்கள்
கன்னத்தில் கொடுப்பதற்கு கங்கணம் கட்டுகின்றார் .

கருணையின் திருவுருவே, கன்னிமரி பொக்கிஷமே!
மதமென்ற வட்டத்துள் முடங்காது,
மனிதமெனும் பெரும்பரப்பு வெளிநின்று வேண்டுகின்றேன்.
சிலுவை, பிறை நீறு என்னும் சின்னங்கள் பலவெனினும்
இறையியல்பு ஒன்றென்ற உயர்கருத்தை
இனியொருக்காய் பிறப்பெடுத்து இடித்துரைப்பீர் யேசுவே!

**ஈழநாடு 25.12.2004**

# எட்டில் இயல்புநிலை எட்டிடுமா?

ஆறில் அனுபவித்த அல்லல் எல்லாம்
ஏழில் மறையுமென எதிர்பார்த்தோம்
ஏழுமோ இழவோசை தந்துவிட்டு,
எப்படியோ நத்தையென நகர்ந்து செல்ல,
எட்டுவந்து சேர்கிறது எதிர்பார்ப்பு ஏராளம்

சென்றுவிட்ட இருபத்து ஆண்டுகளில்
சேதங்கள் வரைபடத்தில் ஏறுமுகம்
சோதிடர்கள், ஆன்மீக ஞானியர்கள்,
சொக்கு மொழி வேசிறிகர் அரசியலாளர்
கூறுகின்ற எதிர்வுகளை ஊடகங்கள்
குளிரவைக்கும் செவிகளையும் கண்களையும்
ஏதுமே நடக்கவில்லை என்ன செய்வோம்!

எட்டே வா! உன்னாலே எட்டிடுமா இயல்பு நிலை?
இதயங்கள் சுமக்கின்றன இன்னல்கள் இறங்கிடுமா?
இலவுமரக் கிளியாக எங்கள் கதை தொடர
ஏமாற்றம் தந்து உன்தன் முந்தையர் போல் செல்லுவையா

(01.08.2008 உதயன்)

# எழுவீர்; மீண்டும் துயில்வீர்

கனவுலகில் எம்மை விட்டுச் சென்ற கனவான்,
கனவு கலைக்க வருகின்றார்; எழுந்திடுவீர்!
துயில்கொள்ள நான்காண்டு விட்டு,
எங்கோ தொலைந்தவர்,
இதமான பூபாளம் பாடி
எமையெழுப்ப வருகின்றார் - எழுந்திடுவீர்!

"இவரா அவர்" என்று மலைக்காதீர்
இவரேதான்
இருசுற்றுப் பருத்துவிட்டார் - எப்படியோ
எமை ஏய்த்து, தமை வளர்த்த
தடியான உடல் தாங்கி வருகின்றார்.

புதிதாக மூடையொன்று சுமந்து வருகின்றார்
அதற்குள்,
"எது உண்டு?" என்று குடையாதீர் - நேரம் வீண்
பொய்ம்மைக்கும் புழுகுக்கும் புதிய மெருகூட்டி
எம்மை மயக்க வருகின்றார்.

நான்காண்டு முன்னே "தேனாறு பாயும்
நமக்குன்தன் புள்ளடியைத் தந்துவிட்டால்" - என்று
பேனாவும் நாவும் பிரச்சாரம் செய்ய,
நாவூறி நிற்கவைத்த நாயகனார் வருகின்றார்.

கற்பனையில் எம்மை மிதக்கவிட்டு - அதிகாரக்
கதிரைக்குச் சதுரங்கம் ஆடும்
அற்புத விளையாட்டுக் காட்டி
ஐயா வருகின்றார்
தப்பாது வாக்களிக்க எழுவீர் - அதைத்
தந்துவிட்டு மீண்டும் துயில்வீர்!

**உதயன் 15.02.2004**

# கதிரவனைப் போற்றிடுவோம்

வைகறையில் துயிலெ ழுந்து
மைம்மல் வரை உழைப்பீந்து
வயிற்றுத் தீ ஒட்டு கின்ற
வயலு ழுவோன் மனம் பொங்க

பனி வெய்யில் பார்க்காது
படும் துன்பம் நோக்காது
வியர் வைக் குளிப் பாடும்
விவ சாயி மனம் பொங்க

வினாக் குறியாய் வளைந்த உடல்
விரக் தியினால் வரண்ட மனம்
தனக் கெனவே ஏது மில்லா (து)
உழைப்போனின் மனம் பொங்க

" என்று யரும் எம் வாழ்வு"
எனவேங்கும் ஏர் பிடிப்போன்
கன்று மனம் களித் திடவே
கதிர வனைப் போற்றிடுவோம்!

**உதயன் 15.01.2003**

# கல்கியாய் அவதரிப்பாய்

வாமனன் வராகம் கூர்மம்
வடிவினில் நரன்சேர் சிம்மம்
மீனொடு பரசுராமன்
ஏர்ப்படை பலராமன்
தேவகி மைந்தன் கண்ணன்
சூரிய குலத்து ராமன்
ஆகவே நவமாயப் பூவில்
அவதரித்திட்ட மாலே
பூமியில் அதர்மம் ஓங்கி
புண்ணியம் புதைந்து எங்கும்
கொலைகளும் காமமீறல்
குதறலும் மலிந்து நாளும்
ஆட்சி நெறி பிறழ்ந்து
அராஜகம் பெருகி நீதி
நெறிமுறை ஒழிந்ததாலே
நீயிங்கு அவதரிப்பாய்
வெள்ளைப் புரவிதன்னில்
கல்கியாய் இலங்கை மண்ணில்
விரைந்து வரவேண்டுமையா
வீழ்த்துவாய் கொடுமை யெல்லாம்!

-உதயன்-

# அக்டோபர் ஆறில் ஐய வினாக்கள்

வேலிக்கு எல்லையிடல் வீட்டிற்க; நாளெடுத்தல்;
பூப்படைந்த பெண்ணுக்கு நீர்வார்க்கும் தினம்பார்த்தல்;
கூட்டத்தில் கொடியேற்றல்; குத்து விளக்கேற்றல்;
நாள்க்காசு போடல்; நாள்விதைப்பு மணிதூவல்;
கண்டா மணியின் முதலோசை தானெழுப்பல்;
கணவன் மனைவி பிரிவைச் சரிப்படுத்தல்;
கல்யாணக் கலப்புக்கு முதற்செம்பு தான்பெறுதல்;

சங்கக் கடைத்தலைவர்; தர்மகர்த்தாச் சபைச்செயலர்;
தம்முள் முரண்பட்டுத் தடியெடுத்துச் சண்டையிடும்
சண்டித் தனத்தை சமாதானம் செய்துவைத்தல்;
இன்னும் இன்னும் எத்தனையோ அத்தனைக்கும்!

"சட்டம்பி யின்றிச் சமூகம் இயங்காது"
என்ற நிலை அருகுதற்கு எவர் பொறுப்பு?

சட்டம்பித் தொழில் செய்வோர் சமூகத்தில் பெருகியதா?
சம்பள அதிகரிப்பால் உருவான அழுக்காறா?
சமூகம் தனக்களித்த தலைமைப் பொறுப்புக்களின்
நம்பகத் தன்மையை நலிவடையச் செய்தமையா?
அக்டோபர் ஆறில் அனைத்துத் தரப்பார்க்கும்
அந்நாளின் சட்டம்பியின் ஐய வினாக்களிவை!

**உதயன் 06.10.2001**

# யாரோ இவர் யாரோ?

தோளில் மூடை சுமந்தொருவர் வருகின்றார்
யாரென்று பாருங்கள்; யாதென்று கேளுங்கள்
"வாருங்கள்" என நாங்கள் வருந்தி அழைக்காத
போதிலும் வாயெல்லாம் பல்லாக இளிக்கின்றார்.

எண்சாண் உடம்மை இருசாண் ஆக்கி
கூனிக்குறுகி கும்பிடு போடுகிறார்
கொட்டிலில் நுழைகின்றார்; "கூழுண்டா" என்கின்றார்
கட்டியணைத்தெமக்காய் கண்ணீர் வடிக்கின்றார்
பட்டதுயர் போதும் இனிப்
படுந்துயர் உமக்கில்லை யென்றார்
தட்டிப் பழங்கதிரை நாமளிக்கு முன்பே
தரையில் அமர்கின்றார்
ஆளைத் தெரியாமல் அகல விழிக்கையிலே
மூடை அவிழ்கின்றார்; மூடைக்குள் பல மூடை
பொய்மூடை ஒன்று; புழுகில் ஒரு மூடை
வண்ணக் கனவில் எம்மை மயக்கும் ஒரு மூடை
வருங்காலம் சொர்க்கம் என
எண்ண வைக்கும் ஒரு மூடை

இத்தனை சுமந்து எம்வீடு வந்தவரை
இப்போது புரிகிறதா?
இவர் ஒரு வேட்பாளர்

-உதயன்-

## " சமூகக்கவிக்கடமை"

நிலவினையும் நீண்டகடல் அலையினையும்,
நீள்விழியாள் எழிலனையும்,
நிலைமறந்து பிதற்றும் காதல் மொழியினையும்
சந்தம் பிசகாது தங்கத் தமிழிலே
சங்கம் முதற்கொண்டு சமகாலப் புலவர் வரை
தந்துவிட்டார்.

"இங்கிதற்கு ஈடு உண்டோ" எனச்சுவைத்து,
மென்று மென்று தின்று, மேடையலங்கரித்து,
பட்டி மன்றம், நீதிமன்றம், ஆய்வரங்கம் என்று
சத்திரசிகிச்சை செய்து, சலித்துவிட்ட இந்நிலையில்
கவிதைத்தலைப்புக்கு தவியாய்த் தவிக்கையிலே

"காலத்தின் கண்ணாடி கவிதை" எனும் ஞானம்
பேனாவில் ஊற்றெடுக்க, நாற்றிசையும் நோக்குகின்றேன்

கண்ணுறுத்தும் காட்சிகளை, கருத்திற்புகுந்து
உள்ளுறுத்தும் நிகழ்வுகளை,
ஒன்று திரட்டி, ஓர் தலைப்பில் கவியெழுத,
எண்ணினேன்; ஈதோர் கவிக்கடமை

உணர்வினை மழுங்கடித்து உண்மையினைப்புதைத்து,
திறமைகளைப் பின்கதவுத் திரைக்குள் மறைத்து,
தலைமைகள் தங்கள் நிலையுயர்த்த,
தரும்போலி நாடகத்தின்,
திரைவிலக்கி, உண்மை முகம் வெளிக்க,
சிலவரிகள் எழுதிடுவேன்.

ஆறாண்டுக் கொருமுறை எம்வாழ்வை அடகுவைக்கும்,
நாடாளுமன்றத் தேர்தல் நடக்கையிலே மன்னார்களாய்,
அதிகாரக் கதிரை அமர்ந்தபின் - மிளகாய்
அரைக்கத் தலைகொடுக்கும் அம்மிகளாய்,
நிலைமாறும் வாக்காளர் பரிதாப நிலை கூறி,
கவிவரிகள் எழுதிடுவேன்

அம்புலி அளந்தார்; அகிலமெல்லாம் இணையத்தால்
ஒன்றிணைந்தார்; "றோபோ"வை ஏவி வினைமுடித்தார்;
எங்கோ இருந்து இங்கிருக்கும் நோயாளி இதயத்தில்
அறுவைசிகிச்சை இயற்றுகிறார்.
எம்மவரோ.. கிரகநிலை, கைரேகை, எண்கூட்டு

எடுத்தாய்ந்து, இதுவேதான் உயர்வுக்கு வழியென்பார்.
இந்தநிலை மாற்றுதற்கு எழுச்சிமிகு கவிஞர்கள்
ஏதேனும் இயற்ற வேண்டாமோ?
இதற்காக இரண்டு வரியெழுதி, அறியாமை
இருளோட்ட எழுதிடுங்கள்!

அரசுகள் மாற்றமாக, அடிப்படைக்கல்வி மாற,
"புதியன" என்று புற்று ஈசலாய் நூல்கள் தோன்ற,
சிறிசுகள் முடியைப் பிய்க்க "சிலபஸ்" கள் சிக்கலாக
"விதியிதோ!" என்று கல்வி விழுமியோர் ஏங்குகின்றார்.
அவர்துயர் தீர்ப்பதற்கு கவிஞனே எழுது - நாளை
விழுமிய சமூகமாக்கும் பெரும்பணி உனக்குமுண்டு

நாளைய சமூகந்தன்னை தாங்கிடும் தூணாம் பேனா;
தாளெனும் பூமிகீறும் ஏரதாம் உன்றன் பேனா;
ஆழமாய் வேர் பதித்த அவலங்கள் களையும் பேனா;
வாளதின் மேலாய்க் கூர்மை வாய்ந்தது உன்றன் பேனா;
ஆகையில் கொடுமை சாடி, அஞ்சிடா(து) எழுது தோழா!

**பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின்**
**பவளவிழாவில் சிறப்புப் பரிசு பெற்ற கவிதை.**

# செம்புல நங்கையை என்றுமே வாழ்த்துவம்

யாழ்குடா நங்கையின் குழல் தனைச் சீவி
நேர்வகிடு எடுத்தது போலொரு வீதி
யாழ் பரு.வீதி
வீதியின் மேல்பால் கீழ்பாலாக
விரிந்து கிடப்பது வலிகாமம் கிழக்கு

மேற்றிசை செம்மண் ஊரெழு உரும்பிராய்
கோவை நவக்கிரி அச்சுவேலியும்
ஆவரங்காலொடு அமைந்து பரந்த
பூமி தன்னில் புழுதிவீசினும்
பொன்னாய் விளையும்

நீர்வை சிறுப்பிட்டி இருவாட்டி மண்ணில்
சூல் கொண்ட கோதைபோல் தோற்றமளிக்கும்
வாழையினங்கள் ஈன்ற குலைகள்
வல்லை கடந்தும் - வண்ணாத்திய பால
எல்லை கடந்தும்
வலிகாமம் கிழக்கின் வருவாய் பெருக்கும்

கிழங்கு மரக்கறி வெங்காய மூடை
கனரக வாகன அணிதனில் ஏற்றி
தலைநகர் சென்று பணமலை குவித்த
இனிய நாட்கள் எண்ணிப்பார்க்க
அடடா..... அடடா.....

கீழ் பால் அமைந்த நீர்வை இருபாலை
புதுவை கிழக்கு ஆவரங்காலும்
நெல்லொடு பல்வகைத் தானியம் பெருக்க
தலைநகர் உணவு தடைப்பட்ட போதும்
உலைகள் கொதிக்கும்; உந்தி நிரம்பும்

மண்ணுடன் புரண்டு பயிர் வளர்த்தாலும்
கண்ணெனும் கல்வி கலாசாரத்
தொன்மை கொண்டது எம்வலி - கிழக்கு

உரும்பிராய் மண்ணின் பெருமை தன்னை
உலக அரங்கினில் நிலைபெறச் செய்த
அஞ்சா நெஞ்சன் அடங்காத் தமிழன்
சுந்தரனா ரொடு ஐந்து லிங்கங்கள்

கோவையூர் தந்த மூத்தவர் சீ.சீ.எஸ்
ஆட்சியாளரின் ஆலோசகராய்
டி.எஸ்" காலம் சிறப்புச் செய்த
கந்தையா மைந்தன் வைத்திய நாதன்

நைந்து கிடந்த பைந்தமிழ் ஏட்டினை
சொந்த நிதியில் நூலுருவாக்கி
செந்தமிழ் வளர்த்த சிறுப்பிட்டிச் சான்றோன்
சி.வை. என்று செல்லமாய் அழைக்கும்
தாமோதரனார்

புதுவை மைந்தன் சோமாஸ்கந்தனின்
அருள்நிறை வள்ளல் - இலவசக் கல்வி
பெறுவதற்காக
பயன்தரு நிலம்பல நிலக்கொடை செய்த
மிளிர்ந்து நிற்கும் சோமாஸ்கந்தத்
தாபகர் மழவர் மைந்தன் கந்தையா

நீர்வையூர் அயலொடு நிமிர்ந்தெழச் செய்த
கார்நிகர் வள்ளல் அத்தியார் அருணாசலம்

அச்சுவேலியூர் வைத்தியசாலை
செந்திரேசா மகளிர் வித்தியாலயம்
சொந்த நிதியும் நிலமும் கொடுத்து
தோன்றச் செய்த தோன்றலாம செனேற்றர்
"சேர்" எனும் சிறப்புடைச் சிற்றம் பலம் காடினர்

இன்னும் பல்லோர் ஒளிவிளக்கானார்
ஏந்திய தீபச் சுடர்தனில் எங்கள்
வலி-கிழக்கு என்றும் வளர்ந்து வளம்பெற
வாழ்த்துவோம் கூடி; வாழிய வாழிய!

**நன்றி: செம்புலம்**
**வலி கிழக்குப் பிரதேசப் பண்பாட்டு**
**விழாச் சிறப்பு மலர் 2008**

# ஆவரங்கால் மான்மியம்

ஆவினங்கள் நீரருந்த ஆங்காங்கு நீர்நிலைகள்
அவைமேனி தினவகற்ற உரோஞ்சு கால்கள்
தேதகசுமை நீங்கவென வீதியெங்கும் சுமைதாங்கி
தெருவோர நிழல்மரங்கள் தனை நாட்டி
"ஏதுமிலை எனவருவோர் நீளுகரம் நிறைவாக
இரங்கி யுளம் பொருளீயும் கொடையோர்மலி
தேவுலகை பூவுலகில் காண்பதற்கு நான்முகனார்
தெரிந்தமைத்த திருவூரெம் ஆவரங்கால்

தானியங்கள் மிகவிளைத்து தனம் பெருக்கி பசிநீக்கும்
தனவந்தர் வாழ்பதியாம் ஆவரங்கால்
தேன் நிகரும் தீங்கனிகள் சிந்துதுளி தாமருந்த
தேவர்களும் வாய்பிளக்கும் திவ்ய பதியாம்
வானிலைகள் மாறிவளம் வரண்ட நிலை வந்திடினும்
ஆழ்நிலத்து நீர் பெருக்கி அமுதூட்டும்
கூவல்மலி வளம்கொண்ட கோடையிலும் மாரியென
குளிரூட்டும் புகழூரெம் ஆவரங்கால்

மருதநில வளமெழுத கவிஞர்பலர் கருதிவரும்
அழகுநிறை அரும்பதியெம் ஆவரங்கால்
உருகுவெயில் உச்சியிலும் உழைப்பதுவே குறியான
உழவர்மலி திருநிறையும் பெருவூரிது
புகையிலை மரக்கறிகள் பழவகைவெங் காயமொடு
தலைநகர் தொடர்ந்து செலும் வாகனங்கள்
பணமலை நிறைந்துவர தனம் பெருகும் செழுமையுறு
புகழ்மலியும் செல்வபுரி ஆவரங்கால்

உளமுருகு திருமுறைகள் ஓதுகின்ற ஓசையுடன்
ஓங்கார மணியோசை ஒன்றுகலந்து
தொடருவினை மிடியகல நடராஜ ராமலிங்கன்
திருவடிகள் வீழடியார் சிந்துவிழிநீர்
தெருநிறைய ஆன்மீக நதிபெருக ஓடுவதால்
தேவுலகு நிதரும்பதி ஆரவங்கால்

**நன்றி : "சிவதலம் ஆவரங்கால்" – ஆவரங்கால் ஒன்றிய வெளியீடு**

# எங்ஙனம் மனிதம் வாழும்?

நாற்புற வேலி. முற்ற நடுவினில் முதிர்ந்த வேம்பு;
காற்றினை அள்ளவி வீச, கதிரவன் வெப்பம் தோன்றாக்
கீற்றினால் அமைந்த கொட்டில்; கிடங்கினுள் வியர்வை நீரை
ஊற்றியே வளர்த்த மாவும் உயர்தென்னை பலாவுமுண்டு

கொட்டில்கள் மூன்று, ஒன்றில் குரக்கனோ டொடியல் சாமை
கட்டிட ஆடுமாடு. கழிவுகள் விறகு போடும்
திட்டமோ டொன்று, மற்றும் தீன்வகை ஆக்கவொன்று
கட்டடக் கலைஞன் இல்லா(து) கட்டிய மனை ஈதாகும்.

நித்தியக் கூலி செய்யும் அப்பனின் காலத் தெங்கள்
சித்தத்தில் நீங்கா வின்பச் சிறுமனை புழுதிமுற்றம்
புத்துணர் வூட்ட வாழ்ந்தோம் புதுவகைப் பிணிகளில்லை
நித்திரை யின்றிப் பாயில் நெட்டுயிர்ப் படைந்ததில்லை.

கற்றையாய் காசுமில்லை; கடன்தொல்லை சற்றுமில்லை
பற்றுடன் அணைக்கும் அன்னை பாசத்தில் குழைத்து ஊட்டும்
சிற்றிலைப் பிட்டும் சோறும் சிலிர்த்திடும் தேகமன்று
இற்றைநாள் வாழ்வுஏனோ இதயத்தில் கனத்தை ஊட்டும்

உந்திக்கு உழைத்தால் போதும்; ஊரினைச் சுருட்டுகின்ற
சிந்தனை யின்றி வாழ்ந்த சிந்தையில் அழுக்குமில்லை
வந்திடும் உறவினோரை வாயெல்லாம் பல்லாய்க் காட்டி
வந்தித்த காலமஃது வசந்தமே அதுதான் அன்று.

இன்றிந்த வாழ்வு இல்லை; இதயத்தில் அன்பு இல்லை.
ஒன்றுக்குள் ஒன்றுமோதி ஒற்றுமை சிதைந்துபோகும்.
கன்றுடன் தாய்மை மோதும் காலத்தில் வாழுமெங்கள்
புன்சிரிப் போடு நாவில் புகன்றிடும் வார்த்தை போலி.

கூலியில் பசியைப் போக்கி, குறட்டையில் ஆழ்ந்த காலம்
வேலிக்கு முரண்டுறவை வெட்டிப் பகைத்ததில்லை
நாலிலோர் குளியும் தேறா காணியர் நமது சுற்றம்
காலின் கீழ் தூசாய் எண்ணக் காணுதே இந்தக் காலம்

"புதியன புகுதல்கால வகையினால் வழுவல" என்னும்
முதுமொழி நன்றே ஆனால், முழுமையும் மாறலாமோ?
முதியதும் புதியதும் முரணிலா நெறியில் செல்லின்
இதமுறு சமூகம் தோன்றும் இனித்திடும் மனிதவாழ்வு.

விரலுக்கு விஞ்சிவீங்கி, வேதனை தலையில் தாங்கி,
வரவுக்கு மேலாய் ஊரில் வாங்கியே செலவு செய்து ,
இரவினில் துயிலுமின்றி இங்கங்கு புரண்டுழல
குருதியின் அழுத்தம் மேலும் கூடுதல் காணுகின்றோம்

பொய்யுரை புனைதல்; தன்னைப் போற்றுதற் கெதுவும் செய்தல்,
மெய்யுரை புதைத்தல், மேலோர் சொல்லுரை மிதித்தல்,
கையறு நிலையார் கண்டும் காணாது இருத்தலாய
மையுறு மனித வாழ்வில் மானிடம் எங்கே வாழும்?

இராமனை அறியார் நூலில்; இராமனாய் வாழ்ந்தாரன்று
பாரதம் தெரியார்; தர்மன் பண்பினை உணர்ந்தாரன்று.
சோரமாய் நெறிபிறழ்ந்து சொகுசினை நாடும் இன்றை
ஈரமே இல்லா நெஞ்சில் எங்ஙனம் மனிதம் வாழும்?

**உதயன் வெள்ளி விழா- எழுத்தாக்கப்போட்டியில்**
**முதலாம் இடம் பெற்ற மரபுக்கவிதை**

# புதுவை, மணற்பகுதி புவனேஸ்வரி அம்பாள் மீது பாடப்பெற்ற பக்திப் பாமாலை (இறுவட்டு I) புதுவை புவனேஸ்வரி

**பல்லவி**

புதுவை மணற்பகுத புவனேஸ்வரி
கருணை புரிந்தெம்மை காத்திடும் ஈஸ்வரி

**அனுபல்லவி**

அருமை பெருமை அருள் ஆட்சி மகிமை தனின்
முழுமை உரைக்க எம்மால் முடிந்திடுமோ - புதுவை

**சரணம்**

அருளமுதை அவள் அள்ளிச் சொரிகையிலே
இருளகலும் மனம் இன்பத்தின் எல்லைபெறும்
மருள்தரு வாழ்வகன்று மாண்பு நிலை பெருகும்
தெருள் நிலை தோன்றியே தெய்வகுணம் பெருகும் - புதுவை

நிலவளம் நீர்வளம் நிறைந்த புதுவைதனில்
அருள்மழை பொழியும் எங்கள் அன்னை புவனேஸ்வரி
கரமொன்று வரம்தரும் காக்கும் அபயகரம்
பரிவுகரம் எம்மை பாசத்துடன் அணைக்கும் - புதுவை

# குடமுழுக்கு

**பல்லவி**

புவனேஸ்வரி அம்மையின் குடமுழுக்கு - இது
பவரோக வினைமாளும் திருமுழுக்கு

**அனுபல்லவி**

அருள்மாரி பொழியும் அன்னை அருள் முழுக்கு
அடியார்கள் உளமுருக்கும் பெருமுழுக்கு

- புவனேஸ்வரி

**சரணம்**

வகையான தைலங்கள் சாத்திடுவோம் - மனச்
சுமையாவும் அவளடியில் தீர்த்திடுவோம்
இனிதான பழமோடு பால்தயிர்தேன் - அவள்
சிரமீது சொரிந்தாயே தீரும் கலி

- புவனேஸ்வரி

நிறைவான உளமோடு நீர்நிறைத்து - அவள்
திருமேனி மூழ்கும் திருக்காட்சியிலே
கனமான உளம்மாறி காற்றெனவே - மிக
சுகமாக பறக்குதருள் ஆட்சியிலே

- புவனேஸ்வரி

வேதியர்கள் ஓடுதிடுவார் அவள் பெருமை - நல்ல
தீப ஒளி காட்டிடுவார் சிலிர்த்திடும் மெய்
மாருதம் வீசிடுவார் சாமரையால் - அன்னை
மனமகிழந்து அருள்தருவாள் சகலசுகம்

- புவனேஸ்வரி

## தானியங்கள் மிக விளைந்து.....

**பல்லவி**

தானியங்கள் மிகவிளைந்து தனம்பெருகும் புதுவையிலே
பாவைபுவ னேஸ்வரியாள் பார்வையிலே குளிர்தருவாள்

**அனுபல்லவி**

காலையிளம் கதிரொளியில் கனகமென விளங்கிடுவாள்
கீழ்த்திசையில் வீற்றிருந்து நாள்முழுதும் காத்தருள்வாள்
- தானியங்கள்

**சரணம்**

வானிலைகள் மாறிநிலம் வரண்டாலும் அவளருளால்
நீர்நிலைகள் காய்வதில்லை நெல்மணிகள் ஓய்வதில்லை
தேன் நிகரும் கனிவகைகள் தென்னையொடு பால்வளமும்
நாவினிக்க ஈந்திடுவாள் நாயகி புவனேஸ்வரியாள்
- தானியங்கள்

பைரவனும் கணபதியும் பாலமுருககையனுமே
பரிவார மூர்த்தமுடை பாவைதனைத் தோத்தரித்தாள்
வைர மனம் மென்மைபெறும் வஞ்சநிலை தான்மறையும்
உருகியவள் தாள்பணிந்தால் ஊருலகம் உய்வுபெறும்
- தானியங்கள்

## அன்னை புவனேஸ்வரியே

**பல்லவி**

அன்னை புவனேஸ்வரியே அகிலாண்ட நாயகியே
உன்னை நினைந் தேத்துகின்றேன் ஓடிவந்து காத்திடம்மா

**அனுபல்லவி**

சென்னியிலே கரம்குவித்து தேவியுன்னைத் தோத்தரித்தால்
கன்னம்வழி நீர் சொரிந்து கால்கள் தடுமாறுதம்மா
- அன்னை

**சரணம்**

பாவலரும் நாவலரும் பக்த அடியார்களுடன்
பாரமரும் பேதமின்றி தேவியுனை கூவியழ
நாயகியே உன்செவியில் ஓசைவந்து வீழலையோ
ஆவிநிகர் ஈஸ்வரியே நாடிவந்து காத்திடம்மா
- அன்னை

நாமம் பல பூண்டவளே நானிலத்தின் நாயகியே
நாதசொரூபன் அடிநாதமாய் ஆனவளே
வேதங்களின் உட்பொருளாய் விரவி நிறைந்தவளே
வித்தகியே பத்தினியே உத்தமி விமலினியே
- அன்னை

# செம்மை நிறத்தாள்

**பல்லவி**

செம்மை நிறத்தாள் அவள் எம்மையணைப்பாள்
இம்மையிலும் மறுமையிலும் நன்மையளிப்பாள்

**அனுபல்லவி**

வெம்மையிலும் தண்மைதரும் வித்தகியாம் - அவள்
வேண்டும் வரம் ஈர்ந்திடும் உத்தமியாம்

- செம்மை

**சரணம்**

பாவை புவனேஸ்வரியின் பதமலர்கள் - தினம்
தேமலர்க் தூவிநிதம் போற்றிடுவோம்
பாவவினை வேரறுமே தூயபுதுவாழ்வு வரும்
தேவியவள் திவ்யவரம் நாடிவருமே

- செம்மை

தீபஒளியில் அவள் தேசுவிளங்கும் - நறும்
தூபமதில் மேனியெலாம் சிலிர்த்து நிற்றும்
நாமம்பல கூறிடுவார் பாவம்பல தொலைத்திடவே
தேவியவள் வீதியுலா நாடிவருவாள்

- செம்மை

# சங்கீதம் உன் அசைவின் சனனம்

**பல்லவி**

சங்கீதம் உன் அசைவின் சனனம் அம்மா - இசை
சந்தமும் லயமும் நீ தந்த தம்மா

**அனுபல்லவி**

எங்கும் நிறைந்திடும் ஈஸ்வரியே - சிவ
ரஞ்சனியே நாவில் நடமிடுவாய்
- சங்கீதம்

**சரணம்**

நாகமணிந்து நடமாடும் சிவனின் ஒரு
பாகம் அமர்ந் தருளும் பார்வதியே
வானம் வரண்டுமழை காலம் தவறிடினும்
ஆனந்த பைரவியின் அருள்மழை ஓய்ந்திடுமோ
- சங்கீதம்

கல்லெனக் மனங்களை கனியவைப்பாய் - நல்ல
கரும்பென செவிதனை குளிரவைப்பாய்
மெல்லெனப் பாய்ந்திடும் நீரலையாய் - நான்
கல்யாணி இசைத்திட கருணைசெய்வாய்
- சங்கீதம்

அமரர்கள் ஓலம் உன் தன் செவிதனில் வீழகூர்
வைரவேல் முருகன்தனை சமர்க்களம் போக்கினாய்
உருகிநான் பாடுமோசை உன்செவி கேட்கலையோ
பைரவி மௌனம் ஏனோ பராமுகம் நியாயம்தானோ
- சங்கீதம்

## நாமங்கள் பலவாய்

**பல்லவி**

நாமங்கள் பலவாய் நாவழைத்தானும்
நாயகி ஏகமாய் ஆனவள் நீயே

**அனுபல்லவி**

காரணத்தால்பல பேர் படைத்தாலும்
பூரணி நீயே புவனேஸ்வரியே

- நாமங்கள்

**சரணம்**

வேதங்கள் போற்றிடும் வித்தகி நீயே
நாதவினோதினி நாரணன் சோதரி
நீதிநியாயம் பூவில் நிலைத்திட
நிறைவுடை வாழ்வு தருபவள் நீயே

- நாமங்கள்

ஆதி அந்தம் இல்லா அருளொளி நீயே
நாதவினோதன் நாயகி நீயே
பூதலம் காத்திடும் பூரணி நீயே
புதுவை நிறைந்த புவனேஸ்வரியே

- நாமங்கள்

## அம்பாளின் அருள்மழையில்

**பல்லவி**

அம்பாளின் அருள் மழையில் நனைந்திடுவீர் - தினம்
அல்லல் அகன்று மனம் மகிழ்ந்திடுவீர்

**அனுபல்லவி**

அங்குசம் ஏந்தி மன ஆணவமலம் அழிக்கும்
அன்னை புவனேஸவரியாய் அருள்வாடி வெடுத்த
- அம்பாளின்

**சரணம்**

புதுவை மணற்பகுதி படலைத்தலம் அமர்ந்து
வறுமை பிணியினொடு வஞ்சமனம் அகற்றி
பெருமை நிலைக்கும் இனபப் பேறுடை வாழ்வு பெற
புவனேஸ்வரி வடிவாய் புவனம் புரக்கும் அன்னை - அம்பாளின்

கவின்பெறும் உடலோடு கருணை உளம்பெறவே
கலைகள் பலபயின்று களிப்புறு வாழ்வுபெற
மலையெனத் துயர் எம்மை மண்டி வரினும் நிலை
குலையாத மனம்பெற கூப்பிக் கரம்குவித்து
- அம்பாளின்

புதுவை மணற்பகுதி புவனேஸ்வரி அம்பாள்
இசைத்தமிழ்ப் பாமாலை
(இறுவட்டு II)

# கணபதி என்றும் குணநிதி

**பல்லவி**

கணபதி என்னும் குணநிதி எம்மை
கணமும் கைவிட மாட்டான்

**அனுபல்லவி**

தினமும் அவன்பதம் தேமலர் தூவி
புனித மனமொடு பூசிப்போம் தினமே
-கணபதி

**சரணம்**

தித்திக்கும் பட்சணம் எத்திக்கும் மணக்க
திருவடி சாத்திட புளகம் அடைவான்
நற்கதி தருவான் நாயகன் கணபதி
எக்குறையும் அணுகா எமக்கேன் சஞ்சலம்
-கணபதி

வெம்பிடும் நம்பி தந்த நிவேதனம்
உண்ட கணபதி உறையும் தலந்தனை
சென்று வணங்கிடில் சிந்தை தெளிந்திடும்
முந்தை வினையறும் முழுமை பெறும் வாழ்வு
-கணபதி

# தாயே தமிழே

**பல்லவி**

தாயே என்தமிழே என்னுயிரே
தரணியில் நிகரில்லாதனிமொழி நீயே

**அனுபல்லி**

மூவேந்தர் மடிமீது வளர்ந்தாய் நீயே
மூன்று தமிழாக மிளிர்ந்தாய் நீயே

- தாயே என்

**சரணம்**

பாவேந்தர் மனங்களிலே குடியிருப்பாய் நீ
பண்ணிசைக்கும் நாவினிலே நடம்புரிவாய் நீ
பாதங்கள் ஆடிடவே லயமளிப்பாய் நீ
பல்கலைகள் யாவிலுமே உறைந்திருப்பாய் நீ

- தாயே என்

பாரெங்கும் குறள் மணக்கும் உன்னாலே
பாதச்சிலம் பொலிக்கும் உன்னாலே
தேகம் சிலிர்க்கவைக்கும் இராமகதை
சிந்தை இனிப்பதுவும் உன்னாலே

- தாயே என்

அகத்தியம் முதலான இலக்கணங்கள்
அழகுசெய் இளையவள் நீதானே
முதுமையுறாய் புதுமை நானெழுத - என்
எழுதிடும் கோலினிலே இருந்தருள்வாய்

- தாயே என்

# சக்தி நீ

**பல்லவி**

தில்லைக் கூத்தனின் சிந்தை நிறைந்த
வல்லவளே சக்தி வடிவழகி

**அனுபல்லவி**

எல்லையில்லா உன்தன் அருளமுதை - நான்
அள்ளிப் பருகிட உன்அரு கணைப்பாய்
-தில்லை

**சரணம்**

நாதன் சிவனின் திருப்பாதம் வருடிமகிழ்
நாயசி உமையே என் தாயவளே
ஊனுருகி உள்ளம் உணர்விழந்து உன்னை
நானழைக்கும் ஓசை கேட்க வில்லையோ
- தில்லை

அசைந்திடும் சக்தி நீ ஆடிடும் சக்தி நீ
இசைதனில் கலந்திடும் இனிமையின் சக்தி நீ
வசையும் புகழும் தரும் வாட்டம் மகிழ்வுமுன்
நிறைவுடை சக்தியல்லால் பிறிது முண்டோ அம்மா
- தில்லை

# முருகனின் திருமுகம்

**பல்லவி**

முருகனின் திருமுக தரிசனம் கிடைத்தால்
சருகும் தளிர்த்தெழும் சஞ்சலம் நீங்கிடும்

**அனுபல்லவி**

அருள்பொழி யும் பன்னிருகரம் சுரந்தால்
இருளகலும் மனம் இன்பத்தில் மலர்ந்திடும்
-முருகனின்

**சரணம்**

சரணவப் பொய்கையில் மூழ்கியெழுந்திடில்
சகல பிணி களுடன் மிடிமைய கன்றிடும்
தொடர்வினை வேரறும் தொல்லை தொலைந்திடும்
தினமவன் பதமலர் தியானம் செய் வாய் மனமே
- முருகனின்

# நான்கு கரமுடைய நாயகியே

**பல்லவி**

நான்கு கரமுடைய நாயகியே புதுவை
தாயவளே புவன ஈஸ்வரியே

**அனுபல்லவி**

வீண்பயம் கொள்ள விடலாமோ - நீ
விட்டு விட்டால் எனக்கு துணையேது
- நான்கு கரமுடைய

**சரணம்**

நெஞ்சம் நடுங்கி மனம் வெம்பிடும் வேளையிலே
அஞ்சலென்றே உன்தன் அபயகரம் தருவாய்
விஞ்சிடும் ஆணவ மாயமலம் அகற்ற
அங்குசம் ஏந்தி என்னை ஆண்டிடுவாய்
- நான்கு கரமுடைய

நேசம் நிறைந்த மனம் நீ தருவா யம்மா
நிறைவுடை வாழ்வுபெற அருள் புரிவாய்
நாசம் மலிந்தழியும் தேசமெல் லாமுன்
பாசகரம் நீட்டி பரிவு செய்வாய்
- நான்கு கரமுடைய

அனவரதுமும் உன்னை வேண்டி நின்றோம்
அனந்த உயிர்களையும்ஆள்பவளே அம்மா
நிரந்தர இன்பமும் நிம்மதியும் பெற
வரதகரம் காட்டி அரவணைப் பாய்
-நான்கு கரமுடைய

# எத்தனை நாமங்கள் உனக்கு

**பல்லவி**

ஈஸ்வரி நாமங்கள் எத்தனை உனக்கு
இருந்தா லும்புவன ஈஸ்வரிக் கிணையேது


**அனுபல்லவி**

நாமங்கள் பலவாக ஆலயம் அமைந்தாலும்
நானிலத்தில் புதுவை ஈஸ்வரிக் கீடேது
-ஈஸ்வரி நாமங்கள்

**சரணம்**

பரமனின் பாகம்அமர் பரமேஸ்வரியே
ஜெகந்தனை புரந்திடும் ஜெகதீஸ்வரியே
விமலமனம் தரும் விமலேஸ்வரியே
உலகில் உன் நாமங்கள் ஓதி முடியுமோ
-ஈஸ்வரி நாமங்கள்

பாவமோ டிசைத்திடும் பாகேஸ்வரியே
லோகமெலாம் ஆளும் லோகேஸ்வரியே
ஞானம் தரும் இறைவி ஞானேஸவரியே
யோகமெலாம் அருளும் யோகேஸ்வரியே
- ஈஸ்வரி நாமங்கள்



# நன்றிகள்

பவளக் கலசம் நிறைப்பதற்கு
பெறுமதி மிக்க பவள மணிகள்
வழங்கிய அனைத்துத்
தரப்பார்க்கும் உளமார்ந்த
நன்றிகள்

"ஸ்ரீ ரஞ்சினி" வெளியீட்டகம்
மணற்பகுதி
புத்தூர்.



NOBLE printers, Jaffna. 021 2220386.